
கல்கி
KALKI 11-4-1976 ■ 75 காசு
அடுத்த இதழில்:
அரும்பு அம்புகள்
அமரர்
கல்கி


ஆடையில்
பெண்மையின்
இழையோடும் போது
பெண்மைப் பேரழகு
புன்னகை புரியும்!
நிச்சயமாக, மஃபத்லால் க்ரூப்
அளிப்பவை நேர்த்தியான
துணிமணிகள்தான்!
MAFATLAL
GROUP

TM



கல்கி

ராக்ஷஸ, பங்குனி 29

ஏப்ரல் 11, 1976



உழைப்பாளர்

நாங்கள் ...
சித்திரங்களால் வெறுக்கப்படும்
சுவர்கள்!
அரண்மனைகளால் அலட்சியப்படுத்தப்படும்
அஸ்திவாரங்கள்!
கண்களால் துன்புறுத்தப்படும்
இமைகள்!
பணக்கார மரங்களைப் பாரிலுயர்த்திய
ஏழை வேர்கள்!
எங்கள் குருதிப் பூக்கள்
வியர்வைச் சாறுகளாய்ப் பிழியப்படுகின்றன.
நாங்கள் லாடங்கள்!
தெய்வந்தான் எங்கள் லாபங்கள்!
நீங்கள் நிமிரவே
நாங்கள் குனிந்தோம்!
இன்றும் நாங்கள்
நிமிரவே இல்லை!

— கோவல் பக்தசேகர்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளிலுள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பம்பாய், பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்டின் பப்ளிசிட்டி ஆபீஸர் ஸ்ரீ B.S. அய்யர் அவர்களின் மருமானும், தென்காசி கனரா பாங்க், மானேஜர் ஸ்ரீ K. சுப்பிரமணியன் அவர்கள் குமாரத்தியுமான சௌ. **ஜெயா** B.A.க்கும், சிரஞ்சீவி **பாலசுப்பிரமணியன்** B.A.க்கும் 26-3-76 அன்று தென்காசியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் வரவேற்புக்கும் ஏராளமான உறவினர்களும் நகரப் பிரமுகர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்

ஸாண்டல்வுட் நைஸில்*

உங்கள் மேனியைப் பாதுகாக்க இதனினும் சிறந்த டால்க் இல்லை—அதுவும் இத்தனை சிறந்த நறுமணத்துடன்.

ஸாண்டல்வுட் நைஸில்—இதிலிருந்து நீங்கள் பெறும் நன்மைகளை வேறு எந்த சாதாரண டால்கம் பவுடரும் தருவதில்லை. உங்கள் மேனிக்கு ஆண்டு முழுவதும் அருமையான பாதுகாப்புத் தரவல்ல விசேஷப் பொருட்கள் அடங்கியது நைஸில் ஒன்றுதான். துர்நாற்றம் வீசச்செய்யும் கிருமிகளைக் கொல்ல வல்ல குளோரா பென்ஸீன். வியர்வையை முற்றிலும் உறிஞ்ச வென்றே விசேஷ முறையில் உருவாக்கப் பட்ட இந்த பவுடர்—உங்கள் மேனி மீது அதிக நேரம் நீடித்து நிற்கிறது. சிந்தை குளிர்விக்கும் சந்தன மணம்...புத்துணர்வை உங்கள் மீது வாரியிறைக்கிறது.

மயக்கும் சந்தன மணம். நாளெல்லாம் நீடித்த புத்துணர்வு. ஆண்டில் 365 நாட்களும் புதுமை உணர்வு.





ஸாண்டல்வுட் நைஸில்*—உங்கள் மேனிக்கு உகந்தது

ஸாண்டல்வுட் **நைஸில்** நன்மருந்து குணங்களடங்கிய பவுடர் **க்ளாக்ஸோ** தயாரிப்பு

*டிரேடு மார்க்

மெய்வழிச்சாலை

கல்கி

மலர் 36

இதழ் 37

என்ன அழகான பெயர்?

தொடக்கமும் முடிவுமான சத்தியத்தை நாடிச் செல்லும் பாதை.

இத்தகைய அற்புதமான பெயரைக் கொண்ட ஊரில், எழிலார்ந்த சோலையில், புனிதமான ஆசிரமச் சூழலில் என்னவெல்லாம் அக்கிரமங்கள் நடந்து விட்டன!

புதைக்கப்பட்ட தங்கத்தையும் மறைக்கப்பட்ட நகைகளையும் வெளிக் கொண்டு வரத் தோண்டுகிறார்கள், தேடுகிறார்கள், இன்னும் முடியவில்லை.

''25 லட்சம் பெறுமானமுள்ள பொன்னையும் ஆபரணங்களையும் கண்டு பிடித்துள்ளோம். ஆனால் இது பதுக்கப்பட்டிருப்பதில் ஒரு சிறு பகுதியே; சோதனைகள் தொடரும்'' என்கிறார் மதுரை கஸ்டம்ஸ் கலெக்டர், திரு எம். எஸ். சுப்பிரமணியம்.

தார்மீகப் போர்வையில் நடந்த அநீதிகளை அம்பலப்படுத்திய அதிகாரிகள் அனைவரும் நமது பாராட்டுக்கு உரியவர்கள், வாழ்த்துகிறோம்.

திருச்சிக்குப் பக்கத்தில் மட்டும்தான் இப்படி ஒரு மெய்வழிச்சாலை என்பதில்லை; உலகில் இதுபோன்ற மெய்வழிச் சாலைகள் எத்தனை எத்தனையோ உண்டு!

ஜனநாயகம் என்றும் குடியரசு என்றும் ஜனநாயகக் குடியரசு என்றும் வர்ணித்துக் கொண்டு மக்களை அடிமைப்படுத்துகிற கம்யூனிஸ முறை ஆட்சி நிலவும் ஒவ்வொரு தேசமும் ஒரு மெய்வழிச்சாலையே.

மக்கள் குலத்தைக் காக்கவே அணு ஆயுதங்களைச் செய்து குவிக்கிறோம் என்று வல்லரசுகள் கூறுகின்றனவே, அதுவும் மெய்வழிச்சாலை விவகாரம்தான்.

இன்னும் சமீபத்தில் வந்தால் அரசியல் நோக்கங்களுக்கு வேறு காரணங்களைக் கற்பித்து எடுக்கப்படும் நடவடிக்கை ஒவ்வொன்றும் மெய்வழிச்சாலைப் போக்குத்தான்.

மக்களை மகிழ்விக்கவே படம் பிடிக்கிறோம் என்று கூறி ஆபாசக் குப்பைகளைத் தயாரித்தளிக்கும் படாதிபதிகள் மெய்வழிச்சாலையின் பரம சீடர்கள்.

புனிதமான ஆசார்ய சுவாமிகளின் வண்ணப்படத்தை அட்டையில் தாங்கி உள்ளே நியூவேவ் என்பதற்கு அர்த்தம் புரியாமல் அபத்தக் கதைகளை வெளியிடும் பத்திரிகைகள் மெய்வழிச்சாலை மார்க்கத்தையே கையாள்கின்றன.

ஏன், நீங்களும் நானும் கூட உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் போதெல்லாம் மெய்வழிச் சாலையில்தான் நிற்கிறோம்.

சில மெய்வழிச்சாலைகளில் சோதனை நடக்கிறது; வேறு சில மெய்வழிச்சாலைகள் லைசென்ஸ் பெற்று விடுகின்றன.

இல்லாத போனால் சுதந்திரம் பெற்று இத்தனை காலமாகியும் நாட்டில் மதுவிலக்கை அமல்படுத்தவோ லாட்டரியை ஒழிக்கவோ முடியாமல் போகாது.

அடுக்கிக் கொண்டே போக அவசியம் இல்லை. மெய்வழிச்சாலை ஓரிடத்தில் அல்ல, தேசமெங்கும், உலகெங்கும் பல உள்ளன என்பதை உணர்ந்தால் போதும்.

இவை எல்லாவற்றையுமே சோதனை யிட்டுச் சீர்திருத்திவிட நம்மால் முடியாமல் போகலாம். அதற்காக முயற்சியைக் கைவிடக் கூடாது. அணில் பணியாக முடிந்தமட்டில் முனைய வேண்டும்.

இதற்குரிய ஆன்ம பலத்தை எப்படி பெறுவது? நெஞ்சத் தூய்மையும் இறையுணர்வுமே அதை கொடுக்கக் கூடியன.

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயெனக் கும்பிடடி பாப்பா — பாரதியார்

சொத்துரிமை - நிச்சயமற்ற நிலை

பட்ஜெட்டுக்காக மட்டுமின்றி பட்ஜெட் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து கூறியுள்ள சில கருத்துக்களுக்காகவும் திரு சி. எஸ். பாராட்டுக்குள்ளாகிறார்.

''குறைந்த வரி விதிப்பு நேர்மையாக வரி செலுத்தத் தூண்டுதலாகும்'' என்றார். மேலும், பட்ஜெட்டில் சொத்து வரியில் சில சலுகைகள் காண்பிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு ''இந்தச் சலுகைகள் சொத்து சேகரிப்பதை வசீகரமாக்கும்'' என்று கூறினார். இதன் மூலம் அடிப்படையான பொருளாதார உண்மைகளை அவர் நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

தனி மனிதர்களிடம் சொத்து சேர்வது மாபாதகமான காரியம் அல்ல. அவை எந்த விதமாகப் பயனுகின்றன என்பதுதான் முக்கியம். ஊருணி நீராகப் பயன்பட வேண்டும் என்று ராஜாஜி வள்ளுவர் வாசகத்தை மேற்கோள் காட்டுவார். அப்படி பயனுகும் விதமாக அரசாங்கத்தின் கொள்கைகள் அமைய வேண்டும் என்பார்.

சொத்து சேர்ந்த பின்னரே அதனை நாட்டு நலனுக்கு உதவுகிற மாதிரி முதலீடு செய்ய முடியும். சொத்துரிமையே கூடாது என்று அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டால் உற்பத்தியைப் பெருக்குவதிலும் பொருளாதார மேம்பாட்டிலும் யாருக்குமே சிரத்தை இல்லாமல் போய்விடும். அயல் நாட்டு முதலீடுகள், உதவிகள் கிடைக்காமல் போகும். நாளடைவில் அரசுத்துறை நிறுவனங்கள் மட்டுமே ஏனோதானோவென நடக்கும்; அல்லது அச்சத்தினால் இயங்கும். அதாவது கம்யூனிஸ சித்தாந்தத்தில் சிக்கியதாகும்.

'சொத்துரிமை கிடையாது என்று அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப் போவதில்லை' என்று ஓர் அமைச்சர் கூடத் துணிந்து கூற முன்வரவில்லை. 'இப்போதைக்கு இல்லை' என்று மழுப்புகிறார் ஒருவர். 'சீக்கிரம் வரும்' என்று மிரட்டுகிறார் ஒருவர். 'அது பெரிய பண மூட்டைகளைத்தான் பாதிக்கும்' என்று அர்த்தமற்ற சமாதானம் சொல்கிறார் வேறு ஒருவர்.

ஆக மொத்தம் சிந்தனைக் குழப்பமும் நிச்சயமற்ற தன்மையும் நிலவுவது புரிகிறது. இது தேசத்துக்கு நல்லதல்ல.

இலக்கிய சிந்தனை

நவீன இலக்கிய அன்பர்கள் ஒவ்வொரு வருஷமும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை ஆவலோடு எதிர்பார்க்குமாறு செய்துவிட்ட பெருமை இலக்கிய சிந்தனை என்ற அமைப்புக்கு உண்டு. அன்று நடக்கும் விழா இலக்கிய கர்த்தாக்களுக்கும் ரசிகர்களுக்கும் புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அளிப்பதைப் பார்த்து வருகிறோம்.

இந்த அமைப்பின் ஆறாவது ஆண்டு விழா சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது. திரு குஷ்வந்த் சிங் பேசுகிறார் என்று சொன்னாலே போதும் பரபரப்பு ஏற்பட்டுப் போகும். அதோடு திரு புவியரசு, 'திரைகளுக்கு அப்பால்' என்று தமது பேச்சுக்குத் தலைப்பு தந்து ஆவலைக் கிளறியிருக்கிறார்.

1975-ம் ஆண்டில் வெளியான தமிழ்ச் சிறுகதைகளை ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன் மதிப்பீடு செய்கிறார்.

இவை தவிர புதியதொரு அறிவிப்பையும் செய்து இலக்கிய சிந்தனை பெருமை அடைகிறது. இதுவரை சிறுகதைகளை மட்டுமே விமர்சித்து வந்த இந்த அமைப்பு இப்போது நாவல்கள் பக்கமும் கவனத்தைத் திருப்பியுள்ளது. 1976-ல் வெளிவந்தவற்றுள் சிறந்த நாவலுக்கு பாராட்டும் ரூ. 5000 பரிசும் வழங்கத் தீர்மானித்துள்ளது. கையெழுத்துப் பிரதிகளும் சமர்ப்பிக்கலாமாம்!

பிறகு என்ன, எழுத்தாளர்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பேனாவில் மசியை நிரப்பி எழுத ஆரம்பிக்க வேண்டியதுதானே!

ராஜாஜி சிந்தனை


அண்டத்தின் பெருமையும் நமது சிறுமையும்

நட்சத்திரங்களுக்கு இடையில் உள்ள தூரத்தை நாம் மைல் கணக்கில் அளந்து கூற முடியாது. பெரிய பணக்காரர்களுடைய சொத்தைக் கணக்கிடும் போது நாம் இத்தனை பைசாவென்றோ அல்லது இத்தனை ரூபாய் என்றோ கூறுவதில்லை. இத்தனை கோடி என்றே கூறுவார்கள். அது போல் நட்சத்திரங்களுக்கு இடையில் உள்ள தூரத்தை இத்தனை மைல்கள் என்று கூறாமல் இந்தத் தூரத்தை ஒளி கடக்கச் செலவாகும் ஆண்டுகள் இத்தனை என்றே கூறுவது வழக்கம்.

அதைச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்தியாவின் வடக்கே இருந்து தெற்கே எவ்வளவு தூரம்? அதைப் போல் நூறு மடங்கு தூரத்தைக்கடக்க ஒளிக்கு ஒரே விநாடிதான் தேவை. அது ஓசையைவிடப் பத்து லட்சம் மடங்கு அதிக வேகமாய்ச் செல்கிறது என்றும், ஓசை, வேகமான ரயிலைவிட 12 மடங்கு அதிக வேகமாய்ச் செல்கிறது என்றும் உணர்ந்தால் இந்த வேகங்களின் தன்மையை அறியலாம்.

இவ்வளவு வேகமாய்ச் செல்லும் ஒளிக்குக்கூட நமக்கு வெகு சமீபத்தில் உள்ள நட்சத்திரத்திலிருந்து நம்முடைய பூமிக்கு வந்து சேர மூன்று வருஷங்கள் ஆகின்றன. இதிலிருந்து அந்த நட்சத்திரம் எவ்வளவு அதிக தூரத்தில் இருக்கிறது என்பது தெரிகிறதல்லவா? பக்கத்திலுள்ள நட்சத்திரம்தான் அவ்வளவு தூரம். அப்பாலுக்கு அப்பாலுள்ள நட்சத்திரங்களிலிருந்து ஒளியானது நமக்கு வந்து சேர பல ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகலாம்.

— **நட்சத்திரமும் அணுவும் என்ற கட்டுரையில்**




மேற்கத்திய பத்திரிகைகள்
பி.பி.சி டெலிவிஷன்
பிரிட்டிஷ் மக்கள்
நாளடைவில் சொத்துடைமை தடைக்கு சட்டம் வரலாம்!
இந்தப் படத்தை மாட்டிக்குங்க!.. காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே!
தீவிர சோஷலிஸ்ட
மெய் வழிச் சாலை



இவர் தனது மோட்டாரிலே தினந்தோறும் 80 கி.மீ.க்கும் மேல் பிரயாணம் செய்கிறார்

ஃபயர் ஸ்டோன் 135 நாடுகளில் நீண்ட பிரயாணங்களில், தன் பெருமதிப்பை நிரூபித்திருக்கிறது, சென்ற 75 ஆண்டு களில், மிக அதிகமாக கார் ஓட்டு வோருக்கு சிபாரிசு செய்யும் டயர், ஃபயர் ஸ்டோன், கீழ் கண்ட காரணங்களுக்காக.

- தனிப்பட்ட ட்ரிப்பிள்-ஸ்ட்ரெண்ட் அமைப்புள்ளதால் தேயாதிருப்பவை, சிக்கனமாகவுமிருக்கக்கூடியவை.
- ஸ்பெஷலாக பக்குவம் செய்யப் பட்ட ரப்பர் கூட்டுப் பொருள் களால் ஆனதால், வெகுவேகமாய் ஓடுவதால் ஏற்படும் உஷ்ணத் தையும், சிராய்ப்பையும் தாங்க முடியும்.
- நன்கு முடிய ஓரங்களுள்ள, திருப்பங்களில் சாலையை அணைத்துப் பிடித்துச் செல்லும்படி முன்னேற்றியிருக்கிறது.



அவருடைய டயர்கள்

Firestone

நீண்ட பிரயாணங்களில் 75 ஆண்டுகள் அனுபவம் உள்ளவை.

RADEUS FS-25R

வேத மதத்தின் விசேஷ அம்சங்கள் ⑨

சமூகம் நடக்கப் பல தினுசான தொழில்களும் நடந்தேயாக வேண்டியிருக்கிறது; ஆனால் சௌகரியமான தொழிலுக்குத்தான் எல்லாரும் ஆசைப்படுகிறார்கள் என்றால் இந்த நிலைமையில் என்ன செய்வது? தொழில்களை ஜன சமூகத்தில் எப்படிப் பங்கீடு பண்ணுவது? வெளியிலிருந்து ஒருத்தர் தகுதியைச் சரியாக நிர்ணயம் செய்வது என்றால் முடியாத காரியம்தான். ஆனாலும் எப்படியோ பங்கீடு செய்தால்தான் சமூகத்தில் சகல காரியங்களும் நடந்து ஒழுங்கான தேச வாழ்வு நடக்க முடியும்.

சமத்துவ சமுதாயங்களிலும் இப்போது இப்படிக் கட்டுப்படுத்தித்தான் வருகிறார்கள். வேறே வழியில்லை. ஏதோ ஒரு தினுசில், ''இவ்வளவு பேருக்குத்தான் அந்த வேலை'' என்று எடுத்துக்கொள்ள முடிகிறது. இதிலே வேண்டியவனுக்கு வேலை தருவது, லஞ்சத்துக்காக வேலை தருவது என்று பக்ஷபாதமான ஊழல் எல்லாம் வந்து சேர்கிறது. இதைப் பார்த்து மற்றவர்களுக்கு வயிற்றெரிச்சல் ஏற்படுகிறது


''எல்லாருக்கும் எல்லாம்'' என்று வாயளவில் சொன்னால்கூட மெடிகல் காலேஜுக்கு இத்தனை ஸீட்டுக்கள்தான், டெக்னாலஜிக்கு இத்தனை ஸீட்டுக்கள்தான் என்று படிக்கிற காலத்திலேயே கட்டுப்பாடுகள் செய்யத்தான் வேண்டியிருக்கிறது. தகுதியிருக்கிற அத்தனை பேருக்கும், இஷ்டப்படுகிற எல்லாருக்கும் மெடிகல் ஸீட் கொடுப்பது என்றால் முடியுமா? 'என்ஜினீயரிங்குக்கு ரொம்பப் பேர் வந்து விட்டார்கள்; எனவே இனி மேல் இதற்கு அட்மிஷனைக் குறைக்க வேண்டும்' என்றுகூட நடுவாந்தரத்தில் ஒரு பேச்சு இருந்தது.

இதையெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால் equal opportunity (சம வாய்ப்பு) என்று பேச்சில் சொல்லி, பரம்பரைத்தொழில் பங்கீட்டைக் கண்டித்தாலும்கூட, காரியத்தில் வருகிற போது சமூகம் முழுவதற்குமான நானாதினுசான தொழில்களை நிரவி வைக்கிற போது கொஞ்சம் தர்மம் தப்பியும், செயற்கையாகவும் (artificial) ஏதாவது கட்டுப்பாடு செய்துதான் ஆக வேண்டியிருக்கிறது. இது செயற்கையாக இருப்பதாலேயே, பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொறாமையும் வயிற்றெரிச்சலும் ஜாஸ்தியாகின்றன. வெளியிலே சமத்துவப் பேச்சாக இருந்தாலும் உள்ளே பரஸ்பரத் த்வேஷம் தான் இருக்கிறது.

அவனவனுக்கும் இதுதான் தொழில் என்று நிர்ணயம் செய்து கொடுத்துவிட்டால் இந்தத் த்வேஷத்துக்கு இடமே யில்லை. ஆனாலும் சீர்திருத்தவாதிகள் ஜாதி ஏற்பாட்டை ஏன் எதிர்க்கிறார்கள் என்றால், இதில் சிலபேர் மட்டும் சௌகரியமாகச் சலுகைகளோடு வாழ முடிகிறது, மற்றவர்கள் ரொம்பவும் உழைத்துக் கஷ்டப்பட்டுக் கொண்டு தரித்திரத்திலேயே இருக்க வேண்டியிருக்கிறது என்று தோன்றுவதால்தான். சமீப காலத்தைப் பார்த்தால், வேண்டுமானால் இது சரிமாதிரி தோன்றுமே தவிர, எந்த உத்தேசத்தோடு வர்ண தர்மம் ஏற்பட்டு யுகாந்தரமாக நம் தேசத்தில் நடந்து வந்திருக்கிறதோ அதைப் பார்த்தால் இப்படிச் சில பேர் மட்டும் தேக சிரமமே இல்லாமல், சுகஜீவனம் நடத்திக் கொண்டிருந்தார்கள் என்று நினைப்பது எவ்வளவு தப்பு என்று தெரியும். சாஸ்திரங்களை ரக்ஷித்துத் தருகிற ஜாதி சொத்தே வைத்துக் கொள்ளக் கூடாது; சரீரத்தைக் காயக் காயப் போட்டுக் கொண்டு, மற்ற எவருக்கும் இல்லாத கடுமையான உபவாஸாதி நியமங்களை இவர்கள்தான் பின்பற்ற வேண்டும்; குடிசையில்தான் வசிக்க வேண்டும்; மற்ற எல்லாரின் க்ஷேமத்துக்காகவே யாக யக்ஞங்களைச் செய்தும், வேத அத்யயனத்தின் மூலமும் திவ்ய சக்திகளை ஸமஸ்த ஜீவ சமூகத்துக்கும் அநுகூலமாக்கித் தரவேண்டும்; (இப்படி ஒரு யாகம், விரதாநுஷ்டானங்கள் இவற்றைச் செய்வதில் இருக்கிற தேக சிரமம் ஒரு மூட்டைதூக்கிக்கு இருக்கக் கூடியதற்குக் குறைவாக இராது); வில்வித்தை (தநுர்-வேதம்), சங்கீதம் (காந்தர்வ வேதம்) உள்பட சகல வித்தைகளையும் இவன்தான் பிறருக்கெல்லாம் கற்றுக் கொடுத்து, அந்தந்தச் சமூகத்தில் பிறந்தவர்கள் அவற்றை அநுஷ்டிக்க உபகாரம் பண்ண வேண்டும்; ஆனாலும் கூட அப்படி இன்னொரு சௌகரியமான தொழிலை இவனே செய்து பணம் சேர்த்துக்கொள்ளக் கூடாது; தனக்கு நன்றாகத் தெரிந்த சௌகரியமான வித்தைகளைக் கூடப் பரமத் தியாகியாக, தர்மகர்த்தா மாதிரி போஷித்து, அதற்கு ஏற்பட்டவர்களுக்குச்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்





★ மருத்துவர்களுக்குப் பக்கபலமாக நிற்பவர்கள் உயிர் வேதியல் நிபுணர்கள் (Bio Chemists). நோயாளியின் உடலிலிருந்து ரத்தம், கழிவுப் பொருள், அல்லது திசுக்களை எடுத்து ஆராய்ந்து நோயின் தன்மை அறிய உதவுவார்கள். புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் மருந்துகளை விலங்குகளுக்கு ஊட்டி மருந்தின் குணங்களை அறிவார்கள். இப்படிப் பட்ட அவர்களது பலப்பல பணிகளை நன்கு விளக்கியது சென்னைப் பல்கலைக் கழக உயிர் வேதியல் மாணவர்கள் நடத்திய கண்காட்சி. பேராசிரியர் சண்முக சுந்தரம் தம்பதியின் ஒத்துழைப்பு கண்காட்சியின் வெற்றிக்குப் பெரிதும் உதவியது.

★ நெய்வேலி ஸத்ஸங்கம், தபோவனத்தின் பதினாறாவது ஆண்டு விழாவை சமீபத்தில் வெகு கோலாகலமாகக் கொண்டாடியது. இதையொட்டி வெளியிடப்பட்ட விழா மலரை வில்லி பாரதச் சொற்பொழிவு நடத்திய புலவர் கீரன் வெளியிட்டார்.

★ யுனைடெட் இந்தியா ரோலர் மாவு மில்லின் 'மலி' பிரிவை இந்தியத் தொழில் மந்திரி திரு ஏ. டி. ஜார்ஜ் திறந்து வைத்தார். இந்த மாவுத் தொழிற்சாலை இந்திய ராணுவத்துக்குக் கோதுமை மாவு தயாரித்து அனுப்பும் பெருமையும் பெற்றுள்ளது. தமிழகப் பிரதம காரியதரிசி திரு வி. கார்த்திகேயன் இந்த மாவு மில் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்கினார்.





சொல்லிக் கொடுத்துவிட்டு, இவன் ஸதா ஸர்வ காலமும் வேத கர்மாநுஷ்டானங்களும் ஈசுவர தியானமும் பண்ணிக்கொண்டு லோக கல்யாணத்தையே நினைத்து வரவேண்டும்; ஜீவிப்பதற்கு அத்தியாவசியமானதற்கு அதிகமாக இவனிடம் ஓர் இம்மிகூட பண்டமோ, பொருளோ, உடுப்போ, வேறு எதுவுமோ இருக்கக் கூடாது; Simple living, high thinking (எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை) என்கிறார்களே அதுதான் இவனுக்கு ஏற்பட்டது. — இப்படித்தான் தர்ம சாஸ்திரங்கள் சொல்கின்றன. இந்த சாஸ்திர விதியை விட்டு விட்டவர்கள் கொண்டு வந்திருக்கிற தப்பான புதிய முறையைப் பார்த்துவிட்டுச் சீர்திருத்தவாதிகள் மூல தர்மத்தையே நிந்திக்கக் கூடாது.

இவன் தனக்குச் சௌகரியமாக சாஸ்திரங்களை எழுதி வைத்துக் கொண்டுவிட்டான் என்று நினைத்தால் அது அடியோடு தப்பு. மற்றவர்களுக்கெல்லாம் இல்லாத சிரமங்களை, நியமங்களை, ஏகப்பட்ட கட்டுப்பாடுகளை இவனுக்குத்தான் சாஸ்திரம் சொல்லியிருக்கிறது.

இதற்காகவே கூட சிலர் சண்டைக்கு வருகிறார்கள். 'நியமங்கள்தானே பரலோகத்துக்கு ஸாதனமாகும்? அவற்றை இவன் தனக்கு மட்டும் வைத்துக் கொள்ளலாமா?' என்று கேட்கிறார்கள். ஆனால் வாஸ்தவத்தில் இந்த நியமங்கள்தான் பரலோக சாதனம் என்று நினைப்பதே தப்பு. எல்லோருக்கும் அஹிம்ஸை, சத்தியம், பேராசை இல்லாமலிருப்பது, ஆகிய சீலங்கள்தான் அவசியமே தவிர, மற்ற நியமங்கள் அவசியமில்லை.


எல்லோரும் முடிந்த மட்டில் இவற்றை அநுஷ்டித்தால் சிரேயஸ்தான். ஆனாலும் முக்கியமாக அறிவினால் காரியம் செய்பவர்களுக்குத்தான் இவற்றை அநுஷ்டிக்க முடியும். மற்றவர்களுக்கு இதிலே ரொம்பவும் சிரமம் ஏற்படும். ஒரே பாக்டரியில் மெஷின்களில் வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள்; காண்டீனில் ஸர்வ் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். போஜன சாலையில் வேலை செய்பவன், சுத்தமாக, சுசிருசியாகத்தான் இருக்க வேண்டும். மெஷினைத் துடைக்கிறவன் எண்ணெய்ப் பிசுக்கும் தானுமாகத்தான் இருப்பான். அதனால் இவனைவிட அவன் உசத்தி என்றாகுமா? ''அவனவனும் தன் காரியத்தை ஒழுங்காகச் செய்தாலே, அது ஈச்வரனுக்குப் பண்ணின பூஜையாகிறது; அதனாலேயே அவன் ஸித்தியடைந்து விடுகிறான்'' என்று கீதையில் பகவான் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். அதனால், எல்லோரும் ஒரே மாதிரியான விரதாதி நியமங்களை அநுஷ்டிக்காததால் சிலபேருக்குத்தான் பரலோகம் கிடைக்கிறது என்று நினைத்தால் அது சரியில்லை.

(தொடரும்)


[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

டினோபால்* பெறும் புதிய பெயர்


ரானிபால்+



ரானிபால்+
(பருத்தித்
துணிகளுக்கு)



ரானிபால்+-எஸ்
(செயற்கை இழை
மற்றும் கலப்பு
இழைத்
துணிகளுக்கு)



அதே பொருள், அதே திறன், ஆனால் பெயர் மட்டும் புதிது !

சிறந்த வெண்மைச் சலவைக்கே ரானிபால்+

Suhrid Geigy
LIMITED

+ ஸுஹ்ரித் கெய்கீ லிமிடெட்டின் ட்ரேட் மார்க் ஆகும்
* ஸீபா கெய்கீ லிமிடெட்டின் லைஸென்ஸ்படி முன்னாளில் விற்பனை செய்யப்பட்டது.

Shilpi SGT 6A/78 tam

ஓரியண்ட்

காற்றிற்கு அழகூட்டும் ஃபேன்கள்



இந்தியாவில் ஃபேன்கள் தயாரிப்பதில் அனுபவமிருந்தவர்களால் செய்த ஓரியண்ட் ஸீலிங் ஃபேன்கள் எல்லாம் நவீன கால டிஸைனும் இணையற்ற நேர்த்தியும் கொண்டவை. உங்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கும் நவீனகால வீடுகளின் அழகிற்க்கு அழகு செய்யவும் ஏற்ற பல்வேறு அளவுகளில் மி.மீ. 900 லிருந்து 1500 மி.மீ. வரை கிடைக்கின்றன. அனைத்து தயாரிப்பு நிலைகளிலும் கண்டிப்பான தரக்கட்டுப்பாடுடன் இடைவிடாத ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் செய்திருப்பதால் ஆண்டுக் கணக்கில் அசைவற்றும் அமைதியாகவும் தொந்தரவு இல்லாமலும் உழைக்கின்றன.

இரண்டுவருட உத்தரவாதம்

ஓரியண்ட்
விசிறிகள்

நீண்டகாலமிருக்கும் ஃபேன்கள் வாழ்நாள் முழுதுமான சிக்கனத்திற்கு

ஓரியண்ட் ஜெனரல்
இண்டஸ்ட்ரீஸ் லிட்.

6, ஹேர் பீபீ லேன், கல்கத்தா-700 054
தொழிற் சாலைகள் : கல்கத்தா மற்றும் பரிதாபாத்

CC/OGI-4/76 TAM



ஜெயித்த ஜெயந்தி!

அரசியல் கட்சிகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுத வேண்டியது; அத்துடன் தனது வாழ்க்கை வரலாற்றையும் இணைத்து அனுப்ப வேண்டியது! இப்படி ஒரு போட்டி. சிறந்த கட்டுரை எழுதியவருக்குப் பரிசு என்ன தெரியுமா? மேற்கு ஜெர்மனிக்கு விஜயம்!

ஃப்ரெடெரிக் நீயூமன் ஃபௌண்டேஷன் ஏற்பாடு செய்திருந்த இந்தப் போட்டியில் ஆயிரக்கணக்கானவர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்றவர் 33 பேர். அவர்களுள் தமிழகத்திலிருந்து வென்று சென்றவர் ஸ்ரீமதி ஜெயந்தி நடராஜன். இவர் சட்டக் கல்லூரி மாணவி. திரு பக்தவத்சலத்தின் பேத்தி!

பயண அனுபவங்களைப் பற்றிக் கூறும்படி கேட்டதும் சொன்னார்:

"எங்களில் ஏழு பேர் பெண்கள். 26 ஆண்கள். அனைவரும் இளம் வயதினர். துருக்கி, இஸ்ரேல், கானா, இங்கிலாந்து — இப்படி உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்திருந்தனர். கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து கூட நான்கு பேரை அழைத்திருந்தார்கள். நான்கு நாட்கள் பெர்லின் நகரில் தங்கியிருந்தோம். நகரைச் சுற்றிப் பார்க்க அவர்களே ஏற்பாடு செய்திருந்தார்கள். நான்கு நாட்களுக்குப் பிறகு கொலோன் நகரை அடுத்துள்ள கும்மர்ஸ்பாக் என்னும் கிராமத்துக்கு எங்கள் அனைவரையும் அழைத்துச் சென்றார்கள். பத்து நாட்கள் அந்தக் கிராமத்தில் தங்கியிருந்தோம். எங்களில் சிலர் ஆசிரியர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் பணியாற்றுபவர்கள்."

"உங்களை அழைத்ததன் நோக்கமென்ன?"

"உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள அரசியல் அமைப்புகளைப் பற்றிக் கலந்துரையாடினோம். தீவிரமாக விவாதம் நிகழ்ந்தது. அந்த அந்த அரசியல் அமைப்புக்களின் நிறை, குறைகளை அலசினோம். புலமை மிக்க பேராசிரியர்கள் சிலர் உரையாற்றினார்கள். உரை முடிந்ததும் கேள்விகள் கேட்க வாய்ப்பு அளிக்கப்பட்டது. நாங்கள் ஜெர்மன் நாட்டுப் பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

'செனெட்' எனப்படும் பெர்லின் ஃபெடரல் பார்லிமெண்ட் எங்களுக்கு ஒரு வரவேற்பு அளித்தது. கிராமத்தில் நாங்கள் தங்கியிருந்த போது எங்களுக்காகச் சமையல்வேலைகளை மேற்கொண்டிருந்த பெண்களில் பலர் மாணவியர். விடுமுறைக் காலத்திய வேலை வாய்ப்பாக அவர்களுக்கு இந்தச் சமையல் வேலை கொடுக்கப்பட்டிருந்தது. சமையலை முடித்து விட்டு அந்தப் பெண்களும் எங்களுடன் வந்து சகஜமாக உரையாடினார்கள்."

"பெர்லின் நகரில் ஆறு நாட்கள் தங்கியிருந்ததாகச் சொன்னீர்களே — பிரசித்தி பெற்ற ஜெர்மன் சுவரைக் கடந்து கிழக்கு பெர்லினுக்குச் சென்றீர்களா?"

"ஓ, போயிருந்தோம். அதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். மேற்கு பெர்லின் நகரில் இரவு பகல் எந்நேரமும் 'ஜேஜே' என்று இருக்கிறது. ஆனால் கிழக்கு பெர்லின் இதற்கு நேர்மாறாக உள்ளது. ஒரே அமைதி. மக்களும் எங்களுடன் வலிய வந்து பேசவில்லை. அபூர்வமாக, இலேசான புன்னகை சிலர் முகத்தில் படர்கிறது. அவ்வளவுதான். ஒரு பெரிய ஏரியில் எங்களை ஒரு படகில் அழைத்துச் சென்றார்கள். அந்த ஏரியின் கிழக்குப் பக்கத்துக் கரை கிழக்கு ஜெர்மன் அரசுக்குச் சொந்தமானது. அந்தப் பகுதியில் படகு சென்றபோது கரை நெடுகிலும் துப்பாக்கி ஏந்திய சோல்ஜர்கள் நின்று காவல் புரிந்ததைக் கண்டேன். மக்கள் ஏரிக்குள் குதித்து நீந்தி மேற்கு ஜெர்மனிக்குச் சென்று விடாமல் தடுக்கவே கடுமையான காவல். கரையோரப் பகுதியிலுள்ள வீடுகளின் ஜன்னல்கள் எல்லாம் கூட மூடப்பட்டிருந்தன."

"மேற்கு ஜெர்மனியில் அரசியல் கட்சிகள் எத்தனை உள்ளன?"

"ஆளும் கட்சி ஒன்று. எதிர்க்கட்சிகள் இரண்டு. மொத்தம் மூன்றே கட்சிகள்."

"மூன்றுக்கு மேல் வேண்டவே வேண்டாம்" என்ற நிலை நம் நாட்டில் தோன்றினால் நல்லதுதான் என்று கூறி ஸ்ரீமதி ஜெயந்தியிடம் விடை பெற்றேன்.

பேட்டி:

ருக்மிணி பாலகிருஷ்ணன்





CMGS-80-203 TM

வட்ட மேஜை

கல்கி 14-3-76 இதழ் பக் 7–8ல், முகமது நபியின் உபதேசங்களை அநுசரிக்காதவர்களுக்கு மோக்ஷம் கிடையாது என்றால், சிருஷ்டி தோன்றியதிலிருந்து நபிகள் நாயகத்தின் காலம் வரை பிறந்தோர் யாவரும் நரகத்துக்குத்தான் போயிருக்க வேண்டும் என்ற கருத்து காண்கிறது. பல முஸ்லிம் அன்பர்கள் இதனை ஆட்சேபித்து, சிருஷ்டித் தொடக்கத்திலிருந்து பல்லாயிரம் நபிமார்கள் தோன்றியதாகவும், இறுதி நபியாகவே முகமது தோன்றினார்கள் என்றும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

இவ்வாறே கிறிஸ்துவுக்கு முற்பட்டு ஜனித்த அனைவரும், அவரது அவதாரம் வரையில் பாதாளத்தில் இருந்ததாகவும், அவர் மக்கட் குலப் பாவம் முழுவதையும் தாமே கிரகித்து அதற்காகச் சிலுவையில் அறையுண்டு இன்னுயிர்த் தியாகம் புரிந்தவுடன், அப் பாதாள வாசிகள் யாவரும் மோக்ஷம் பெற்றுவிட்டதாகவும் அம்மத நேயர்கள் தெரிவிக்கிறார்கள். நன்றி. —ஆசிரியர்.

எண்ணற்ற நாடக உத்திகளைக் காப்பி அடித்தும், உதவாக்கரை ஜோக்குகளைப் புகுத்தியும், மாற்றுமொழிப் படத்தை ஏக போக உரிமையாக்கியும் ''மன்மத லீலை'' தயாரித்து ஆயிரக்கணக்கான இளம் உள்ளங்களைக் கெடுத்துவிட்ட பாலசந்தரை நீங்களாவது சாடுவீர்கள் என்று இருந்தேன். ஏமாற்றி விட்டீர்களே!

அவிநாசி
21–3–76 டி. செங்கோடசுப்பிரமணியன்

'சேரமான் காதலி' வெற்றி நடை போட்டு வருகிறது. கண்ணதாசன் கையாளும் உத்திகளும் சலிப்பை உண்டாக்காத வர்ணனைச் சிறப்புக்களும் பாராட்டுக்குரியன. நறுக்குத் தெறிக்கான சொல்லாட்சியும், விறுவிறுப்புடன் கூடிய சரளமான தெள்ளிய நடையும், வளரும் சமுதாயத்துக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு முன்னோடியாக நின்று பெரும் பயன் அளிக்கவல்லது.

22–3–76
சென்னை–4 பி. சோமசுந்தரம்

ராஜாஜி மண்டபத்தில் உள்ள மேலாளர் அலுவலகத்தின் முன், ''இராசாசி மண்டப மேலாளர் அலுவலகம்'' என்று பெயர்ப் பலகை தொங்குகிறது.

ராஜாஜி அவர்களுக்கே பிடிக்காத வகையில் ''இராசாசி'' என்று எழுதியுள்ளதை மாற்ற வேண்டும்.

சென்னை–28
23–3–76 ஆர். வி.

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுக்குமிடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டித் தொடரின் நேர்முக வர்ணனை வேதனை. காரணம் வர்ணனை ஆங்கிலத்தோடு நில்லாமல், ஹிந்தியிலும் கலந்து ஒலிபரப்பப்படுவதுதான். இதனால் ஆட்டத்தைக் கூர்ந்து ரசிக்கும் ஹிந்தி தெரியாத நேயர்களுக்கு, ஆட்டத்தின் தொடர்ச்சி துண்டிக்கப்பட்டு, உற்சாகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

வடநாட்டுக் கௌரவத்துக்காக ஹிந்தி வர்ணனை செய்துதான் ஆக வேண்டும் என்றால் ஹிந்தி, ஆங்கில வர்ணனைகளை வெவ்வேறு அலைவரிசைகளில் ஒலிபரப்பட்டும்.

சென்னை — 23
22–3–76 வி. சௌந்தரராஜன்

''வெள்ளை மாளிகை விநோதங்கள்'' — தகவல்கள் மிகவும் ருசிகரமாக உள்ளன.

ஒரு சிறு திருத்தம். வெள்ளை மாளிகை எரிக்கப்பட்டது சுதந்திர போராட்டத்தின் போது என்று கூறப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகை எரிக்கப்பட்டது சுதந்திரப் போர் நடந்து 38 ஆண்டுகளுக்குப்பின் 1814ம் வருடம் ஆகஸ்டு மாதம், நான்காவது ஜனாதிபதி ஜேம்ஸ் மேடிஸன் ஆட்சிக் காலத்தில் பிரிட்டிஷ் துருப்புகளால் எரிக்கப்பட்டது.

சென்னை
18–3–76 கே. ஜயந்தி

சென்னையில் மார்ச் 15ந் தேதி திரு பி. ராமச்சந்திரன் அவர்களையும் திரு கருணாநிதி அவர்களையும் சந்தித்தேன். நாடு தழுவிய நோக்கில் ஒரே எதிர்க் கட்சி அமைவது பற்றி விவாதித்தேன். தங்கள் தங்கள் கட்சிகளின் கொள்கைகளில் வித்தியாசங்கள் இருப்பினும் விசால நோக்குடன் பார்க்கையில் ஒரே எதிர்க் கட்சியை அமைப்பது நல்லது என இவர்கள் உணர்ந்து அக்கருத்துக்கு ஆதரவளித்து வரவேற்கிறார்கள்.


17–3–76
பெங்களூர் எஸ். விசுவேசுவரய்யா
(அமைப்பாளர் பெங்களூர் பாரதீய லோகதளம்)

சென்ற இதழ் கல்கி படித்தேன். அதில் விவித பாரதியின் வர்த்தக ஒலிபரப்பு பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து எழுதியிருந்தீர்கள்.

இலங்கை வானொலியின் சேவை இரண்டு, மற்றும் தென் கிழக்கு ஆசிய நேயர்களுக்கான ஒலிபரப்பு இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஒலிபரப்பாகும் விவித பாரதியின் வர்த்தக ஒலிபரப்பு 'போர்.'

திண்டுக்கல்
23–3–76 எஸ். மோகன்

ஒவ்வொரு தாயும் தன் குழந்தையின் உணவு பற்றி என்ன அறிய விரும்புகிறார்



அமுல்ஸ்ப்ரேயில் என்ன கிடைக்கிறது

கே. என் குழந்தை ஆரோக்கியமாகவும் வலுவுடனும் வளருவதற்குத் தேவையான வைட்டமின்கள், கனிஜ பொருட்கள் மற்றும் புரதங்கள் அமுல்ஸ்ப்ரேயில் உள்ளனவா?

அமுல்ஸ்ப்ரேயில் பாலில் காணப்படும் எல்லா இயற்கையான சேர்க்கைப் பொருட்களும், கூடவே வைட்டமின்கள் மற்றும் கனிஜ பொருட்களும் உள்ளன.

வைட்டமின்கள் நோய்த் தொற்றை எதிர்க்க, நன்றாக பசி எடுக்க, ஆரோக்கியமான நரம்புகள், ஈறுகள், கண்கள் மற்றும் பற்களுக்கு.

நியாஸின் சீரண சக்தியை வளர்க்க, உடல் உறிஞ்சிக் கொள்ள, மற்றும் ஆரோக்கியமான சருமத்துக்கு. கால்ஷியம், பாஸ்பரஸ் போன்ற கனிஜ சத்துக்கள் எலும்புகள் சீராக அமைய. இரும்புச் சத்து ரத்த அமைப்புக்கு.

புரதம் செல் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது. அமுல்ஸ்ப்ரேயில் தரமுயர்ந்த புரதங்கள் போதிய அளவில் இருக்கின்றன.

கே. என் குழந்தையால் அமுல்ஸ்ப்ரேயை சீரணிக்க முடியுமா?

ஒவ்வொரு சொட்டுப் பாலும் மிக நுண்ணிய பவுடராக மாற்றப்படுகிறது. கொழுப்பும் அவ்வாறே மாற்றப்படுகிறது. இதனால் குழந்தை இதை எளிதில் சீரணிக்க முடிகிறது—பிறந்து சில நாட்களான குழந்தையால் கூடத்தான்.

கே. அமுல்ஸ்ப்ரேயைத் தயாரிக்க நேரமாகுமா?


ஸ்ப்ரே-ட்ரை முறையால் தயாரிக்கப்படும் நுண்ணிய பவுடரான அமுல்ஸ்ப்ரே எளிதில் விரைவில் கரைகிறது. இதைத் தயாரிப்பது எளிது. இது பாட்டிலின் நிப்பிள் துவாரத்தில் அடைத்துக் கொள்வதில்லை. எனவே குழந்தை அதிக காற்றை விழுங்குவதில்லை.

பாலஅமுல் மற்றும் வளரும் குழந்தை

3-வது மாதத்தில், உங்கள் குழந்தைக்கு அமுல்ஸ்ப்ரேயைத் தவிர, பாலஅமுல தானிய உணவு தரத் தொடங்குங்கள்.

அதிக விவரங்கட்கு. இலவசமாக அமுல் குழந்தைப் புத்தகம்

அமுல் குழந்தைப் புத்தகத்தை இலவசமாகப் பெற, த.பெ. 10124, பம்பாய் 400 001 என்னும் முகவரிக்கு எழுதுக. 50 பைசா தபால் தலையுடன் உங்கள் முழு முகவரியையும் அனுப்புக.



அமுல்ஸ்ப்ரே தாய்ப்பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது

Indian Standards Institution

விற்பனைக்கு விடுப்போர்: குஜராத் கோ-ஆப்பரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், ஆனந்த்.

ASP/AS/27

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 26

வனவாசம் நோக்கி

அன்றைய இரவு முழுவதும் எப்படி வெற்றிக் களியாட்டத்தில் ரவிவர்மனும் பூஜியாருவும் தூங்கவில்லையோ அப்படியே அவனது வீட்டில் மார்த்தாண்ட வர்மனும், மெல்லிளங்கோதை, பத்மாவதி, தாவளி சகோதரிகள் யாரும் தூங்கவில்லை.

ஜனனத்தில் சந்தோஷம் கொண்டாடும் ஒரு வீடும், மரணத்தில் துக்கம் கொண்டாடும் ஒரு வீடுமாகப் பூமி காட்சியளிப்பது போலவே அந்த இரவில் வஞ்சி நகரம் காட்சியளித்தது.

பொழுது விடிந்தது.

வஞ்சி நகரத்து மக்களுக்கு என்ன நடந்தது என்பதே முழுவதும் புரியவில்லை. இரண்டு எல்லைப்புறங்களில் கொங்கர் படையும், கூடற் படையும் மகிழ்ச்சி கொண்டாடியதைப் பார்த்தவர்கள், போரில் சேரநாடு தோற்று விட்டதாகவே பேசிக் கொண்டார்கள்.

மார்த்தாண்ட வர்மன் கொல்லப் பட்டு விட்டதாகவும், ரவிவர்மன் சிறை செய்யப்பட்டு விட்டதாகவும் சிலர் பேசிக் கொண்டார்கள்.

'இது நாராயண நம்பூதிரியின் சூழ்ச்சி' என்று வேறு சிலர் பேசிக் கொண்டார்கள்.

மெது மெதுவாகக் கதவைத் திறந்து வெளிவந்த மக்களிடையே வதந்திகள் விசுவரூபம் எடுத்தன.

ரவிவர்மனுக்கு ஆதரவானவர்கள், 'ரவிவர்மனால் நாடு பிழைத்து விட்டது' என்றும், 'கொங்கர், பாண்டியர், சேரர்களுக்கு நடுவே சமாதானம் ஏற்பட்டு விட்டது' என்றும், 'ரவிவர்மன் இல்லை என்றால் என்னென்னவோ ஆகி இருக்கும்' என்றும் பேசத் தலைப் பட்டார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக மார்த்தாண்டவர்மன் தலைமறைவாகி விட்டதும், ரவிவர்மன் பட்டத்துக்கு வந்ததும் நாராயண நம்பூதிரி இல்லத்திலேயே சிறைப்படுத்தப்பட்டதும் அவர்களுக்குப் புரியத் தொடங்கின.



வணிக அங்காடிகள் திறக்க ஆரம்பித்தன.

வதந்திகளைக் கலைத்துக் கொண்டு அரண்மனைக் கோட்டை வாசலில் முரசு முழங்கிற்று.

'சேர நாட்டுக்கு வரவிருந்த ஆபத்து தடுக்கப்பட்டு விட்டதாக'வும், 'கொங்கர், பாண்டியருக்கிடையே ரவிவர்மன் சமாதானம் செய்து விட்டதாக'வும், 'மார்த்தாண்டனை ரவிவர்மன் பத்திரமாக வெளியேற்றி விட்டதாக'வும், 'நாராயண நம்பூதிரி சபைக் கட்டிடத்திலேயே இருக்கிறார்' என்றும், 'சஞ்சலமின்றி மக்கள் நடமாடலாம்' என்றும், முரசறைபவன் முழங்கினான்.

மக்களுக்கொரு நிம்மதி.

பெரும்பாலான மக்கள் அரசு பீடத்தில் யார் இருக்கிறார்கள் என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை. தங்களது அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் போதும் என்பது தான் அவர்கள் நிலை.

சேர வம்சத்தில் அக்கறையுள்ள குரு பரம்பரையினர் மட்டுமே புதிய மாற்றங்கள் பற்றி வருந்தினார்கள்.

மார்த்தாண்ட வர்மனைப் பற்றிப் பெருமிதப்படுவதற்கோ, புகழ்ந்துரை செய்வதற்கோ அவனது குறுகிய ஆட்சிக் காலத்தில் ஏதும் நடக்கவில்லையாதலால் அவன் எங்கிருக்கிறான் என்பது பற்றிப் பெரும்பாலோர் கவலைப்படவில்லை. அந்தக் குறுகிய காலத்தில் ரவிவர்மனைப் பற்றிப் பெரிய நினைவுகள், அவன் செய்த சாகசங்கள் மூலம் ஏற்பட்டிருந்ததால், பலர் குதூகலத்தோடு அவனது வெற்றியைக் கொண்டாடினார்கள்.

பொழுது விடிந்ததிலிருந்து வஞ்சி மக்களின் நிலை இது.

அரண்மனையில் ...

தனது வெற்றியையும், யூஜியானுவுடன் தனது முதல் இரவையும் கொண்டாடிய ரவிவர்மன் காலையில் சுறுசுறுப்படைந்தான்.

அவனுக்கு முன்பாகவே யூஜியானு எழுந்து குளித்துப் பட்டத்து ராணி போல் காட்சியளித்தாள்.

அரண்மனைச் சேவகர்கள் பலர் — காலை ஊழியத்துக்கு வந்தவர்கள் கைகளைக் கட்டியபடி தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அவர்களில் பலர் ஏற்கனவே அறிமுகமானவர்களாக இருந்தும், தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதற்குக் காரணம், அது ஒரு விசுவாசப் பிரமாணம்.

அப்பொழுது ரவிவர்மனுக்கு மந்திரிப் பிரதானிகள் யாரும் தேவைப்படவில்லை. பதவிக்கு வந்த உடனே நோயாளிகூடச் சுறுசுறுப்பாக இயங்குவானல்லவா!

அவன் இரண்டு வகையான ஓலைகள் தயார் செய்தான். ஒன்று, கொங்கு நாடு பற்றியது; இன்னொன்று; பாண்டிய நாடு பற்றியது.

'சேரநாட்டுக்குக் கப்பம் கட்டுவதிலிருந்து இரண்டு நாடுகளும் விடுதலை பெற்று விட்டதாக' அந்த ஓலைகளில் அவன் கைச்சாத்திட்டான்.

கொங்கு மன்னன் கவுட தேவனுக்கும், கூடல் மன்னன் சடைய வர்ம பாண்டியனுக்கும் நன்றி தெரிவித்துத் தனித்தனியே ஓலைகள் எழுதினான்.



கொங்கர் தளபதிகளையும், கூடல் தளபதிகளையும் வரவழைத்தான். வைரம் இழைக்கப்பட்ட இரண்டு தங்கப் பேழைகளில் சேரநாட்டு யானைத் தந்தங்களை அவர்களுக்குப் பரிசளித்தான்.

கொங்கு மன்னன் கவுட தேவனுக்கு நாட்டியக்காரி மாதவியையும், அவளது உறவுப் பெண்கள் பதினாறு பேரையும் பரிசாகக் கொடுத்தான்.

மதுரை அங்கயற்கண்ணிக்குச் சாத்துவதற்காக ஏழாயிரம் வைரங்கள் இழைக்கப்பட்ட அணிகலன் ஒன்றைச் சடையவர்ம பாண்டியனுக்குப் பரிசாக அனுப்பினான்.

அனைத்தையும் பெற்றுக் கொண்ட குரு நாட்டுப் படைகளும் தளபதிகளும் தங்கள் பாசறைகளைக் காலி செய்து கொண்டு புறப்பட்ட காட்சியை வஞ்சி மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர்.

அத்தனை காரியங்களையும் முடித்த ரவிவர்மன் அரண்மனைச் சுவர்ப் பெட்டகத்தைத் திறந்தான். அலங்கரிக்கப்பட்ட அந்தப் பெட்டகத்துக்குள்ளே தான் மார்த்தாண்ட வர்மனின் மணிமகுடம் இருந்தது. அந்த மகுடத்தை அவன் எடுப்பதற்கு முன்னாலே இரண்டு மெல்லிய கைகள் எடுத்து விட்டன. திரும்பிப் பார்த்த போது பூஜியானா நின்றாள்.



அவள் சிரித்துக் கொண்டே, அந்த மகுடத்தை அவன் தலையில் அணிவித்தாள்.

இங்கே இது நடந்து கொண்டிருக்கும் போது ரவிவர்மன் வீட்டில் ...

எல்லோருமே பீதியடைந்தவர்கள் போல் காணப்பட்டார்கள்.

மாடத்தில் இருந்த ஓர் அறையில் மார்த்தாண்ட வர்மனும், மெல்லிளங்கோதையும் சிறைப்பட்டவர்கள் போல் இருந்தார்கள். நகரத்தை விட்டு அவர்களைக் கடத்தி அகஸ்தீசுவரம் காட்டிலிருந்த ஓர் ஆசிரமத்துக்கு அனுப்புவதற்கு நாராயண நம்பூதிரி திட்டமிட்டிருந்தார். அந்த ஏற்பாடுகள் பூர்த்தியாவதற்கு முன்பே அரண்மனை வளைக்கப்பட்டு விட்டதால் வேறு எங்காவது தலைமறைவாக இருக்கும்படி சுரங்கப் பாதை வழியாக அவர்களை அனுப்பி வைத்திருந்தார். அவர்கள் நம்பக் கூடிய இடமாக ரவிவர்மன் வீடு ஒன்றுதான் இருந்தது. அன்றியும், ரவிவர்மன் சந்தேகப்பட முடியாத இடமும் அதுதான். ஆகவே, அவர்கள் அங்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

எந்த ரதத்தில் எப்படிப் போவது என்று புரியாத நிலையில், அங்கே சிறைப்பட்டுக் கிடந்தார்கள்.

இல்லத்திலிருந்த ஒவ்வோர் ஊழியனைக் கண்டும் தாவளி சகோதரிகள் பயந்து கொண்டிருந்தார்கள். ஆனால் பத்மாவதி பயந்தவளாக இல்லை.

''யார் மூலம் ரதம் கொண்டு வருவது? யார் அந்த ரதத்தை ஓட்டிச் செல்வது?'' என்று யோசித்தாள்.

மெதுவாகக் கதவைத் தட்டி, தம்பி மார்த்தாண்டவர்மனிடமே அந்தக் கேள்வியைக் கேட்டாள். அவன் நம்பிக்கையோடு நினைவுபடுத்திச் சொன்ன பெயர் 'அங்கதன்' பெயராகும்.

அங்கதனை அழைத்து வர யாரை அனுப்புவது?

அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

அந்த நேரத்தில் வெளியிலே ரவிவர்மனின் ரதம் வந்து நின்றது.

ரவிவர்மனைக் கண்டதும் எல்லோருமே பேயடித்த நிலையில் நின்றார்கள்.

மாடத்து அறையில் கதவைத் தாளிட்டபடி மூச்சு விடக் கூடப் பயந்தவர்களாக மார்த்தாண்டவர்மனும், மெல்லிளங்கோதையும் நடுங்கிக் கிடந்தார்கள்.

தலைகுனிந்த வண்ணம் மாடத்திலிருந்து இறங்கி வந்தாள் பத்மாவதி.

வெற்றிக் களிப்போடு அனைவரையும் பார்த்தான் ரவிவர்மன். ஆனால் யாரும் அந்த வெற்றியைக் கொண்டாடுவதாக அவனுக்குத் தோன்றவில்லை.

வஞ்சியின் மன்னன் வீடு வளமிழந்து கிடக்கிறது — ரவிவர்மன் அப்படி நினைத்தான். ஆனால் வஞ்சியின் முறையான மன்னனே வளமிழந்து அதே வீட்டு மாடத்திலேதான் இருந்தான்.

யாரும் ரவி வர்மனிடம் எதையும் கேட்கவில்லை. அவனும் எந்தப் பீடிகை போட்டும் ஆரம்பிக்கவில்லை. ''ரத்த பந்தம் எனக்கும் இருக்கிறது'' என்றான்.


''மார்த்தாண்டவர்மனை நான் கொன்று விடவில்லை. அவன் எங்கிருந்தாலும் நன்றாக இருக்கட்டும்'' என்றான்.

''இந்தப் போட்டியில் நான் இறந்து போயிருந்தால் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் போலிருக்கிறது'' என்றான்.


''ஏறக்குறைய அமங்கலி போலவேதான் பத்மாவதி காட்சி அளிக்கிறாள்'' என்றான்.



அன்றும் இன்றும்



நேற்று நிறுவப்பட்டது ஜோதி யூனிபில்ட் பம்பு



இன்றே காணமுடிந்தது இன்ப நாள் இதனை


முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி யூனிபில்ட் பம்பு

வெற்றி மிகு ஜோடி



ஜோதி
யூனிபில்ட
பம்பு



ஜோதி
ஸ்டார்ட்டர்


ஆழ ஈர்ப்பு (டீப் ஸக்ஷன்) மூலம் செவ்வனே நீரிறைக்கும் திறன், அன்றாடப் பழுதுபார்ப்புத் தொல்லைக்குத் தீர்வு, மின்சாரச் செலவுகளிலே மிச்சம், நீடித்த ஆயுள்—இவை யாவும் ஜோதி யூனிபில்ட் பம்புகளிலே கிடைக்கும் முக்கிய நன்மைகள். இக் காரணத்தினால் தான் ஜோதி பம்பு காப்பியடிக்கப் படுகிறது. ஜோதி ஆராய்ச்சி நிலையத்தின் ஓயாத முயற்சிகளின் பயனாக, எப்போதுமே விவசாயிகள் இந்தப் பம்பையே கோருகின்றனர்.

ஜோதி லிமிடெட், பரோடா 390 003

quality is our creed.

everest/24rj/JY-tm


கிளை: எயர்லைன்ஸ் ஓட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 850 007.
விற்பனையாளர்கள்: வி. வி. & கோ., xxx/613, மகாத்மா காந்தி ரோடு, கொச்சி 682 016.
ஆட்டோமேட்டிக் பம்ப் ஸ்பெஷலிஸ்ட்ஸ், நம்பர் 4, பாண்டி பஜார், தி. நகர், சென்னை 600 017;
ஜயலட்சுமி டிரேடர்ஸ், நம்பர் 2, எர்ரபாலு செட்டி ஸ்ட்ரீட், சென்னை 600 001; ராஜும் & கோ.,
61, சதி ரோடு, ஈரோடு; மேலக்கடை எலக்ட்ரிகல்ஸ், 215, மெயின் ரோடு,
பெண்ணாடம் 606 105; ஆக்ட் ஏஜன்ஸீஸ், நம்பர் 8, நியூ கொழும்பு ஸ்டோர்ஸ், மாயூரம்;
:.பெர்மியர் இண்டஸ்ட்ரீஸ், 80/81, செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை 600 001;
முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோயில் ஸ்ட்ரீட், உசிலம்பட்டி.



காய்கறி
சாகுபடியாளர்களே!
புழுபூச்சிகள் உங்கள்
இலாபங்களைத்
தின்பதை இனி
நீங்கள் தவிர்க்கலாம்

ஸைதியான்*

புழுபூச்சிகளினால் உண்டாகும்
சேதத்திலிருந்து பயிர்களை சக்தி
வாய்ந்த முறையில் பாதுகாக்கிறது.



ஏனெனில் **ஸைதியான்** ஒரு சாதாரண பூச்சிக் கொல்லியல்ல.
புழு பூச்சிகளினால் ஏற்படும் ஈடு செய்ய முடியாத
சேதத்திலிருந்து உங்கள் காய்கறிச் செடிகளையும்,
இலாபத்தையும் பாதுகாக்கிறது.

ஸைதியான் பட்டவுடனே புழுபூச்சிகள் மடிகின்றன.
உங்கள் காய்கறிச் செடிகள் சொல்லத்தரமற்ற சேதத்தி
லிருந்து தப்பிக்கின்றன. **ஸைதியான்** வண்டல்களை
விட்டுவைப்பதில்லை. பயிர்ச் செழுமைக்கு உகந்த
பூச்சிக் கொல்லி...**ஸைதியான்**...நூற்றுக்கு
மேற்பட்ட புழுபூச்சி வகைகளினால் பாதிக்கப்படும்
தொண்ணூறுக்கு மேற்பட்ட பயிர்வகைகளைப்
பாதுகாக்கும், பலகாரிய பூச்சிக் கொல்லி.

CYANAMID

ஒவ்வொரு உழவருக்கும் நம்பிக்கையூட்டும் உன்னதமான பெயர்

சைனமைட் இந்தியா லிமிடெட்,
பி.ஓ. பாக்ஸ் 9109 பம்பாய் 400 025.

* Registered trademark of American Cyanamid Company, Wayne, New Jersey, U.S.A.

CIL-372 TAM

''அரண்மனையில் வந்து வாழ நீங்கள் விரும்புகிறீர்களா இல்லையா?'' என்று கேட்டான்.

அதற்கும் அவர்கள் பதில் பேசவில்லை.

''நான் வருகின்ற வழியிலெல்லாம் மக்கள் கூடி நின்று வாழ்த்தினார்கள். எனது இல்லம்தான் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது!'' என்றான்.

வரும்போதே யூதியானனை அவன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு மார்த்தாண்டவர்மன் தப்பிவிடாதபடி எல்லா எல்லைகளிலும் காவல் போட்டுவிட்டு, தனது சகோதரிகளையும், பத்மாவதியையும் அரண்மனைக்கு அழைத்துப் போகத்தான் வந்திருந்தான்.

அவர்கள் எல்லோரும் ஊமைகள் போல் நிற்பது கண்டு அவனுக்கு ஆத்திரம் வந்தது.

''ரதங்களில் ஏறுங்கள்'' என்று கூச்சலிட்டான்.

எல்லோரும் நடுங்கியபடியே தங்கள் ஆடை அணி மணிகளை எடுக்கத் தொடங்கினார்கள். சுமார் ஆறு ரதங்கள் அவர்களுக்காக வெளியிலே காத்து நின்றன. எல்லோரும் தங்கள் உடைமைகளோடு ரதங்களுக்குச் சென்றபோது மெதுவாகச் சாலியூர்த் தாவளி ரவிவர்மன் அருகிலே வந்தாள்.

''தம்பி! இல்லத்தை முழுதும் ஒழுங்குபடுத்திவிட்டு நாளை நான் வருகிறேன்'' என்றாள்.

''ம்'' என்று சொன்ன ரவிவர்மன் அடிமைகளுக்கு வழி காட்டுவது போல் அவர்களனைவருக்கும் வழிகாட்டினான்.

சாலியூர்த் தாவளியைத் தவிர, மற்ற அனைவரும் ரதங்களில் ஏறி அமர்ந்தனர்.

என்ன கருணையோ, பத்மாவதியைத் தன் ரதத்தில் ஏற்றிக் கொண்டான் ரவி வர்மன்.

ரதத்தில் ஏறியதும் தேரோட்டியைப் பார்த்து ரவிவர்மன், ''அங்கதா, எங்களை அரண்மனையில் இறக்கி விட்டு நீ திரும்பி வந்து இங்கேயே நின்றுகொள். எனது சகோதரிக்குத் தேவையானால், இந்த ரதத்தை எடுத்துக் கொண்டு போ!'' என்றான்.

ரதத்தை ஓட்டுகிறவன்தான் அங்கதனா? அவனையா திரும்பி இந்த இல்லத்துக்கு வரச் சொல்கிறான்?

பகவதி அம்மனே மார்த்தாண்டவர்மனுக்குக் கருணை காட்டுவது போல் பத்மாவதிக்குத் தோன்றியது.

'ஆனால் இவன்தான் அங்கதன்என்று சாலியூர்த் தாவளிக்குத் தெரியாதே? மார்த்தாண்டவர்மன் அங்கிருப்பது அங்கதனுக்கும் தெரியாதே? பகவதி அம்மா இந்த வாய்ப்பு நழுவி விடக்கூடாதே' — நெஞ்சு படபடக்கப் பகவதியம்மனை வேண்டிக் கொண்டாள் பத்மாவதி.

''அங்கதனிடம் துணிந்து விஷயத்தைச் சொல்லலாம். அவ்வளவு நம்

கிரிக்கெட் ராமன்!



[சாப்பாட்டு ராமர்கள் மன்னிப்பார்களாக!]

★ ஒரு தடவை எதிர்க்கட்சி பௌலர் பவுன்சராய்ப் போட்டுத் தள்ளி ராமனைத் துன்புறுத்திக் கொண்டிருந்தார். கடைசியில் ஒரு பந்து நெஞ்சில் பட்டுக் கீழே விழுந்தான் ராமன். பிறகு சமாளித்து எழுந்தான்.

அம்பயர் ''ரெடியா?'' என்றார்.

''நான் ரெடி; ஆனால் சைட் ஸ்கிரீனைக் கொஞ்சம் நகர்த்த வேண்டும்'' என்றான்.

''எப்படி நகர்த்த வேண்டும்?''

''எனக்கும் பௌலருக்கும் நடுவில்!''

★ மற்றொரு நாள் மேட்சின்போது 'இருட்டுகிறது; வெளிச்சம் போதவில்லை' என்று புகார் செய்தான். அம்பயர் அந்தப் புகாரை ஏற்றுக் கொள்ளவில்லை.

ராமன் பேட் செய்து கொண்டிருந்தான். ரன்னர், ''வெளிச்சம் சரியில்லை. கவனித்து ஆடு'' என்று கூறினான்.

ராமன் அம்பயரைக் கிண்டல் செய்ய, ''ஒழுங்காக ஆடுவேன். ஆனால் நீ எங்கிருந்து பேசுகிறாய், தெரியவில்லையே!'' என்றான்.

★ ஒரு தடவை ஒரு மேட்சில் ராமன் ஒரு ரன் எடுத்தான். ''ஏன் இவ்வளவுதான் எடுத்தாய்?'' என்றதற்கு அவன் பதில்:

''போன தடவை 99 எடுத்து விட்டேன். அதனால்தான்.''

★ ராமன் அடிக்கடி காட்ச் கோட்டை விடுவான். ஆனால் ஒரு தடவை பந்தைக் கஷ்டப்பட்டுப் பிடித்து விட்டான். ஆனால் அம்பயர் அவுட் கொடுக்கவில்லை. காரணம் அது 'நோ பால்!'

★ ஒரு சமயம் ராமன் செஞ்சுரி அடித்ததற்காகப் பாராட்டுக் கூட்டம் நடந்தது. ஒருவர் அவனைப் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தார். ராமனுக்குப் பொறுக்கவில்லை. எழுந்து கூறினான்: ''அவர் சொல்லுவதை நம்பாதீர்கள். பௌலர்களுக்கு நேற்றிரவு டின்னருக்குச் செய்த செலவு எனக்கு அல்லவா தெரியும்?''

—வி. ராதாகிருஷ்ணன்

பிக்கையானவன்'' என்று தம்பி மார்த்தாண்ட வர்மன் கூறியிருக்கிறான்; ஆனால் எப்படிச் சொல்வது?

அரண்மனை சென்று இறங்கியதும் தானும் உள்ளே வரும்வரையில் தன் நாயகனும் வெளியே நின்று கொண்டிருந்தால்...?

அவள் சிந்தித்து முடிப்பதற்குள், ரதம் அரண்மனை வந்து சேர்ந்தது.

மூத்த தாவளி, இளைய தாவளி, மூரின்னூர் தாவளி, பள்ளி விருத்தித் தாவளி ஆகிய நால்வரும் தங்கள் பொருட்களை எடுத்துக் கொண்டிருக்கும் போது, ரவிவர்மன் கீழே இறங்கிப் பத்மாவதியை உள்ளே அழைத்தான்.

பத்மாவதி எதையோ தவற விட்டவள் போல் ரதத்திலே தேடிக்கொண்டிருந்தாள்.

''என்ன தவறிற்று? ஏதாவது அபசகுனமா?'' என்றான் ரவிவர்மன்.

''இல்லை.... கணையாழியைக் காணவில்லை.'' என்று இழுத்தாள் பத்மாவதி.

''நல்லது. அங்கதனிடம் சொல்லியனுப்பு'' என்றான் ரவி வர்மன்.

''அது மணநாள் கணையாழி. நானே போய்...'' என்று நடுங்கியபடியே கூறினாள் பத்மாவதி.

''போ, போ!'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான் ரவிவர்மன்.

தாவளி சகோதரிகளும் உள்ளேசென்றார்கள்.

பத்மாவதிக்கு உயிர் வந்தது.

ரதத்தில் ஏறி அமர்ந்தாள்.

ரதம் போய்க் கொண்டிருக்கும் போதே அங்கதனிடம் கூறினாள்: ''அங்கதா, உன்னைப் பற்றி மாமாவும் சொல்லியிருக்கிறார், தம்பி மார்த்தாண்ட வர்மனும் சொல்லியிருக்கிறான். உன்னிடம் இரகசியத்தைச் சொல்லி விடுகிறேன். தம்பி மார்த்தாண்ட வர்மனும், மெல்லிளங் கோதையும் எங்கள் இல்லத்தில்தான் இருக்கிறார்கள்.''

திடீரென்று ரதம் நின்றது.

அங்கதன் திரும்பிப் பத்மாவதியைப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வடிந்தது. விம்மி விம்மி அழுதான். நன்றி மிக்க அந்த ஊழியன் அடக்கி வைத்திருந்த துயரங்களெல்லாம் ஆறாகப் பெருகின.

பத்மாவதியின் கண்களும் கண்ணீர் வடித்தன.

''ரதம் போகட்டும்; எல்லோரும் பார்க்கிறார்கள்'' என்றாள் பத்மாவதி.

எப்படியாவது மார்த்தாண்ட வர்மனை எல்லை கடந்து கொண்டு போவதற்கு அவன்தான் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, ரதம் இல்லத்தின் வாசலில் வந்து நின்றது.

தாழிடப்பட்ட கதவை அவள் தட்டியபோது தயங்கியபடியே திறந்தாள் சாலியூர் தாவளி.

மார்த்தாண்ட வர்மனும் மெல்லிளங் கோதையும் மாடத்திலிருந்து மெதுவாக எட்டிப் பார்த்து, திரும்பி வந்திருப்பது பத்மாவதிதான் என்பதை அறிந்து கொண்டார்கள்.

பின்னாலேயே அங்கதனும் உள்ளே நுழைந்தான்.

கதவைத் தாழிட்டாள் பத்மாவதி.

அங்கதனைக் கண்டதும் மாடத்திலிருந்து இறங்கி வந்தான் மார்த்தாண்ட வர்மன்.

மார்த்தாண்டவர்மனைக் கண்டதும் அவன் கால்களில் விழுந்து கதறி அழுதான் அங்கதன்.

தான் ரதத்தைத் திருப்பி அனுப்புவதாகவும், பத்திரமாக எல்லை கடந்து போய் விடும்படியும் கூறி ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அதே ரதத்தில் அரண்மனையில் வந்து இறங்கிக்கொண்டாள் பத்மாவதி.

அங்கதன் திரும்ப இல்லம் வந்து சேர்ந்தபோது, சாலியூர்த் தாவளி மார்த்தாண்ட வர்மன், மெல்லிளங் கோதை மூவரும் புறப்படத் தயாராக இருந்தார்கள்.

ரதத்துக்குத் திரையிட்டு உட்புறத்தில் மார்த்தாண்ட வர்மனையும் மெல்லிளங் கோதையையும் அமர்த்தி, முன்புறத்தில் அமர்ந்து கொண்டாள் சாலியூர்த் தாவளி.

ரதம் அகஸ்தீசுவரம் நோக்கிப் புறப்பட்டது.

அகஸ்தீசுவரம் காட்டிலுள்ள ஆசிரமம் பற்றி ஏற்கனவே நாராயண நம்பூதிரி மார்த்தாண்ட வர்மனிடம் கூறியிருந்தார்.


வஞ்சி நகரத்தின் எல்லையில் ஒவ்வொரு ரதத்தையும் சோதித்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள், ரவிவர்மனின் வீரர்கள்.

அங்கதன் ஓட்டிய ரதம் அங்கே வந்து நின்றது.

முன்னால் சாலியூர்த் தாவளியைப் பார்த்ததும் சில வீரர்கள் சோதனை போடத் தயங்கினார்கள். ஆனால் ஒரு வீரன் மட்டும், ''மன்னிக்க வேண்டும். எல்லா ரதங்களையும் சோதனை யிடும்படி மகாராஜா ரவிவர்மனின் கட்டளை'' என்றான்.

சாலியூர்த் தாவளிக்கு உயிரே நின்று விடும்போல் தோன்றியது. (தொடரும்)





சேஷசாயி பேப்பர் மில் காலனி கோயில் கும்பாபிஷேகம்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியைப் பின்பற்றிச் சேஷசாயி பேப்பர் மில் நிறுவனம், சேலம் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் குடியிருப்பை ஏற்படுத்தியதும், விநாயகரும், வள்ளி முருகனும், ஸ்ரீ சீதா ராமனும் நவக்கிரகங்களோடு சிவா விஷ்ணு ஆலயம் கட்டிக் கொண்டு குடிவாழ திருவுள்ளம் கொண்டு விட்டார்கள். இவர்களுடைய நூதன ஆலயக் கும்பாபிஷேகம் 12-4-76 அன்று விமரிசையாக நடக்கவிருக்கிறது. இத் திருப்பணியில் பங்கு கொண்டு நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: **ஸ்ரீ ஜி. எஸ். ஜி. ரங்கன், தலைவர், SPB காலனி கோயில் திருப்பணிக் கமிட்டி, ஈரோடு-7**

பொன்னியின் புதல்வர்



சுந்தா

28.

ராஜாஜி இலக்கியம்

ஆக்கலுக்கு ஆற்றலுடன் அன்பர் தரும்
ஊக்கமும் உறுதுணையாம்

விடுதலை அடைந்த இந்தியாவின் முதலாண்டு நிறைவைக் கொண்டாடிய கல்கி சுதந்திர மலரில் கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் சிறுகதை ஒன்று சிறப்பிடம் கொண்டிருந்தது. அதைப் பற்றி அடுத்த இதழின் ''உபயகுசலோபரி'' பத்தியில் விசேஷக் குறிப்பு ஒன்றைக் கல்கி ஆசிரியர் வெளியிட்டார்.

புதுடில்லியில் ஆசியாவிலேயே மிகப்பெரிய மாளிகையில் வசித்தாலும், ராஜாஜியின் மனம் தமிழ்நாட்டுக் கிராமத்திலுள்ள ஏழை மனிதனிடம் நிலைத்து நிற்கிறது என்பது அக்கதையிலிருந்து தெளிவாகிறது. சுதந்திர இந்தியாவின் மக்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் குறிப்பாக அக்கதை விளக்குகிறது.

எவ்வளவு பெரிய ஒப்பிலா உன்னதம் வாய்ந்த ஸ்தானத்தை வகித்தாலும், தமிழையும் தமிழர்களையும் மறந்து விடவில்லை ராஜாஜி என்பதற்குப் ''பிள்ளையார் காப்பாற்றினார்'' என்ற கதையே அத்தாட்சி. வேறு யாரும் இவ்விதம் கிராமாந்தரத்து ஏழை மக்களின் சுக துக்கங்களை விளக்கும் கதையை, இவ்வளவு அனுதாபத்துடனும் கலைப் பண்புடனும் எழுதி இருக்க முடியாது. இடைவிடாத எத்தனையோ பொறுப்பு வாய்ந்த அலுவல்களுக்கு இடையில் இந்தத் தமிழ்க் கதையை எப்படி எழுத முடிந்தது என்பது ஆச்சரியம் உண்டாக்கும் விஷயம் தான். (22-8-48)

சுதந்திர இந்தியா தனக்குத் தானே நிர்ணயித்துக் கொண்ட அரசியல் அமைப்பின்படி பாரதக் குடியரசாக 1950 ஜனவரி 26ம் தேதியன்று பரிணமித்தபோது, அதைக் கொண்டாடியும் சிறப்பு மலர் ஒன்றைக் கல்கி வெளியிட்டார். அதிலும் ''தர்மமே ஜயம்'' என்ற ராஜாஜியின் கட்டுரை ஒன்று சிறப்பிடம் கொண்டது.


அந்தக் கட்டுரையை எழுதி அனுப்புகையில் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி, குடியரசு பரிணமித்த தினத்தில் அப்பதவியில் இல்லை. அந்தக் குடியரசு மலரிலேயே கல்கி எழுதியது போல்—

இந்தச் சுபதினத்திலே, இந்தியக் குடியரசு ஜனனத்தை, கவர்னர் ஜெனரல் ராஜாஜி உலகத்துக்குப் பிரகடனம் செய்து விட்டு, அதிகார பீடத்திலிருந்து விலகி, அதைக் காட்டிலும் மகோன்னதமான மக்களின் ஹிருதய பீடத்தில் நிரந்தரமான ஸ்தானத்தை ஏற்கிறார்.

இந்தியக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி, பாபு ராஜேந்திரப் பிரசாத், மக்களின் ஏகோபித்த மதிப்பையும் அன்பையும் ஆதரவையும் பெற்றுச் சிம்மாசனம் ஏறுகிறார்...

மங்களத் திருநாள் புலர்ந்தது!
மக்கள் அரசு மலர்ந்தது!

இவ்வாறு மகிழ்ச்சி பொங்கக் கல்கி எழுதியபோதிலும் ராஷ்டிரபதியாய் ராஜாஜி வரவில்லையே என்று உள்ளூற அவருக்குச் சொல்லொணாத வருத்தம். அப்பதவியை ராஜாஜியே வகிப்பார் என்றும், பிரதம மந்திரி நேரு அதையே பெரிதும் விரும்பி ஆதரவு தேடுகிறார் என்றும் சில வாரங்களாய்ச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. அதே



சமயம் அதற்கு மாறுகவும் வந்துகொண்டிருந்தன. நிச்சயமான செய்தியை முன்கூட்டியே கல்கி அறிந்து கொள்ள எண்ணி ராஜாஜிக்கே கடிதம் எழுதிக் கேட்டார் போலும். அதற்கு அவரிடமிருந்து வந்த பதில்:

(28-12-49) நான் ராஷ்டிரபதி பதவிக்கு ''நிற்கவில்லை'' என்பதை இனி நீங்கள் எழுதிவிடலாம்.

ராஜன்பாபு ஓரளவு இந்தப் பதவியை விரும்பும்போது நான் நிற்க இஷ்டப்படவில்லை. முக்கியஸ்தர்கள் ஏகமனதாகக் கூடியவரை வற்புறுத்தியும், அவர்கள் மனம் ஸ்திரமாகத் திரும்பவில்லையாதலால் இந்த முடிவு.

ஆகையால் ஜனவரி 26-க்குப் பிறகு நான் சென்னை வாசம் என்று நீங்களும் உங்கள் மடத்தாரும் (கல்கி வட்டாரத்தார்) அறிய வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில், நான் இந்த முடிவுக்குச் சென்ற சரஸ்வதி பூஜை நாளிலேயே வந்து விட்டேன்.

இதனுல் உண்டான ஏமாற்றத்தை மனத்துக்குள் கல்கி அடக்கிக் கொண்டு தமது அடுத்த இதழின் ''என்ன சேதி?'' என்ற பத்தியில் ஒரு நல்ல சேதியாய் அதை மாற்றி அறிவித்தார்:

ஆங்கிலப் புது வருஷத்தின் ஆரம்பத்தில் நேயர்களுக்கு ஒரு நல்ல செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேம். சில வருஷங்களாக நம்மைப் பிரிந்து நெடுந்தூரத்திலிருந்த நம்முடைய தலைவர் ராஜாஜி அவர்கள், ஜனவரி 26-க்குப் பிறகு தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்து விடுவார்கள். இந்தியக் குடியரசின் முதல் தலைவர் பதவிக்கு அவர்கள் 'நிற்பதில்லை' என்ற திட்டமான முடிவுக்கு வந்து விட்டார்கள். ராஜாஜியின் மன நிலையையும் வாழ்வு நெறியையும் நன்கு அறிந்திருப்பவர்களுக்கு, இந்த முடிவு பற்றிச் சிறிதும் வியப்பு ஏற்படாது...

கவர்னர் ஜெனரல் பதவியாகட்டும், பிரஸிடெண்ட் வேலையாகட்டும், ராஜாஜியின் உளப் போக்குக்கு உகந்ததாக இருக்க முடியாதுதான். தவிர்க்க முடியாத கடமையாகத் தலையில் சுமந்ததினுலேதான் இத்தனை காலமும் ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை வகித்து வந்தார்கள். விட்டு விலக ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், அதைப் பயன் படுத்திக் கொள்ளவே அவர்கள் விரும்புவார்கள்.

நமது ஒப்பற்ற தலைவருக்குத் தமிழ் மக்களின் சார்பாக நல்வரவு கூறுகிறேம். இனித் தமிழ்நாட்டில் வந்து தங்கி, அவருடைய மனத்துக்கு உகந்த தமிழ் இலக்கியத் தொண்டில் ஈடுபட்டு நம்மை மகிழ்விக்குமாறு வேண்டுகிறேம். (8-1-50)

இந்த வேண்டுகோளை நேரிலும் கல்கி விடுத்ததன் பயனுக ''ராமகிருஷ்ண உபநிஷதம்'' என்ற தொடர் கட்டுரையை ராஜாஜி எழுதி உதவினர். அந்த ஆண்டு மார்ச் 19ந் தேதிய கல்கி இதழில் ஆரம்பமாயிற்று அந்த மெய்ஞ்ஞான இலக்கியம். அதை வாசகர்களுக்குக் கல்கி வழங்கி முகவுரை எழுதுகையில் ''தெய்வ மனிதர்'' எனப் பரமஹம்ஸரை வர்ணித்தார். அந்தத் தெய்வ மனிதரின் மகிமையை உணர்ந்தவர், உணர்த்த வல்லவர் ராஜாஜி என்றுர்:

- ராமகிருஷ்ண உபநிஷதம் பின்னுல் ஞானமொழி என்ற தலைப்பில் கல்கி காரியாலயத்தின் இலவச வெளியீடாகப் பிரசுரமாயிற்று.
- சக்கரவர்த்தித் திருமகள் புத்தகத்தின் அட்டைப் படம்.
- பதவியிலிருந்தாலும், ஓய்வுபெற்றிருந்தாலும் ஆன்மிக இலக்கியப் பணியில் ஈடுபட்டிருந்த ராஜாஜி.
- வியாசர் விருந்து ஆரம்ப நாளில் கல்கியில் பிரசுரமானபோது...



மர்மச் சிறுகதைப் போட்டி

இந்த மர்மச் சிறுகதைப் போட்டியில் அறிமுக எழுத்தாளர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். அதாவது போட்டிக்குக் கதையை அனுப்பும்போது இவர்களது கதை, கட்டுரைகள் அச்சில் வந்திருக்கக் கூடாது. இதற்கான உறுதிமொழியுடன் தழுவலோ மொழிபெயர்ப்போ அல்ல என்பதற்கான உறுதிமொழியையும் சிறுகதையுடன் இணைக்கவும்..

முதல் பரிசு ... ... ரூ. 250.00
இரண்டாவது பரிசு ... ... ரூ. 150.00
மூன்றாவது பரிசு
இரு கதைகளுக்கு ரூ. 100 விதம் ... ரூ. 200.00

முடிவு தேதி : ஏப்ரல் 30உ

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகள் இணைக்க வேண்டும். கடிதப் போக்குவரத்து கிடையாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 031

வேத உபநிஷதங்கள் இறைவனின் இயல்பை உணர்த்தும் புண்ணிய நூல்கள். அவற்றை நம் போன்ற பாமர மக்களுக்கு உணர்த்த ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர் போன்ற மகான்கள் பாஷ்யங்களும் வியாக்கியானங்களும், எழுதினார்கள். மனிதனுக்கு வாழ்க்கை நடத்தும் விதத்தை எடுத்துக் காட்டும் நூல் பகவத்கீதை. அதை நம் போன்றவர்கள் உணர்வதற்குப் பல பெரியோர்கள் வியாக்யானம் செய்திருக்கிறார்கள். ''கண்ணன் காட்டிய வழி'' இன்னதென்பதை நாம் நன்கு தெரிந்து கொள்ளும் பொருட்டு நம்முடைய காலத்தில் நாம் அறிந்த மகானாகிய ராஜாஜி, வழிகாட்டும் நூல் எழுதியிருக்கிறார். உபநிஷதங்கள் விவரிக்கும் பரம்பொருளின் சொரூபத்தை ''உபநிஷதப் பலகணி'' மூலமாக நாம் ஓரளவு பார்க்கும்படி செய்திருக்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசங்களுக்கு அதேவிதமான தொண்டை ராஜாஜி இப்போது செய்ய முன்வந்திருக்கிறார்.

இதில் குறிப்பிட்டுள்ள இரண்டு நூல்களில் ஒன்றை முன்பு ஆனந்த விகடனில் கல்கி விமரிசனம் செய்கையில், ''கண்ணன் காட்டிய வழி'' இன்னதென்பதை வெகு தெளிவாக அந்தப் புத்தகத்தில் ராஜாஜி விளக்கியிருக்கிறார் என்றும், ஆனால் அதைவிடத் தெளிவாக அவருடைய வாழ்க்கையிலேயே, அந்த வழியைத் தாம் காண்பதாகவும் எழுதினார்.

அதே விமரிசனத்தில், தாம் அண்மையில் வெளியிட்ட ராஜாஜியின் இரண்டு கட்டுரைகள் பற்றியும் குறிப்பிட்டார். விவாகம் பற்றிய விவேக சிந்தனைகள் அடங்கிய கட்டுரைகள் அவை. கைக்கு வந்ததும் அவற்றைக் கல்கி படித்துப் பார்த்தபோது, ''வேத மந்திரங்களை வாசிப்பதுபோல்'' தோன்றியதாம்—

அவ்வளவு உண்மையின் வன்மையையும், அவ்வளவு இலக்கிய மேன்மையையும் அக்கட்டுரைகளில் காண்கிறோம். எங்கேயாவது ஒரு சொல் அதிகப்படி உண்டா? ஓர் எழுத்துத்தான் அதிகமாக உண்டா? கிடையாது.

தமிழ் இலக்கியத்தின் இரண்டு முக்கியமான பகுதிகள் கட்டுரைகளும் சிறுகதைகளுமே. ஆச்சாரியாரின் கட்டுரைகளைப் போலவே சிறுகதைகளும் இலக்கிய மேன்மையின் சிகரத்தை அடைந்திருக்கின்றன. (அவருடைய) ''அன்னையும் பிதாவும்'' என்னும் கதையைப் படித்திருப்பீர்கள். அதற்கு இணையான இலக்கிய மேன்மை பொருந்திய சிறுகதை, உலகத்திலே எந்த பாஷையிலும் வெகு சிலவே இருக்கக்கூடும். (26-4-36)

மின்னலடிக்குது ஸூப்பர் ரின்... வெண்மை
ஓங்குது மேன் மேலும் !



ஸூப்பர் ரின் டிட்டர்ஜெண்ட் வில்லை: நீங்கள் இதுவரை உபயோகித்த எந்த டிட்டர்ஜெண்ட் வில்லையையும் விட, எந்த சோப்பையும் விட அதிக வெண்மை... ஒரே சலவையில் காண்பீர்கள் அந்த உயர்வை. அதோடல்ல. மின் வெண்மை மயமான ஸூப்பர் ரின் வெண்மை... சலவைக்கு சலவை அதி வெண்மை. செழிப்பான நுரை கொழித்து அதிக வெண்மையூட்டுவதற்கான பொருள்கள் அடங்கியது ஸூப்பர் ரின் ஒன்றுதான்—காத்திருந்த வெண்மையினைக் கைக்கெட்டச் செய்கிறது உங்களுக்கு.

கொடுக்கும் பணத்திற்குக் கூடுதலான வெண்மை-தருவது ஸூப்பர் ரின்

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லிண்டாஸ்-RIN. 19A-140 TM

கடைக்குப் போன அம்மா, தன் பெண்ணுக்கு, அதிக விலைகொண்ட ஒரு கவுனை வாங்கினாள். வீட்டுக்குத் திரும்பும்போது பெண் அம்மாவிடம் மெதுவாகக் கேட்டாள்: "அப்பாவிடம் எதை அம்மா முதலில் காண்பிப்பது? புது கவுனையா? அல்லது என் பிராக்ரஸ் ரிப்போர்ட்டையா?" — *சாமி*



இதற்கு எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வெளியான ராஜாஜியின் கதை கட்டுரைத் திரட்டுக்களுக்குத் தமது சொந்தப் பத்திரிகையில் கல்கி ஒரு மதிப்புரை எழுதினார் — ராஜாஜியின் இலக்கியத்துக்கு ஏற்ற இலக்கிய மதிப்புரை:

வாழ்க்கை முறையில் எளிமையும் சிந்தனையில் உயர்வும் உடையவர்களே, உலகில் மகான்கள் என்று போற்றப்படுகிறார்கள். எளிய வாழ்வுக்கும் உயரிய சிந்தனைக்கும் ராஜாஜி உதாரண புருஷராக விளங்குகிறார். இந்த இரண்டு அம்சங்களையும் அவருடைய தமிழ் நடையிலும் காண்கிறோம்.

எளிமை என்றால், இதைவிட எளிமையாகத் தமிழ் எழுதவே முடியாது என்று சொல்லலாம். ஆனால், நடை எவ்வளவுக்கு எளியதோ, அவ்வளவுக்கு ராஜாஜி எழுதும் விஷயங்கள் உயர்வானவை. இன்னும் ராஜாஜியிடம் நாம் காணும் ஒப்பற்ற தூய்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, விவேகத் திட்டம் ஆகியவற்றையும் அவருடைய தமிழ் நடையிலே காண்கிறோம். இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக, ராஜாஜியின் பெயர் பெற்ற அறிவுத் தெளிவையும் அவரது நடையில் காண்கிறோம்.... மலைச் சுனையில் உற்பத்தியாகிப் பாறைகளின் மீதும் கூழாங்கற்களின் மீதும், சலசலவென்று சப்தித்துக்கொண்டு ஓடும், பளிங்கு போன்ற தூய்மையான ஓடை நீரில், எத்தகைய தெளிவை நாம் காண்கிறோமோ, அத்தகைய தெளிவை ராஜாஜியின் தமிழ்நடையில் காண்கிறோம்....

இன்னும் நூறு வருஷத்துக்குப் பிறகு வரும் தமிழ் சந்ததிகள் படிக்கக்கூடிய நூல்கள் எவை என்று கேட்டால், பாரதியாரின் கவிதைகளும், ராஜாஜியின் கதைகள் கட்டுரைகளும் தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

(16-7-44)

இந்த மதிப்புரையின் இறுதியில், ராஜாஜியின் நூல்களை வெளியிட்ட புதுமைப் பதிப்பகத்தாரை, "பாக்கிய சாலிகள்" என்று கல்கி பாராட்டினார். அந்தப் பாராட்டு பன்மடங்காகக் கல்கிக்கே பொருந்தும். இந்நூல்களில் அடங்கிய கதை கட்டுரைகளில் பெரும்பாலானவற்றை அவரேதான் முதலில் சஞ்சிகை வாயிலாக வெளியிட்டவர். வெளியிட்டவர் மட்டுமல்ல; வேண்டியும் ஊக்கியும் அவற்றைத் தோற்றுவித்தவரும் அவரே. இந்த நூல்களுக்குப் பொருந்துவது ராஜாஜியின் தமிழ் நூல்களில் பெரும்பாலானவற்றுக்கும் பொருந்தும்.

இவ்வகையில் தாம் அடைந்த பாக்கியம் எவ்வளவு என்பதை முன் குறிப்பிட்ட ராமகிருஷ்ண உபநிஷதம், சென்னை ராமகிருஷ்ண மடத்தின் பிரசுரமாகப் புத்தக வடிவில் வரவிருந்த தருணத்தில் தமது வாசகர்களுக்குக் கல்கி அறிவித்தார்:

தமிழர்களுக்கு எத்தனையோ அரிய தொண்டுகளைக் "கல்கி" புரிந்திருக்கிறது. ஆனாலும் அத்தொண்டுகளில் எல்லாம் தலைசிறந்த தொண்டு, ராஜாஜி அவர்கள் எழுதிய ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷதத்தை வெளியிட்டதுதான் என்று கருதுகிறோம். மனிதர்களுக்குப் பூர்வஜன்மம் உண்டு என்பது போல், பத்திரிகைகளுக்கும் உண்டு என்றால் "கல்கி" பூர்வஜன்மத்தில் செய்த புண்ணியத்தினாலேயே, ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷத்தை வெளியிடும் பாக்கியம் நமக்குக் கிடைத்தது என்போம். ஒரு மகா புருஷரின் போதனைகளை இன்னொரு மகான் தொகுத்து எழுதியவை இந்த அற்புதமான கட்டுரைகள்.

(கல்கி இதழ் 19-11-50)

இதற்கு ஒப்பான பாக்கியத்தை — நூலின் அளவுப்படி இதை விடப் பெரிதான பாக்கியத்தை — இதற்கு முன்னாலேயே ராஜாஜியின் "வியாசர் விருந்து" கதைத் தொடரைத் தமது பத்திரிகையில் வெளியிட்டதின் மூலம் கல்கி அடைந்திருந்தார். அந்தத் தொடர், 1943 டிசம்பர் முதல் தேதிய கல்கி இதழில் தொடங்கி, 1946 மே 19 தேதிய இதழில் நிறைவுபெற்றது. அரசியல் துறையில் ராஜாஜிக்குச் சோதனையும் வேதனையும் மிகுந்ததாய் இருந்த காலம் அது. இந்த வரலாற்றின் முந்திய அத்தியாயங்களிலிருந்தே இதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். அத்தகைய காலத்தில் வியாசரைப் பின்பற்றி மகாபாரதத்தை எழுதக் கிடைத்த வாய்ப்பு, மனச் சாந்தி யளிக்கும் மாமருந்தாக ராஜாஜிக்கு உதவிற்று. அதன் முடிவுரையில் அவரே இதைக் குறிப்பிட்டார்:

நம்முடைய நாட்டின் இரண்டு பழம்பெரும் காப்பியங்களில் ஒன்றும், அற்புதங்

விவாத மேடை :

மதக் கோட்பாடுகளின் நோக்கில் குடும்பக் கட்டுப்பாடு.

கடிதங்கள் அனுப்ப முடிவு தேதி :

15 – 4 – 76

களும் பேரற்புதமுமாகிய மகாபாரதத்தைச் சரியாகச் சொல்லக் கேட்டுத் தமிழ் மக்கள், அறிவும் அடக்கமும், ஆத்ம சக்தியும், மகிழ்ச்சி நிறைந்த முறையில் அடைய வேண்டும் என்பது என் ஆசை. இந்த நோக்கத்தை என் எழுத்து எவ்வளவு தூரம் பூர்த்தி செய்ததோ அது என்னால் சொல்ல முடியாது. ஆயினும், பயத்துடனும் பக்தியுடனும் என் சக்தி முழுதும் செலுத்தித் தமிழ் மக்களை எதிரில் வைத்துக் கொண்டு கதை சொல்லுவது போல் எண்ணி, வாரா வாரம் எழுதி வந்தேன். அது எனக்கு அளவற்ற மன ஆறுதலும் மகிழ்ச்சியும் தந்து கொண்டு வந்தது.

(கல்கி இதழ் 19-5-46)

மிக விரைவிலேயே ''வியாசர் விருந்து'' புத்தக வடிவில் தமிழ்ப் பண்ணையின் வெளியீடாக வந்தது. ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியாரின் பங்களாவில் பெரிய எடுப்பாக அமைந்த அதன் வெளியீட்டு விழாவில், பாரதத்திலிருந்தே உவமை சொல்லி ராஜாஜி பேசினார்:

முதன் முதலாகக் கல்கி ஆசிரியரின் தூண்டுதலின் பேரிலேயே இந்த மகாபாரதக் கதைகளை எழுத ஆரம்பித்தேன். பிறகு கல்கிப் பத்திரிகையில் இரண்டரை வருஷ காலம் தொடர்ந்து எழுதி வந்தேன். அந்தக் கதைகளை இப்போது தமிழ்ப் பண்ணையில் புத்தக ரூபமாக வெளிவந்திருக்கிறது. எப்படி கங்கா தேவி, தனக்குப் பிறந்த எட்டாவது குழந்தையாகிய பீஷ்மரைக் கொஞ்ச காலம் வளர்த்த பிறகு, சந்தனு மகாராஜாவிடம் ஒப்படைத்தாரோ, அம்மாதிரி கல்கி ஆசிரியர், நமது பத்திரிகையில் இரண்டரை வருஷ காலமாக வளர்த்து வந்த ''வியாசர் விருந்து'' குழந்தையை, இன்று தமிழ்ப் பண்ணை சந்தனுவிடம் ஒப்படைத்துவிட்டார்.

(2-6-46 கல்கி இதழில் சாவி எழுதியபடி)

அப்படி ஒப்படைத்த குழந்தை ஓர் அதிசயக் குழந்தையாகத் தமிழ்ப் புத்தக உலகில் அற்புத சாதனை புரிந்தது. பதிப்புக்கு மேல் பதிப்பாக அந்த நூல் வெளியாகி ஆயிரம் ஆயிரமாக விற்றது. பின்னர் ''தினமணி'' மலிவுப் பதிப்பாக வெளியாகி ஒரு லட்சம் பிரதிகள் விரைவிலேயே விற்றுப் போயின. வேறு எந்தத் தமிழ் வசன நூலும் அடைந்திராத விற்பனை இது. இன்னமும் இந்தப் புத்தகம் ''மகா பாரதம்'' என்ற மகுடத்துடன் வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள வடிவில் நிறைய விற்பனையாகிறது. இதே பதிப்பகத்தின் வெளியீடான ராஜாஜியின் ''ராமாயணம்'' நூலும், மகா பாரதத்துக்கு இணையாக விற்கிறது. (சாகித்திய அகாதமி பரிசு பெற்ற புத்தகம் இது.)

முதலில் இந்த ''இராமாயணம்'', ''சக்கரவர்த்தித் திருமகன்'' என்ற மகுடத்துடன் கல்கிப் பத்திரிகையில் தொடராக வெளியாயிற்று — 1954 மே 23ந் தேதிய இதழிலிருந்து. மொத்தம் 93 அத்தியாயங்கள். அவற்றில் 42 அத்தியாயங்கள் மட்டுமே கல்கி பார்த்து வெளியிட்டவை. 43ம் அத்தியாயத்தைப் பார்ப்பதற்கு முன்பே அவர் காலமாகி விட்டார்.

உணர்ச்சி மிக்க சில வாக்கியங்களைத் தொடரின் முடிவுரையில் ராஜாஜி வரைந்தார்.

துன்பம் என்ன! இன்பம் என்ன! எல்லாம் ஈசுவர லீலை....

பிராட்டியினின்று பிரிந்தபோது சக்கரவர்த்தித் திருமகன் துயரம் அடைந்தான். அயோத்தியை விட்டுப் பிரிந்த போது துக்கப் படவில்லை. அதைப் போலவே என்னளவில் என் சொந்தக் கதையும். பலவிதப் பணிகளிலும் பொறுப்புக்களிலும் பதவிகளிலும் நான் இருந்து பிரிந்திருக்கிறேன். பிரிந்தவுடன் இனிமேல் செய்வது என்ன என்று தோன்றாமல் குழப்பம் அடையவில்லை. ஆனால் இப்போது சக்கரவர்த்தித் திருமகன் கதையைச் சொல்லும் பணி முடிந்து போனதும், மூர்த்தி இல்லாத கோயிலைப் போல் எல்லாம் ஏதோ வெறித்துப் போன மாதிரி இருக்கிறது. பணியற்ற வாழ்வின் கதி இது என்பதை யாவரும் தெரிந்துகொள்ள வேண்டும். பணியைப் பாரமாக நினைக்க வேண்டாம். பணியே உயிருக்கு உயிர் தரும் ரகசியம்.


(கல்கி இதழ் 6-11-55)

இந்த ரகசியத்தைச் சொன்னவர், இலக்கியத் துறையிலும் அரசியல் துறையிலும் தொடர்ந்து அரும் பெரும் பணிகள் செய்து நெடுவாழ்வு வாழ்ந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதே முடிவுரையில் இன்னோர் இடத்தில், ராமாயணத்தைத் தாம் எழுத வாய்த்தது, ''கடவுள் பணி ஆனபடியினால் 'இதற்கு வேண்டிய உடல் நலமும் மன அமைதியும் அருளப் பெற்றேன்'' என்று ராஜாஜி எழுதி

வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

தலைவலி உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO

ASPRO
Nicholas

மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.66 TM

ஸ்ரீ மல்லிகேசுவரர் கும்பாபிஷேகம்



சென்னை மாநகரின் புகழ் பெற்ற கோயில்களில் ஒன்றான முத்தியாலுப் பேட்டை ஸ்ரீ மல்லிகேசுவரர் ஆலயத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தாராளமாகப் பொருள் வழங்கி ஸ்ரீ மரகதாம்பாள் சமேத ஸ்ரீ மல்லிகேசுவரர் அருளுக்குப் பாத்திரர்களாவதற்குக் கீழ்க் கண்ட முகவரியை அணுகவும்: ஸ்ரீ பி. எஸ். வேங்கடராமன், செயலாளர், ஸ்ரீ மல்லிகேசுவரர் ஆலயத் திருப்பணிக் குழு, 108, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை—600001.

இருந்தார். இரண்டு ஆண்டுகளாய் வகித்திருந்த முதன் மந்திரி பதவியை, உள்ளமும் உடலும் நொந்த நிலையில் ராஜாஜி துறந்த சமயத்தில், பக்தியுடனும் பணிவுடனும் அவரைக் கல்கி ஈடுபடுத்திய ''கடவுள் பணி'' அது.

கல்கியின் வேண்டுகோள் இன்றித் தாமாகவே சில சமயங்களில் கதை, கட்டுரைகளை ராஜாஜி எழுதி அனுப்பினார். அவருடைய சில கடிதங்களிலிருந்து இது புலனாகிறது. புதுடெல்லியில் இரண்டாம் தடவையாய் மந்திரியாய் இருக்கையில் ராஜாஜி எழுதிய 5—8—51 தேதிய கடிதம் அவற்றில் ஒன்று. ஸ்ரீசங்கரரின் பஜகோவிந்தம் பாடல்களைத் தமிழில் ஆக்கி அனுப்பி இருப்பதாக அதில் எழுதியிருக்கிறார். அவை பொதிந்த விளக்கக் கட்டுரைத் தொடர், அந்த ஆண்டு நவம்பர் 25ம் தேதிய இதழிலிருந்து வெளியாயிற்று.

அது வெளிவந்த சமயத்தில் ராஜாஜி தமிழ் நாட்டில் இருந்தார். டெல்லியில் வகித்த பதவியை விடுத்து வந்துவிட்டார். அது பற்றிய கல்கியின் குறிப்பு ஒன்று, ''பஜகோவிந்தம்'' தொடர் ஆரம்பமான இதழில் வந்தது;

.... ராஜாஜி, அரசியல் துறையில் தேசத்துக்குத் தாம் போதிய சேவை செய்தாகி விட்டது என்ற திடமான முடிவுக்கு வந்தார். ''நம்மால்தான் உலகம் நடக்கிறது'' என்ற எண்ணம் ராஜாஜிக்கு எப்போதும் கிடையாது. ''மற்றவர்கள் பார்த்துக் கொள்வார்கள்; பார்த்துக் கொள்ளும் சந்தர்ப்பம் மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும்'' என்றும் கருதினார். முதிர்ந்த பிராயம், உடல் நிலைமை, பாரமார்த்திகத் துறையில் ஆர்வம் ஆகிய காரணங்களும் சேர்ந்தன. எனவே நேருஜி முதலிய சகாக்கள் ''மேலும் தங்களுடைய சேவை வேண்டும்'' என்று எவ்வளவோ மன்றாடியும், உறுதி தளராமல்; அங்கவஸ்திரத்தை எடுத்துப் போடுவது போல் உள்நாட்டு மந்திரி உத்தியோகத்தை உதறிவிட்டு, நம் தலைவர் ராஜாஜி தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்தார் ...

ராஜாஜி திரும்பி வந்த உடனே முதற் காரியமாகத் தென்பாண்டி நாட்டுக்குப் பிரயாணமானார். பிராயத்தினாலும் நோயினாலும் உடல் மெலிந்து, பிரயாணம் செய்யும் சக்தி இழந்துள்ள குற்றாலத்து மாமுனிவர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரைப் பார்ப்பதற்காகச் சென்றார். குற்றாலத்தில் ஒருவாரம் தங்கி ரஸிகமணியுடன் அளவளாவி அவரை உற்சாகப்படுத்தி விட்டுத் திரும்பினார். . .

நவம்பர் ஆரம்பத்திலிருந்து தமிழ்நாட்டில் மழை பெய்கிறது. ஐந்து வருஷமாகக் கண்டறியாத அளவில் மழை பெய்து வருகிறது. மழை இன்மையால் வறண்டு போயிருந்த தென்னார்க்காடு ஜில்லாவில் ஒருநாளில் பத்து அங்குல மழை பெய்தது என்றால், பார்த்துக் கொள்ளுங்கள்! குடிதண்ணீருக்கே கஷ்டம் நேர்ந்து விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த சென்னை நகரிலும் நல்ல மழை பெய்திருக்கிறது.

ராஜாஜி வந்ததினாலேயே மழை பெய்தது என்று சொல்லுவது அறிவாராய்ச்சிக்கு அவ்வளவு உகந்தது அல்லதான். ஆயினும்,

''நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை''

என்ற தமிழ்ப் பெருமொழி நம்முடைய நினைவுக்கு வரத்தான் செய்கிறது.

இந்தக் குறிப்புக்குக் கல்கி கொடுத்த தலைப்பு: ''மகான் வந்தார்! மழை பெய்தது!''

இப்போது மட்டும் அல்ல, முன்பும் தமது தலைவரை ''மகான்'' என கல்கி வர்ணித்ததுண்டு என்பது, இந்த அத்தியாயத்திலிருந்தே தெரியக் கூடியது. அப்படிக் குறிப்பிட்டது முகமனாகவோ அலங்காரமாகவோ அல்ல.

மெய்யாகவே ஒரு மகானாக ராஜாஜியைப் போற்றினார் கல்கி. அந்த மகான் இயற்றியவைகளைப் பேரிலக்கியமாக மதித்தார்; அவற்றைத் தம் சஞ்சிகையில் பதித்து வழங்கியதைத் தமக்கு வாய்த்த பெரும் பேறாகக் கருதினார். (தொடரும்)

அமரர்

கல்கி

சிரிக்க வைத்த சரித்திர நாயகர்

நம்மை மகிழ்விக்க மீண்டும் வருகிறார்!



அரும்பு அம்புகள்

அடுத்த இதழில் ஆரம்பம்

இதுவரை பிரசுரமாகாத நாவல்

18-4-76 சித்திரைச் சிறப்பிதழில்

இதர விசேஷ அம்சங்கள்:

- திரைப்படத் தூய்மை தேவையா?
  — வாசகர்களின் **விவாத மேடை.**
- புதுயுக சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் **இன்றையக் கதைகள்.** முதல் கதையை எழுதுபவர் **அய்க்கண் : கதா காத்திருப்பாள்!**
- **சவாலைச் சந்தித்தேன் :**
  — உயர் மட்டத்திலிருப்போர் மட்டுமின்றி சாமானியரும் தங்கள் அனுபவங்களைச் சொல்கிறார்கள்.
- சிறப்புச் சிறுகதைகள் :
  — **பி. வி. ஆர்.**
  — **ஆர்வி**
- **குட்மார்னிங் டாக்டர் :**
  — நோய் நாடி அதன் காரணம் நாடி குணம் நாடும் முறைதனை விவரிக்கிறார் டாக்டர். தடுப்பு முறைகளையும் கூறுகிறார்.
- **திருவண்ணாமலை கும்பாபிஷேகம் :**
  — புகைப்படங்கள், நமது நிருபரின் நேர்முக வர்ணனை.



காயம்

"மாலை ஆறு மணிக்குத் தியேட்டர் வாசலில் நில். வந்துவிடுகிறேன்" என்றான் மூர்த்தி, பாக்குப் பொட்டலத்தைப் பிரித்து வாயில் போட்டுக்கொண்டபடியே.

"ஆறு என்றால் சரியாக ஆறு இல்லை. முடிந்தால் சற்று முன்னாடியே வந்துவிடுங்கள். இல்லையென்றால் நான் தியேட்டர் வாசலில் டிக்கெட்டுகளுடன் தனியே நின்று கொண்டிருப்பேன். 'கம்பெனி வேண்டுமா மாடம்?' என்று நச்சரிக்க ஆரம்பித்து விடுவார்கள்" என்றாள் கல்பனா.

சிரித்துவிட்டு, "அட, ஐந்து நிமிஷம் இந்தண்டை அந்தண்டை மார்ஜின் கொடு, கல்பனா. ஆறு என்றால், ஐந்து ஐம்பத்தைந்து அல்லது ஆறு அஞ்சு. ஓகே?"

"ஓ கே!"

"மூர்த்தி மாமா!... மூர்த்தி மாமா வறார்" என்று முரளி குதித்துக் கொண்டு கூச்சலிடுவது மூர்த்தி, தன் நண்பன் ராமநாதன் வீட்டை நெருங்கும் முன்பே கேட்கத் தொடங்கியது.

"என்னடா, இப்போதுதான் வழி தெரிந்ததா?" என்றான் ராமநாதன்.

அவன் மனைவி ஜெயம் சமையலறையிலிருந்து வெளிப்பட்டு, "வாருங்கள், முரளி சொல்லிக் கொண்டே இருந்தான்... மூர்த்தி மாமா வரவில்லை வரவில்லை என்று!" என்றாள்.

கையில் மறைத்து வைத்துக் கொண்டிருந்த சாக்லேட் பொட்டலத்தைக் காட்டாமலே "முரளி, உனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறேன், சொல்லு, பார்க்கலாம்!" என்றான்.

"ஃபைவ் ஸ்டார்!" என்று உச்ச ஸ்தாயியில் கூறினான் முரளி.

"மெல்ல, மெல்லடா; வீடு இடிந்து விழப் போகிறது!"

அதற்குள் முரளி சாக்லேட் பாக்கெட்டைப் பிரித்து, எல்லோர் வாயிலும் "ஒனக்கொண்ணு... ஒனக்கொண்ணு..." என்று கிள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்.

"நீ வைத்துக்கொள்ளடா முரளி!" என்று மூர்த்தி சொன்னபோது, "எனக்கா? எல்லாமே எனக்கா?" என்று கண்கள் விரியக் கேட்டான்.

மூர்த்தி அவனுடன் சற்று நேரம் பம்பரம் சுற்றினான். முரளி பந்தை வீச, கிரிக்கெட் ஆடினான்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு "சரி நான் வரேன், அப்புறம் பார்க்கலாம்!" என்று மூர்த்தி விடைபெற்றுக் கொள்ளப் புறப்பட்டபோது, "நானும் மூர்த்தி



மாமா கூடப் போவேன்!'' என்று அடம் பிடிக்க ஆரம்பித்து விட்டான் முரளி.

''மாமா வீட்டுக்குப் போகவில்லையடா, ஆபீசுக்குப் போகிறார்'' என்று சொல்லிப் பார்த்தான் ராமநாதன்.

''பொய் சொல்லறே. இன்னிக்கு ஆபீஸ் லீவு'' என்று அவனை மடக்கினான் முரளி.

இருவரும் விழித்துக் கொண்டு நின்ற போது, ''முரளி, மாமா அடுத்த வாரம் மறுபடியும் வரபோது நீ போகலாம், என்ன? சமர்த்துத்தானே நீ?'' என்று சொல்லிப் பார்த்தாள் ஜெயம்.

''நீ இப்போது இவனை விட்டு விட்டுப் போனால் இங்கே ஓலம் ஆரம்பித்துவிடும்; ஓயவே ஓயாது!'' என்று சற்றுச் சினத்துடனேயே சொன்னான் ராமநாதன்.

சற்று யோசித்தான் மூர்த்தி. ''ஆல் ரைட். முரளி என்னுடன் வரட்டும். மாலை நாலு மணிக்குக் கொண்டு விட்டு விடுகிறேன். மத்தியானம் சற்றுத் தூங்கி விடுவான். அதுவரை அங்கே வீட்டில் விளையாடட்டும். அம்மா பார்த்துக் கொள்வாள்!'' என்று முரளியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

''அம்மா டாடா!'' என்றான் முரளி.

ஜெயம் வெளியே வந்து, ''சமர்த்தா இருக்கணும். மாமாவைப் படுத்தப்படாது!'' என்று சிரித்தபடி சொன்னாள்.

சற்று நேரம் பந்துகளை வைத்து விளையாடிவிட்டுக் கண்ணயர்ந்தான் முரளி. அவன் அருகேயே அமர்ந்து கொண்டு அவனை மெல்ல மெல்லத் தட்டித் தூங்கப் பண்ணினாள் அம்மா. மூர்த்தி நாவல் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

சரியாக நாலு என்றால் நாலு மணிக்கு முரளிக்கு விழிப்புக் கொடுத்து விட்டது. கட்டிலை விட்டுத் தானாகவே இறங்கியவன், மூர்த்தி பாலை வாங்கிக் கொண்டு உள்ளே வருவதைப் பார்த்துவிட்டு, ''மாமா, என்னை விட்டு விட்டு நீ மட்டும் எங்கே போறாய்?'' என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தான்.

எது முன்னால் நிகழ்ந்தது என்று தெரியவில்லை. பால் பாத்திரம் கீழே விழுந்து உருண்டதா? முரளி பால் சறுக்கிக் கீழே விழுந்தானா? இல்லை, முன்னாலேயே ஓடி வந்ததில் மோதிக் கொண்டு விழுந்தானா?...

''அம்மா!'' என்று அலறிக் கொண்டு கையைக் கண்ணுக்கும் நெற்றிக்கும் இடையில் அழுத்திக் கொண்டு முரளி வீறிட்ட போதுதான் மூர்த்திக்கு ஏதோ இசகு பிசகாக நடந்து விட்டது போல் தோன்றியது.


கதவின் அடிக்கட்டையில் எங்கோ நீண்டு கொண்டிருந்த பிளவு ஒன்று முரளியின் நெற்றியில் வலது கண்ணுக்குச் சற்று மேலே தாக்கி யிருந்தது. முரளியின் கையைப் பலவந்தமாக அங்கிருந்து அகற்றிய பின் தான் ரத்தம் வழிந்து கொட்டிக் கொண்டிருப்பதும், அவனுடைய கண், வலது கன்னம், மூக்கு வழியே சட்டை நிஜாரிலும் அது ஓடத் தொடங்கியதும் தெரிந்தது.

சாருகேசி

மூர்த்தி அதிர்ச்சியில் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டாலும், ஓடிவந்த அம்மாவிடம், ''ஒரு துண்டை நனைத்துக் கொண்டு வா, ஓடு!'' என்று விரட்டினான்.

முகம் எல்லாம் துடைத்தபிறகு, ரத்த ஒழுக்கு சற்று நிற்பது போல் பட்டாலும் காயம் ஆழமாகப் பட்டு விட்டதில் குபுக் குபுக்கென்று ரத்தம் வெளிப்பட்டுக்கொண்டு தான் இருந்தது.

அப்படியே அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டு அருகிலிருந்த டாக்டரிடம் ஓடினான்.



''அவர் இல்லீங்களே... அஞ்சு மணிக்குத் தான் வருவாரு!'' என்றாள் அவர் மனைவி.

அடுத்திருந்த ஒரு நர்ஸிங் ஹோமுக்குப் போனபொழுது, ஓர் ஆயா மட்டும் டெலிபோனருகே நின்று கொண்டிருந்தாள். ஸிஸ்டர் ஒரு சோபாவில் கண்ணயர்ந்திருந்தாள். எழுப்பியதும், ''அடியா, நெற்றியிலா பட்டது?'' என்று கேட்டு விட்டு, பஞ்சால் துடைத்து ஒரு 'பேண்ட் எய்டு' போட்டு ஒட்டி விட்டு, ''சீக்கிரம் குழந்தை ஆசுபத்திரிக்குக் கொண்டு போங்கள்! அடி பலமாகப் பட்டிருக்கிறது!'' என்றாள்.

''இங்கே ஒன்றும் செய்ய முடியாதா?'' என்றான் மூர்த்தி.

''அங்கேதான் டிடானஸ் இன்செக்ஷன் போடுவார்கள். ஆழமான காயம். தையல் போடுவார்கள்!'' என்றாள் ஸிஸ்டர்.

வெளியே வந்தான் மூர்த்தி.

பரபரப்பும், பயமும், கவலையும் விரட்ட விரட்ட, குழந்தைகள் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

ஓ. பி.யில் போனபொழுது, முகம் முழுதும் வழியும் ரத்தமோ, குழந்தையின் அழுகையோ எதுவுமே அவர்களுக்குச் சர்வ சாதாரணம் என்பது போல் அங்கேயிருந்த ஸிஸ்டர்களில் ஒருத்தி, ''பதினெட்டில் ஓ.பி. சீட்டு வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

ஒரு மேசையும், மேசை மீது அடுக்கான கார்டுகளும், வெற்று நாற்காலியும்... ஆள் எங்கே? பத்து நிமிடங்களுக்குப் பிறகு—

''என்ன வேண்டும்?''

''ஓ. பி. சீட்.''

''பெயர்?''

''முரளி!''

''வயது?''

''மூன்று.''

அவள் கொடுத்த கார்டை வைத்துக் கொண்டு மறுபடியும் ஓ. பி.க்குப் போன பொழுது, ''என்ன சார், இங்கேயே வந்துட்டீங்க மறுபடியும்! உள்ளே டாக்டரைப் பாருங்க!'' என்றாள் ஸிஸ்டர்.

உள்ளே டாக்டரைப் பார்த்தபோது, மேலே இரண்டாம் மாடியில் இருக்கும் டாக்டரைப் பார்க்கச் சொன்னார்.

இரண்டாம் மாடியில், ஓர் அறையில், மூன்று நான்கு டாக்டர்கள் குழந்தைகளைத் தொட்டுப் பார்த்தும் பார்க்காமலும், குனிந்த தலையை நிமிராமலும், கார்டைப் பார்த்தும் பாராமலும் சீட்டுச் சீட்டாக எழுதிக் கொண்டிருந்தார்கள். முகம் முழுதும் ரத்தத்துடன் காட்சி யளித்த முரளியின் மீது பார்வை பட்டதோ என்னவோ, ஒரு டாக்டர், ''என்ன?'' என்றார்.

''கீழேவிழுந்து அடிபட்டுவிட்டது டாக்டர்!''

அவள் கையிலிருந்த ஓ. பி. கார்டில் ஏதோ எழுதினார். ஒரு துண்டுச் சீட்டிலும் ஏதோ எழுதி, இரண்டையும் மௌனமாக அவனிடம் நீட்டினார்.

''இதை என்ன செய்ய வேண்டும்?''

மூர்த்தியை விசித்திரமாகப் பார்த்தார் டாக்டர். ''ஏ.டி.எஸ். இஞ்செக்ட் பண்ண வேண்டும். ஸ்டிச் போட வேண்டும்... போங்கள்!''

நல்ல வேளையாக ஓர் ஆள் மூர்த்தியின் உதவிக்கு வந்தான். அவனுடன் வரச் சொன்னான். வார்டுகளைக் கடந்தான். தனியே நின்று கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த டாக்டர் ஒருவரிடம் நிறுத்தினான். அவர் பேண்ட் எய்டைப் பிய்த்து எடுக்காத குறையாகக் காயத்தைப் பார்த்து விட்டு, ''போய் உட்காருங்கள், வருகிறேன்!'' என்றார்.

''எங்கே?''

மறுபடியும் இந்த டாக்டரின் வெற்றுப் பார்வை.

கூடவந்த நபர், ''நான் அழைத்துப் போகிறேன், சார்!'' என்று முன் வந்து, பழையபடி பல வார்டுகளைக் கடந்து, பல பெஞ்சுகளைத் தாண்டி, செப்டிக் ஆபரேஷன் தியேட்டர் என்று போர்டு போட்டு, ஒரு சிறிய பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்த அறையின் முன்னால் உள்ள பெஞ்சியில் மூர்த்தியை அமரச் சொல்லிவிட்டு, ''நான் வரட்டுமா சார்? டாக்டர் இப்போ வந்துடுவார்!'' என்றான். ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை அவன் கையில் திணித்து விட்டு, ''ரொம்பத் தாங்க்ஸ்!'' என்றான் மூர்த்தி.

நேரம் போய்க் கொண்டே யிருந்தது.

முக்கால் மணிக்கு மேலாகி விட்டது.

''மாமா...! ஊசி போட வேண்டாம்!'' என்று கதறினான் மூர்த்தி.

''இல்லே, ஊசி போட மாட்டார் டாக்டர்!'' என்று சமாதானப்படுத்தினான் மூர்த்தி.

'கடவுளே! தையல் போடுவதை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறான் இவன்!...'

நிமிடங்கள் பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று ஓடின. டாக்டரும் வரவில்லை, அறையும் திறக்கப்படவில்லை. மூர்த்தியின் ஆற்றாமையெல்லாம்கோபமாக உருவாயிற்று. அங்கு யாருமே இல்லை. அப்படி வெறிச்சோடியிருந்தது வராந்தா முழுதும்.

இனி காத்திருப்பதில் பயனில்லை என்று அவனுக்குத் தோன்றிற்று. அதற்கும் மேலாக ராமநாதனிடமும், ஜெயத்திடமும் என்ன சொல்லப் போகிறோம் என்ற பயம் வேறு. அஜாக்கிரதையாய் இருந்து விட்டாய் என்று கணவனோ மனைவியோ சொல்லி விட்டால் அந்தக் குற்றச்சாட்டை எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறோம்?...

கீழே இறங்கினான் மூர்த்தி. ஓ. பி.யில் மறுபடியும் ஸிஸ்டர்களிடம் முறையிட்ட போது, ஏ.டி.எஸ். இஞ்செக்ஷனை மட்டும் போட்டாள் ஒரு காருண்ய மிக்க நர்ஸ். ''டாக்டர் வரவில்லை என்றால் நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டாள்.

ஆத்திரமும் கோபமும் பிறிட, முரளியைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். நல்ல வேளையாக ஆட்டோ ஒன்று வந்தது. ஏறிக் கொண்டான். தன் வீட்டுக்குப் பக்கத்திலே இருந்த அந்தத் தெரிந்த டாக்டர் இந்நேரம் திரும்பி வந்திருப்பாரோ?

ஊஹூம். டாக்டர் இன்னும் வரவில்லை.

''அடுத்த தெருவில் டாக்டர் சங்கரன் இருக்கிறார். போய்ப் பாருங்கள்!'' என்றான் வேலைக்காரன்.

அடுத்த தெருவில் சங்கரன் இருந்தார். ''ஐ'ம் ஸாரி. என்னால் ஒன்றும் செய்ய முடியாது. டு கோ டு கே. எம். ஸி. அல்லது ராமராவ் நர்ஸிங் ஹோம் போங்கள். வேண்டியது செய்வார்கள்!'' என்று கையை விரித்து விட்டார்.



இவர்கள் பேச்சாளர்கள் ஆனால்...

இரும்புக் கடைக்காரர்: எதைச் சொன்னாலும் நான், '**ஆணி**'த்தரமாகச் சொல்லும் வழியன்.

'**டைப்பிஸ்ட்**': இந்த நிலையில் உண்மையைத் தைரியமாக '**அடித்து**'ச் சொல்பவன் நான்.

எண்ணெய் வியாபாரி: விழித்தெழுங்கள் தோழர்களே! எந்த விஷயத்திலும் '**வழ வழ**' என்று இருக்காதீர்கள்.

'**பசை**' **வியாபாரி:** எந்தக் கட்சியிலும் '**ஒட்டாமல்**' தனியாகவே என் கட்சியை நடத்துவேன். இது உறுதி. **—டி. கே. சேகர்**


இவையே இல்லத்தின் எதிரிகள்
ஃபினிட் தெளிப்பீர்,
அவற்றை ஒழிப்பீர்!
FINIT
insecticide
HP
NET CONTENTS 1 LITRE
ஃபினிட்—வீட்டிலுள்ள பறக்கும்
மற்றும் ஊரும் பூச்சிகள் :
கொசுக்கள், ஈக்கள், கரப்பான்கள்
மூட்டைப் பூச்சிகள்
ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற
பத்திரமான, நிச்சயமான வழி.
ஆம், பத்திரமாக, ஆனால் நிச்சயமாக!
HP
இந்துஸ்தான் பெட்ரோலியம்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
CMHPF.2.203 TM



ஒளிவீசும் இந்நாளில் எழிற்கோலம் கொள்ளுங்கள்.
பூவாய்ச் சிதறும் வண்ணங்கள் பொன்னாய் ஒளிரும் புதுமை அழகும் அற்புதமும் இணைந்த அபூர்வமான பட்டு, ஜவுளி ரகங்கள்.
திருமணம் மற்றும் விசேஷ காலங்களில்
கீதா
சில்க் & சாரி பஜார்
31, N.S.B. ரோடு, திருச்சி-620002.
கீதை — மகிழ்ச்சியும், குதூகலமும் நிறைந்த இல்லங்களில் குடியிருக்கும் செல்லப் பெயர்.
உங்கள் குடும்பம் முழுவதற்கும் தேவையான எல்லாவித ஜவுளி ரகங்களையும் வழங்கும் உங்களின் ஸ்தாபனம்.
CROWN/GS-109

அட கடவுளே! ஒரு குழந்தைக்கு அடிபட்டால் அதைக் கவனிக்க ஆஸ்பத்திரி, டாக்டர் யாருமே இல்லையா? ஆபத்துக்கு உதவி இல்லையென்றால் பின் எதற்கு?

டாக்ஸி பிடித்து ராமராவ் நர்ஸிங் ஹோமில் இறங்கினான் மூர்த்தி. பெரிய டாக்டர் காயத்தைப் பார்த்துவிட்டு, "பயப்படாதீர்கள், என் பிள்ளை இன்னும் பத்து நிமிடத்தில் வந்து விடுவான். தையல் போட்டுவிடுவான்!" என்றார் ஆறுதலாக.

"தையல் தேவையா?"

"கட்டாயம். ஆழமான காயம் பாருங்கள்!"

"சரியாகப் பத்து நிமிடங்களுக்குப் பிறகு டாக்டர் வந்தார். அக்கறையுடனும் அனுதாபத்துடனும் மூர்த்தி சொன்னதைக் கேட்டார். முரளி அழுது கொண்டே "ஊசி போட வேண்டாம், டாக்டர்" என்று சொன்னபோது, "நோ, போட மாட்டேன்!" என்று அவன் கன்னத்தைத் தட்டினார். "இன்னும் பத்தே நிமிடங்களில் ஸ்டிச் போட்டு விடுகிறேன். அதற்கு முன்னால் இந்த செட்டில் மருந்தை ஒரு ஸ்பூன் அவனுக்குக் கொடுத்து விடுங்கள்!" என்று ஒரு பாட்டிலும் ஸ்பூனும் கொடுத்தார்.

முரளி முதலில் மறுத்தாலும், பிறகு அந்த மருந்தைக் குடித்தான்.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு ஆபரேஷன் தியேட்டரில், பளீரென்று கண் கூசும் விளக்கொளியின் கீழே ஓர் உதவியாள் முரளியின் முகத்தை வாயோடு சேர்த்துப் பிடித்துக் கொள்ள ஒரு நர்ஸ் காலையும் கையையும் அழுத்திப் பிடித்துக் கொள்ள முரளி கதறக் கதற டாக்டர், நெற்றிக் காயத்தில் இரண்டு முறை 'லோகல் அனஸ்தீஷியா' ஊசி செலுத்தி விட்டு நிமிர்ந்தபோது, மூர்த்திக்கு முரளியின் கதறல் நெஞ்சைப் பிழிகிற மாதிரியிருந்தது.

டாக்டர் இரண்டு தையல் போட்டார். பேன்டேஜ் போட்டான் உதவியாள்.

பத்து நிமிஷங்களில் வெளியே வந்தபோது, முரளி கொஞ்சம் சமாதானமாகி விட்டான்.

"இரவு இரண்டு மூன்று முறை அவனைத் தூக்கத்திலிருந்து எழுப்பிக் கூப்பிட்டுப் பாருங்கள். வலி இருக்கிறதென்றாலோ ஜுரம் வந்தாலோ இந்த மருந்தை வாங்கிக் கொடுங்கள்!" என்று பிரிஸ்கிரிப்ஷன் ஒன்று கொடுத்தார் டாக்டர்.

"தாங்க்யூ வெரி மச் டாக்டர்!" என்று ரூபாய் நோட்டுக்களை அவர் மேசையின் மீது நன்றியுடன் வைத்துவிட்டு வெளியே வந்தான் மூர்த்தி.

நர்ஸிங்ஹோம் கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். 6-45.

ஒரு டாக்ஸியைப் பிடித்து, நுங்கம்பாக்கம் போய், ராமநாதனையும் ஜெயத்தையும் பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, முரளியை அவர்களிடம் ஒப்படைத்தான். "தையலைப் பிரிக்க, சனிக்கிழமை நானே வந்து முரளியை அழைத்துக்கொண்டு போகிறேன்!" என்றான் மூர்த்தி.

"இதுக்கு ஏண்டா இப்படிப் பதறப் படறே? அவன்தான் ஓடு ஓடென்று ஓடு



முசோலினி, தம் அலுவலக அறைக்கு வெளியே இப்படியோர் அறிவிப்புப் பலகையைத் தொங்க விட்டிருந்தார்.

"உள்ளே வருகிறவர்கள் என்னைக் கௌரவிக்கிறார்கள். வராமலிருப்பவர்கள் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறார்கள்."

ஆதாரம்: "வேடிக்கையான நிகழ்ச்சிகள்" என்ற புத்தகம். — ஆர். வெங்கட்ராமன்

வானே! எத்தனை தடவை கீழே விழுந்து அடிபட்டுக் கொண்டிருக்கிறான்! முழங்காலில், உதட்டில்... தலையில்..." என்று சமாதானம் சொன்னான் ராமநாதன்.

"நீங்களாகக் கொண்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு டாக்டர் டாக்டராக ஏறி இறங்கி, தையல் போட்டு மருந்து வாங்கிக் கொடுத்து.... எல்லாம் பொறுப்போடும் அக்கறையோடும் செய்திருக்கிறீர்களே.... அவன் விழுந்ததற்கு நீங்கள் பொறுப்பேயில்லை!" என்று ஜெயம் சொன்னபோது நெகிழ்ந்து போய்விட்டான் மூர்த்தி.

அவர்கள் டிபனும் காப்பியும் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தியும் கேளாமல், அந்த டாக்ஸியில் கிளம்பி, மவுண்ட் ரோட்டுக்கு வந்தான்.

மணி ஏழு இருபது.

தியேட்டர் வாசலில் இறங்கிக் கொண்டு, நம்பிக்கை இல்லாமலே சுற்றுமுற்றும் பார்த்தான், மூர்த்தி. உள்ளே டிக்கெட் கொடுக்கும் இடம் வரை வந்து பார்த்தான்.

"யாரை சார் தேடறீங்க?" என்றார் காக்கிச் சட்டை.

"இங்கே ஒரு லேடி காத்துக்கிட்டிருந்தாங்களா?" என்றான் மூர்த்தி தயக்கத்துடன்.

"உங்க பேரு மூர்த்தியா, ஸார்? இந்தக் கவரை உங்ககிட்டே கொடுக்கச் சொன்னாங்க, ஸார்! சிவப்பா, உயரமா ஒரு அம்மாதானே?" என்று கேட்டு விட்டு ஒரு கவரைக் கொடுத்தான் காக்கிச் சட்டை.

அவசரமோ பதற்றமோ இல்லாமல் கவரைப் பிரித்தான் மூர்த்தி. அன்று மாலைக் காட்சிக்கான டிக்கெட்டுகள் இரண்டும் துண்டுகளாகக் கிழித்துக் கிடந்தன. ஒரு நீலத் துண்டுச் சீட்டில், 'உங்களுக்குத் துளியும் பொறுப்பே கிடையாது என்று நன்றாகத் தெரிந்து விட்டது. சொன்னால். சொன்ன நேரத்துக்குக்கூட வர முடியாதவரின் பேச்சை நம்பி, என் வாழ்க்கையை உங்களிடம் ஒப்படைக்க இருந்தேனே, என்ன முட்டாள்தனம்! — கல்பனா' என்று எழுதியிருந்தது.

படிகளை ஒவ்வொன்றாக நிதானமாகத் தாண்டி, கார் பார்க்கிங் கடந்து, சாலைக்கு வந்து, பஸ் ஸ்டாண்டுக்கு வந்து நின்று கொண்டான் மூர்த்தி.

ஆழமான காயம் பட்டது முரளிக்கு மட்டுமல்ல என்று மூர்த்திக்கு நினைக்கத் தோன்றிற்று.


அறிவின் விழி ஒரு கோடி! கதை: கௌசிகன் சித்திரம்: ம.செல்வன்
14
குதிரையைக் கண்டு சந்தேகமேற் படுகிறது லக்ஷ்மணுக்கு. இதை அறிகிறான் மாதவன்.
விஷ்ணு பிரசாத்திடம் இங்கிருந்து வெளியேறி ஓட முடியாது. அவர்களிடம் ஆயுதமும் வாகனமும் உள்ளது. சாருவும் மிகவும் களைப்படைந்துவிட்டாள்.
நாம் நினைத்தபடி அவர்கள் இறக்கவில்லை. நமக்கு முன்னே இங்கு வந்துவிட்டார்கள். இக்குதிரை அவர்களுடையது தான்.
பாஸ்! இம்முறையும் நாம் ஏமாந்தோமானால் அதைவிடக் கேவலம் கிடையாது.
தந்தையையும் மகளையும் சேர்த்துவைத்துவிட்ட மாதவன் இப்போது அவர்கள் பத்திரத்துக் காகத் திட்டமிடுகிறான்.
இவ்விருவரையும் ஒழித்தால்தான் சாருவுக்கும் அவள் தந்தைக்கும் அபாயம் நீங்கும். வாகாக நிற்கும் அவர்கள் மீது இதை உருட்டித்தள்ளி...
மாதவனின் செயலால் சிதலமான இடிபாடுகள் முழுதுமே கிடுகிடுத்துச் சரிகின்றன. அந்த அதிர்ச்சியில் அடுத்தடுத்துப் பல கட்டடங்களும் கூடச் சரிந்து இடியும் போதுதான் சாரு இருந்த பகுதி கலகலத்துக் கல் மழை பொழிகிறது.
திடீரென்று ஏற்பட்ட கட்டிடச் சரிவுகளுக்கிடையே அகப்பட்டு நசுங்குண்ட லக்ஷ்மணின் கூட்டாளி இறக்கிறான். லக்ஷ்மண் பார்வையில் மாதவன் பட்டு விட....
பாவிப் பயலே! உன் காரியம்தானா இது? எங்களைக் கொன்று விட்டு நீ உயிர் வாழவா? விட மாட்டேன். இந்தா வாங்கிக் கொள்.
டுமீ..ல்!
லக்ஷ்மணின் கடைசிக் குறி தவறவில்லை.
ஹா... ஆ... ஆ...!


அப்பா அது.. அது மாதவனின் ஈனக்குரல். அந்தத் துப்பாக்கி ஒலி...? ஐயோ.. மாதவன் உங்களுக்கு என்ன?
மாதவன்... மாதவன்! ஐயோ, கடைசியில் எங்களைக் காப்பாற்றி விட்டீர்கள்...? என்ன கொடுமை..
என் மாணவர்களிலேயே என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் இவன்தான். அதனாலேயே உன்னை அழைத்து வரும் பொறுப்பை இவனுக்கு அளித்தேன். கடைசியில் இப்படியா?
அழாதே சாரு. அவர்களிடம் ஆயுதமிருக்கிறதென்று தெரிந்து தான் இதைச் செய்தேன். எப்படியும் உங்களைக் காப்பாற்றி விட்டேன். அதற்கு என்னைப் பலி வாங்கி விட்டார்கள்.
சார்! இனி தாமதிக்காதீர்கள். அவர்கள் ஜீப் பழுதடையவில்லை. அதில் ஒரு கோடி ரூபாயிருக்கிறது. சாரு! அவர்கள் பேச்சிலிருந்து ஹெலிகாப்டரை அந்தக் கிராமத்துக்கு அருகில்தான் விட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த ஜீப்பில் அங்கு சென்று அந்த ஹெலிகாப்டரின் உதவியால் பாரதத்துக்கு...கு
ஐயோ! மாதவன்...? அப்..பா...!
மாதவன் விருப்பப்படியே தந்தையும் மகளும் பாரதம் திரும்புகிறார்கள்.
எப்போதோ விளையாட்டாக ஓட்டக் கற்றுக் கொண்டது இன்று உதவுகிறது.. சாரு கண் கலங்காதே. மாதவனை நம்மால் மறக்கவே முடியாது. அவனை உன் கணவனாக்கி மகிழ இருந்தேன். ஆனால்...
அப்பா மாதவனையே இழந்து விட்டு நமக்குக் கட்டுக் கட்டாக இத்தனை பணம் எதற்கு? ஒரு கோடி ரூபாய்கள்...
உண்மைதான் சாரு. அவைகளை வெளியே வீசுகிறேன்.
முற்றும்



வேஷம்

கோமகள்



அந்த மாடியிலுள்ள அறைக்கு நான் குடி வந்தபோது கீழே பார்த்த காட்சி என்னைப் பிரமிக்க வைத்தது. தெரு வராந்தாவில் நான்கு ஜோடிப் பெண்களின் ஆடைகள் காய்ந்து கொண்டிருந்தன. உள்ளே வாத்திய ஓசைகளைப் போல் வெவ்வேறு சுருதியில் குரல்கள் கிரீச்சிட்டன. கூட வேறு யாருமே இல்லையோ ?

ரேடியோ அவர்கள் குரலோடு போட்டி போட்டுக் கொண்டு, மனத்தைத் தூண்டும் கேவலமான பொருள் தரும் பாட்டை அலறிக் கொண்டிருந்தது. அதன் கூடவே ஒரு குரலும் சேர்ந்து பாடியது.

''ஏ! மாலதி! துணிகளையெல்லாம் எடுடி!''

''மாட்டேன், நீயே எடு...''

''சொன்னால் கேட்க மாட்டாளே.... !'' அலுப்புடன் ஒருத்தி தெருப்புறம் போகிறாள்.

''மஞ்சு! மஞ்சு ! நேற்று ஆபீஸிலே ஒருத்தன் இந்தப் புடவையை விற்றுக் கொண்டிருந்தான். என்னோட வேலை செய்யறவா எல்லாம் ஆளுக்கொண்ணு வாங்கவே, நானும் கடனுக்கு ஒண்ணு வாங்கிட்டேன். விலை நாற்பத்தஞ்சு ரூபாய் தாண்டி ! ஆனால் அப்பா என்ன சொல்லுவாரோ?''

''எனக்குத் தெரியாதுடி! நீயே அப்பாவைக் கேள்.''

''ஏ! ஏ! நீதானே வழக்கமா அப்பாவைக் கேட்பே, கேளுடி !''

''நீ உன் சம்பளத்திலேயிருந்து பணத்தைக் கொடுத்துட்டு வந்து கணக்கு சொல்ல வேண்டியதுதானே ? கட்டிக்கப் புடவை வாங்கறதுக்குக்கூட இத்தனை பயம்னு நீ வாங்கியிருக்கக் கூடாது.''

''ஆபீசுக்குப் போய் உழைச்சுக் கொண்டு வந்து அப்பாவுக்குக் கொட்டணும். ஆனால் நமக்குன்னு ஒண்ணும் வாங்கிக்கக் கூடாது. இது என்னடி அநியாயம் ?''

''அதையும் அப்பாகிட்டேயே கேளேன்.''

புலியைக் கண்டதும் மான் வீறிடுவதைப் போன்ற ஒரு குரல் திடீரென்று. ''அக்கா! அக்கா! அப்பா வந்துட்டார்!'' என்று எச்சரிக்கை செய்தது.

அவ்வளவுதான்; இத்தனை நேரமும் கேட்ட பேச்சுக்கள், சிரிப்புக்கள், பாட்டுக்கள் எல்லாம் கப்சிப்! ரேடியோவும் குரல் அடங்கிற்று. மூச்சு விடும் ஒலிகூடக் கேட்கும் அளவு ஓர் அச்சமான நிசப்தம் ஸ்தாபிதமாயிற்று.

இந்த ஜன்னலில் நின்றால் கீழ்ப் போர்ஷனின் எல்லா இடங்களையும் நன்கு பார்க்க முடிந்தது. என் மாடி அறை இருள் அடைந்து கிடந்ததால், கீழே இருப்பவர்கள் என்னை இனம் கண்டுகொள்வது கடினம். அந்தச் சௌகரியத்தை மனத்துக்குள் வாழ்த்திய வாறே கீழே நடப்பதைக் கவனித்தேன்.

அவருக்கு அதிகம் போனால் ஐம்பத்தைந்து வயது இருக்கலாம். தலை முடி பாதிக்குப் பாதி வெள்ளையும், கறுப்புமாகக் கலந்து கிடந்தது. முகத்தில் கம்பீரமும், மிடுக்கும் எடுப்பாகத் தோன்றினாலும், ஒரு கடுமையும் கூடவே விரவிக் கிடந்தது. பேண்ட் ஷர்ட்டைக் களைந்துவிட்டுப் பழுப்பேறிய ஒரு நாலு முழ வேஷ்டியைச் சுற்றிக் கொண்டார் அவர். வாசலோரம் வைக்கப்பட்டிருந்த சிவப்பு பிளாஸ்டிக் பக்கெட்டிலிருந்து கைகளால் நீரை அள்ளி முகத்தைக் கழுவிக் கொண்டார். பிறகு பக்கத்தில் கிடந்த கான்வாஸ் சேரில் சரிந்து சாய்ந்தார்.

'' இந்தாங்க அப்பா காப்பி !'' குரல் சர்வாங்கமும் அடங்கி ஒலிக்க, அவர் அருகே ஒருத்தி டம்ளருடன் நிற்கிறாள். ஒடுங்கி, மெலிந்து, வாடிப் போன அவள் முகத்தில் ஓர் ஏமாற்றமான களைப்பு. தன் சுபாவத்தையே அச்சமாக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத் தவிப்பில் கண்களில் ஓர் ஏக்கம்.

''அப்பா !'' குரலில் தயக்கமும், அச்சமும் மிளிர்கிறது. ஏன் ஆரம்பித்தோம் என்ற பதைப்பில் குரல் அத்துடன் மேலே எழவில்லை.



''ஏன் உமா ? துவரம் பருப்பு, காய்கறி ஏதாவது வாங்கணுமா ?''

''இல்லே அப்பா ! வந்து... வந்து... தீபாவளி வருதில்லேயா...''

''அதுக்காக...?''

''எங்களுக்குத் துணிமணிகள் எடுக்க எப்போது போகலாம்னு அக்கா கேட்கிறாப்பா!''

''என்னது துணிமணிகளா? இப்போது விக்கிற விலைவாசிகளிலே துணிமணிகள் எடுக்கிறதாவது ? எல்லாம் இருக்கிறதைப் பார்த்துக்குங்க... அடுத்த வருடம்தான் புதுசு...''

உமாவிடமிருந்து பதில் வரவில்லை.

அப்பா தொடர்ந்து பேசிக் கொண்டே போனார்.

''வீட்டு வரி பாக்கி இருக்கு. கைச் செலவுக்கு மூணு பேர் சம்பாதிக்கிறதும் அடங்க மாட்டேங்குது. இதிலே தீபாவளித் துணிமணி வேறே எடுக்கணுமாம் ! ஒரு பைசாக்கூடச் செலவழிக்காம அப்படியே பணத்தை என் கிட்டே கொண்டு தரணும் !''

அப்புறம் கீழ் போர்ஷனில் பேச்சொலி காணோம். அவர்கள் சொல்ல எண்ணும் வார்த்தைகள், சொல்ல முடியாத ஏக்கங்கள் எல்லாம் சத்தமில்லாத பெருமூச்சில் கரைகின்றன என்பது மட்டும் என்னால் உணர முடிகிறது.

இப்படி ஒரு தந்தையா ?

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை.

ஜெயிலில்கூடக் கொஞ்சம் ஓசைகள் கேட்கும். கீழ்ப் போர்ஷன் பெண்களின் ரகசியப் பேச்சுக்கள், நிதான நடமாட்டங்கள், அடங்கிய குரல்கள்... இடையிடையே இடி முழக்கம் போல் அவர்கள் அப்பாவின் குரல்.

அதோ அந்த அறையில் மூன்று பெண்களும் உள்ளனர். ஒருத்தி ஏதோ தைக்கிறாள். ஒருத்தி சுவரில் சாய்ந்து உட்கார்ந்தவாறே சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள். ஒருத்தி குப்புறக் கவிழ்ந்தவாறே ஒரு புத்தகத்தில் ஈடுபட்டிருக்கிறாள். அதோ ஒரு திரை மறைவில் ஒருத்தி சமையல் செய்து கொண்டிருக்கிறாள்.

நடுநாயகமாகக் கால் மேல் கால் போட்டபடி சுவரில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தார் வீட்டுத் தலைவர். அவர் முகத்தில் கருணை என்பது எள்ளளவும் காணோம். ஆமாம், எப்படி இருக்கும்? ஆடுகளை மேய்ப்பது போலல்லவா பெண்களை மேய்த்துக் கொண்டிருக்கிறார் ?

ஒரு நாள் வெள்ளிக்கிழமை. அந்த வாரப் பத்திரிகையையும், நாளிதழையும் வாங்கிக் கொண்டு படி ஏறினேன்.

வாசலில் உமா நின்றிருந்தாள். அவள் கண்கள் என் கைகளில் படிந்தன. அறிமுகத்துக்கு விரையும் ஒரு புன்னகை மெல்ல அவள் இதழ்களில் மிதந்தது.

''ப்ளீஸ்! அந்தப் புத்தகத்தை நீங்கள் படித்ததும் என்னிடம் தருவீர்களா?''

''உம்! இப்போதே தருகிறேன். படித்து விட்டுத் தாருங்கள்.'' புத்தகத்தைத் தருகிறேன்.

''தேங்க்ஸ்!'' விருட்டெனக் கதவை மூடிக் கொண்டாள் அவள். அதிகமாகப் பேசி விட்டோமோ, புத்தக சபலம் ஓர் ஆணிடம் அதிகம் பேச வைத்துவிட்டதோ என்ற குழப்பம் அவள் முகத்தில் நிலவியிருந்தது. அவளது முக பாவங்களை, நாணக் குழைவை, வெட்கமான தயங்கிய பேச்சை நான் மீண்டும் மீண்டும் மனக் கண்ணில் கொண்டு வந்து மகிழ்ந்தேன்.

மற்ற மூவரையும்விட உமாவுக்குப் புத்தகங்கள் கிடைக்கும் வாய்ப்பு குறைவு. எனவே யாரும் அறியாமல், நான் வாங்கும் புத்தகங்களை அவளுக்குத் தந்து படிக்கச் செய்தேன். அவள் நன்றி மலரப் பெற்றுக் கொண்டு 'தேங்க்ஸ்' கூறிக் கதவைத் தாளிடுவதை ரசித்தேன்.

ஒரு நாள் புதுப் புத்தகத்துடன் வந்தபோது கதவருகே அவள் இல்லை. எந்தெந்தக் கிழமைகளில் எந்தெந்தப் புத்தகம் வருமோ, அன்றெல்லாம் தயாராய் நின்று வாங்கிக்கொள்ளும் அவள் ஏன் இன்று வரவில்லை ?

கதவை இரு விரலால் பிறாண்டினேன்.

அவள் அப்பா இல்லை என்று தெரியும்!

அவள் கதவைத் திறந்தாள்.

புத்தகத்தைக் கொடுத்தேன்.

அவள் கைகள் நீளவில்லை. கண்களில் ஓர் அச்சம் படர்வதுபோல் இருந்தது. வேண்டாம் என்று பாவனையில் தலை மறுத்தது.


''ஏன்?''

''மூந்தா நாள் அப்பா நீங்கள் தந்த புத்தகத்தைப் பார்த்துவிட்டார். 'ஏது?' என்று கடுமையாகக் கேட்டபோது நடுங்கிப் போனேன். அடுத்த வீட்டுப் புத்தகம் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டேன். அடுத்த வீட்டுப் புத்தகமானாலும் இனி மேல் இங்கே வரக் கூடாதுன்னுட்டார். அவருக்கு என் மேல் சந்தேகம் வந்துவிட்டது.''

''ஓ ! ஸாரி !''

''அப்பா! வந்துடப் போகிறார். கதவை மூடிக்கிறேன்.'' தயவாகக் கேட்பது போல் தழைந்து கேட்டாள் உமா.

என் மனத்துள் சோகம் கவிவது போல் இருந்தது. ''உமா ! ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல முடியுமா ? கீழே நடப்பதை எல்லாம் நானும் பார்த்துக் கொண்டுதான்



அப்பா புதிதாக டேப் ரிகார்டர் வாங்கி வந்திருந்தார். அதை எப்படியும் இயக்கிப் பார்த்து விட வேண்டும் என்று துடித்த பையனிடம் 'தொடக் கூடாது' என்று எச்சரித்தார். அப்பா அந்தண்டை போனதும் பையனுக்கு ஆவல் தாங்கவில்லை. 'டக்' கென்று விசையைத் தட்டினான். உடனே அப்பாவின் குரல் கேட்டது: ''மடையா! இப்போதுதானே தொடாதே என்றேன்?''

பையனைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்த அவர் முன்யோசனையுடன் தம் குரலை டேப்பில் பதிவு செய்திருந்தார்! பையன் அரண்டு விட்டான்.

-ராமு

இருக்கிறேன். அட்டை ரத்தத்தை உறிஞ்சுவது போல் உங்கள் உழைப்பையும், சம்பாத்தியத்தையும் உங்கள் தந்தை உறிஞ்சிக் கொண்டிருப்பதாக உணர்கிறேன். உங்களுக்கெல்லாம் மணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இல்லாதது போலவே உணருகிறேன். உண்மைதானே உமா?''

''மணமா?'' வேதனையோடு அவள் முணுமுணுத்தாள். ''வயது முப்பதாகிற அக்காவுக்கே அதைப் பற்றிப் பேச்செழவில்லை. அந்த மாதிரி இனிமைகளை மனத்தில் கூட நாடாட அனுமதியாதவர் எங்கள் அப்பா. ஐயோ! அவர் வந்து விடுவார். நான் கதவை மூடுகிறேன்.'' தன் மனத்திலிருந்ததை வெளியிட்டு விட்ட பீதியில் அவள் மூடிய கதவுக்குப் பின்னால் தன்னை ஒளித்துக் கொண்டாள்.

என் மனத்தில் உருப் புரியாத குமுறல். புத்தகங்களைப் படிக்கத் தருவதன் மூலம் ஏற்பட்ட ஓர் அறிமுகக் களையை இழந்து விட்ட ஏமாற்றம். ஏதோ விளையாட்டாகப் போட்ட ஓர் அலங்காரப் பந்தல் சின்ன ஆட்டத்திலேயே விழுந்து விட்டது போன்ற தவிப்பு. எங்கே எனக்கும் இவளுக்குமிடையே அன்புப் பரிமாற்றம் நிகழ்ந்து விடுமோ என்று இவள் தந்தை அஞ்சியிருப்பார் போலும்!

மூடிய கதவுக்கு இப்பால் எவ்வளவு நேரம் நின்றேனோ. மாடிப் படிகள் ஏறினேன். இவளோடு நட்பு நீடிக்க வேண்டும் என்று எப்படி எண்ணுகிறேன்? யாருக்குமே மணம் செய்விக்க எண்ணாத அப்பா, சமைத்துப் போட்டுக் கொண்டு, வீட்டைக் கவனித்துக் கொண்டிருக்கும் இவளையா மணம் முடித்துத் தருவார்?

வெளியே இருள் சூழ்ந்துகொண்டு வந்தது. விளக்கைக்கூடப் போட மனம் எழாமல், படுக்கையில் கிடந்தேன்.

''ஸார்!''

''யார்?''

''நான்தான் கீழ்ப் போர்ஷனில் இருக்கிறவன்....''

''ஓ! வாருங்கள்!''

அவர் உள்ளே வந்து உட்கார்ந்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். ''எங்கே வேலை செய்கிறீர்கள்?''

சொன்னேன்.

''எவ்வளவு சம்பளம்?''

சொன்னேன்.

என் சம்பளத்தின் அளவைப் பார்த்து என் கெட்டிக்காரத்தனத்தைத் தம்மால் கணிக்க முடிவதாகப் பெருமையோடு கூறினார். பிறகு இவ்வளவு நாட்களும் என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளாததற்கு வருத்தத்துடன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். தம்மைப் பற்றிய சிறு குறிப்பையும் தந்தார்.

அவர் ஒரு ரிடையர்ட் சூபரின்டென்ட். மனைவி ஏழெட்டு வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டாள். நான்கு பெண்களையும் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார். மூன்று பேர்களை வேலைக்கு அனுப்பிச் சம்பாதிக்கவும் செய்தார்.

''இந்தக் காலத்தில் பெண்கள் வேலைக்குப் போவது சகஜம்தானே?'' என்றேன் நான்.

''என்றாலும் பெண்களுக்கு ஒரு வயிற்றுப் பாட்டுக்கு வழி செய்வதில் மட்டும் வாழ்வு முடிந்துவிடவில்லையே? வாழ்க்கைத் துணைக்கு வகை தேட வேண்டும் அல்லவா? ஒரு மாதிரியாக மூன்று பேருக்கும் வரன் பார்த்து விட்டேன்... நான்கு பேரின் திருமணத்தையும் ஒன்றாக முடித்துவிட முயல்கிறேன்.''

நான் சிரித்தேன். ''அது முடிகிற காரியமா? ஒவ்வொன்றாய் நடத்தி முடிக்க வேண்டியதுதானே?''

''ஒரே செலவாகி விடுமே என்று பார்க்கிறேன்.''

''அது சரி. மற்ற வரன்கள் கைநழுவி விடுவார்களே என்ற பயமில்லையா?'' என்றேன்.

''அந்தப் பயமும் இருக்கு. ஆனால் உமாவும் வேலைக்குப் போறவளானால் பொறுத்துப் பண்ணலாம்னு விட்டுடுவேன்!'' அவர் மேலே பேசுமுன் ''என்னது உமாவுக்கா?'' என்றேன்.

''ஆமாம். என் மூன்றாவது பெண் உமா எட்டாவது வரையில்தான் படித்தாள். அவளுக்குப் படிப்பில் நாட்டம் எழவில்லை. ஆனால் சம்பாதிக்கும் பெண்தான் வேண்டும் என்று கூறும் இந்நாளில் அவளை யாரும் மணக்க ஒப்பவில்லை.''

சற்று நேரம் ஒரு கனமான மௌனம்.

''ஏன் ஸார்! உங்களுக்கு ஆட்சேபனை இல்லை யென்றால்...''

''நிஜமாகவா? நீங்க உமாவை மணக்கச் சம்மதிக்கிறீங்களா?''

''ஆமாம் ஸார்!''

''உங்க அம்மா அப்பா எல்லாம்?...''

''மாமா மட்டும்தான் இருக்கார். நாளைக்கு அழைச்சுக்கிட்டு வரேன்.''

''என்னாலே நம்பவே முடியலே ஸார்! உமாவுக்கு எப்போ வரன் வரும்னு திகைச்சுக்கிட்

மகராசி வாழ்க!...

தியாகி ராமலிங்கத்தின் மூத்த மகள் சீதா; இளையவள் கமலா. காய்கறி விற்றுக் கடுமையாக உழைத்துத் தங்கையை நன்றாய்ப் படிக்க வைத்தாள் சீதா. காலப்போக்கில், சுக போக வாழ்வே சொர்க்கமென நினைத்தாள் கமலா.....

இவ்வளவு தெரிந்தால் போதும். அதற்கு அப்புறம் அது வளர்கிற விதம் ஒரே கோணல் மாணல்.

சீதாவாக வருபவர் கே. ஆர். விஜயா. காய்கறி விற்கும் வேளையில், எல்லாரிடமும் இன்முகம் காட்டிப் புன்னகை புரிந்து பழகும் சீதா, அவளிடம் வாலாட்டும் ஆண் மகனிடம் சீறுவது நல்ல நடிப்பு. பஸ் டிரைவர் ராமு அவளிடம் உள்ளன்போடு பழகியும், அவனிடம் சர்வ ஜாக்கிரதையாகப் பழகியது சீதாவின் பாத்திரத்துக்கு ஏற்றம் தருவது தான்.



எப்படியும் வாழலாம் என்று நினைத்த கமலா, தோழியின் உதவியால் தன் கற்பை இழந்து கம்பெனி முதலாளியிடம் சுகபோக வாழ்வை அடைகிறாள். இதை நாசூக்காகக் காட்டியிருக்கலாம். இங்கே வசனம் வேதனை தருகிறது. இதையெல்லாம் 'சென்஺ஸார்' கவனிக்கமாட்டார்களோ! கற்பைப் பற்றி நிறையப் பேசிவிட்டுக் கமலா கற்பை இழக்க உடனே உடன்படுவது என்னவோ போல் இருக்கிறது.

பாலமுருகன் படத்தின் டைரக்ஷனை ஏற்றுத் திறமையாகச் செய்திருக்கிறார். கதை, வசனம் அவருடையவைதான்.

பஸ் டிரைவர் ராமுவாக வரும் ஜெய்கணேஷ் முதன் முதலாக ஹீரோவாக நடிக்கிறார். திருப்தி.

ஜெயசுதா பலவிதமான கவர்ச்சி உடைகளில் வந்து ஸ்ரீகாந்துடன் ஆட்டம் போடுகிறார். கடைசிக் காட்சியில், தன்னைத் தாயாக்கிய கயவனை வீராவேசமாகக் குத்திக் கொன்றுவிட்டுத் தன்னைப் போலீசில் ஒப்படைத்துக் கொள்ளும்போது அவர் நடிப்பு நன்றாயிருக்கிறது.

அநுபவம் மிக்க சிறந்த நடிகர் சகஸ்ரநாமம். தன்மானம் மிக்க, தன்னலமற்ற தியாகியாக நடிக்க அவருக்குச் சொல்லித் தர வேண்டுமா ?

''மகராசி வாழ்க'' — அசட்டுக் கதை — அருமையான நடிப்பு !

— காந்தன்

டிருந்தேன். ஆனா எங்க உமா எவ்வளவோ குடுத்து வச்சிருக்கணும், உங்களைப் போன்றவரை அடையறதுக்கு...'' கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க அவர் கூறியபோது இத்தனை நாட்களும் தன் நான்கு பெண்களையும் கடுமையாக நடத்தி வந்த தந்தையா இவர் என்று வியப்புற்றேன்.

''ஸார்! ஒரு சந்தேகம் கேட்கலாமா? நீங்கள் ஏன் உங்கள் பெண்களிடம் மிகக் கடுமையாக நடந்து கொள்கிறீர்கள்? பாசம் என்பதை ஒருசிறிதும் காட்டாமல் காசு பணத்தில் மட்டுமே குறியாக இருக்கிற ஒரு 'சுயநலவாதியைப் போல் ஏன் வேஷம் போட்டீர்கள்?''

''வேஷம்தான் மணி அது. வேஷம்தான்! அந்த வேஷம் எனக்குத் தேவைப்பட்டது. என் பெண்களின் வாழ்வு பசுமையாக மலர வேண்டும் என்று விரும்பினேன். வீட்டிலோ அவர்களுக்குத் தாயில்லை. வெளியிலோ ஒழுக்கக்கேடான நாகரிகங்கள். கொஞ்சம் சகஜமாகப் பேசிவிட்டால் அவர்களின் தேவையற்ற உரிமைகளுக்குக் குரல் கொடுப்பார்களோ என்ற அச்சம். நான் சுயநலவாதியாக வேஷமிட்டுக் கடுமையாக நடந்து கொண்டதால், வேறு எதைப் பற்றியும் அவர்கள் நினைக்க இயலாது போயிற்று. நிராசையில் மனம் சோர்ந்தாலும், நியாய வழியில் நடக்கத் துணையாகியது. அதேசமயம் அவர்கள் திருமணங்களுக்குத் தேவையான பணத்தையும் என்னால் சேர்க்க முடிந்தது. உம்! ரொம்ப நேரமாச்சு. வரட்டுமா? நானே உங்கள் மாமாவை அழைத்து வந்து உமாவைப் பாருங்கள்'' என்று எழுந்தார் அவர்.

மறுநாள் உமா என் காதருகே கிசுகிசுத்தாள்: ''உங்கள் கருணையாலும் அப்பாவின் கருணையாலும் கிடைக்கப் போகிறது இல்வாழ்க்கை!''

''தப்பு, தப்பு! அப்பாவின் கடுமையால் கிடைக்கும் இல்வாழ்வு!''

இருவர் சிரிப்பும் இணைந்தன.



ஒரு நாள்: பத்மா சுப்பிரமணியம்

இன்று காலைப்பொழுது அருமையான காப்பியுடன் மலர்கிறது. திருநெல்வேலி நகரில். ஆம், இன்று மாலை இங்கே ஒரு நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகியிருக்கிறது.

டி. வி. எஸ். குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் முயற்சியால் நெல்லை மாவட்டத்திலுள்ள சிவசைலத்தில் செயல்பட்டு வரும் 'செவிட்டு ஊமை'க் குழந்தைகளின் இல்லத்தின் வளர்ச்சிக்கான உதவி நிதி நிகழ்ச்சி.

நான் சமீபத்தில்தான் டான்சில் ஆபரேஷன் செய்து கொண்டிருந்தேன். கொஞ்ச நாட்கள் ஓய்வு வேண்டும் என்று என் தாயார் வற்புறுத்தினார்கள். ஆனால் அந்த ஆபரேஷனைத் தொடர்ந்து பேச முடியாமல் சில நாட்கள் நான் அனுபவித்த வேதனையை நினைத்துப் பார்த்த போது, நிரந்தரமாகப் பேச முடியாமல் தவிக்கும் குழந்தைகளின் முகங்கள் என் மனத்திரையில் நிழலாடின. அவர்களுக்கான உதவி நிகழ்ச்சியை ஒத்திப் போடக் கூடாது என்ற ஆர்வத்துடன் கிளம்பி வந்து விட்டேன்.



சாதாரணமாக நான் சென்னையில் வீட்டில் இருக்கும் நாட்களில் காலையில், நிலைக் கண்ணாடி முன், இசை உதவி ஏதும் இல்லாமல் அபிநயம் பிடித்துப் பழகுவேன். புதிய புதிய அபிநயக் கற்பனைகள் இந்த நேரத்தில் தோன்றும். ஆனால் நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நாட்களில் நான் இந்தச் சாதகத்தைச் செய்வதில்லை. அன்று உடலுக்கும் உள்ளத்துக்கும் அமைதி தேவை.

காப்பி டிபனை முடித்துக் கொண்டு ஏழு, எட்டு மைல் தூரத்திலுள்ள கிருஷ்ணாபுரத்துக்குக் கிளம்புகிறேன். கிருஷ்ணாபுரம் சிற்பங்களைப் பார்க்க எனக்கு வெகு நாட்களாகவே ஆர்வம். இப்போது வாய்ப்பைக் கைவிடுவாவேன்?

காரில் கிருஷ்ணாபுரம் போகும்போது என் நினைவு எங்கேயோ அஸ்ஸாம் பிரதேசத்தில் போய் நிற்கிறது.

என் அப்பா திரு கே. சுப்பிரமணியம் அவர்களும் அன்று இருந்தார்கள். ஒரு நாட்டிய நிகழ்ச்சியை முன்னிட்டுக் காரில் சென்று கொண்டிருந்தோம். காட்டுப் பகுதியைக் கடக்க நேர்ந்தது. வழியில் ஒரு நாடோடிக் கும்பல் காரை நிறுத்தியது. எங்களுக்குக் கிலி, கொள்ளைக் கூட்டத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டோமோ என்று. அப்புறம் என்னடாவென்றால் அவர்கள் என் நாட்டியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு விட்டு நான் ஆடுவதைப் பார்க்க ஆவலோடு வழி மறிப்பவர்கள்' என்பது புரிந்தது. அவர்களை மகிழ்விக்கச் சற்று நேரம் ஆடி விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். இங்கே கிருஷ்ணாபுரத்தைக் கார் அடைந்து விட்டது.

அங்குள்ள சிற்பங்களின் அற்புதப் பாவங்களைப் பார்த்து அதிசயித்து விட்டுப் பிறகு சிவசைலத்துக்குக் கிளம்புகிறோம்.

அங்கே செவிடு ஊமைக் குழந்தைகள் இல்லத்தில் உள்ள சிறுமியர்களைப் பார்த்தவுடன் என் கண்கள் சுரமாகின்றன. ஒரு சிறுமி முகத்தில் புன்சிரிப்புத் தவழ எனக்குச் சில நிமிடங்கள் நடனமாடிக் காண்பிக்கிறாள். ''ஆண்டவனே! இவர்களுக்கு இனிமையான எதிர்காலத்தைக் கொடு'' என்று மனத்துள் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

திருநெல்வேலியிலுள்ள டி. வி. எஸ். விருந்தினர் மாளிகைக்குத் திரும்புகிறோம். இங்குதான் இன்று எங்களுக்குத் தங்க வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாப்பிட்டு முடித்தவுடன் நான் சற்றுத் தனிமையை விரும்புகிறேன். கண்டிப்பாக இரண்டு மணி நேர ஓய்வும் தூக்கமும் எனக்குத் தேவை. இன்றைய நடன நிகழ்ச்சியின் வெற்றிக்கு இப்போது நான் எடுத்துக் கொள்ளும் ஓய்வுதான் நல்ல அஸ்திவாரம்.



காதல் வள்ளி கண்ட முருகன்!

பழைய வள்ளி கல்யாணக் கதைதான் பரத கலாஞ்சலியின் தயாரிப்பில் ''காதல் வள்ளி கண்ட முருக''ஞக மாறியிருக்கிறது.

முருகப் பெருமானின் காதல் மணம் எல்லாரும் அறிந்த கதைதான். முருகப் பெருமானிடம் மிகுந்த நேயம் பூண்ட திரு பெரியசாமித் தூரன் அவர்கள் இத் தெய்விக வரலாற்றைத்* திறங்களைத் தமிழில் நடன நாடகமாக இயற்றி யிருக்கிறார்.

முருகப் பெருமாஞகவும் வேடஞகவும் வரும் வி. பி. தனஞ்செயன் பலவித மெய்ப்பாடுகள் தோன்ற அருமையாக நடித்தார். வேடஞக வந்தபோது வீர தீர பராக்கிரம புருஷஞகத் தோன்றி அரங்கத்தையே அதிரச் செய்தவர், முருகப் பெருமாஞக வந்தபோது சாந்தமும், தெய்விகமும் பொலிந்து தோன்ற நடித்த விதம் பாராட்டுக்குரியது.

இந்நடன நாடகத்தில் தனிச் சிறப்புக்கு உரியவர் ஸ்ரீமதி சாந்தா தனஞ்செயன்தான். வள்ளியின் அருமைத் தோழி சித்ராங்கியாகவும், முதுபெருங் கிழவராகவும் வேடம் ஏற்றுத் தோன்றினர். தோழியின் பாத்திரம் சாதாரணந்தான். ஆனல் கிழவர் வேடம் பிரமாதம்! வயதுக்கு ஏற்ப அவர் அடி எடுத்து வைத்த தளர் நடையின் நயமும் முதுமையில் தளர்ச்சியில் லயசுத்தமாக அவர் நடுங்கின நடுக்கமும் அப்பப்பா! பிரமாதம் போங்கள்! ஸ்ரீமதி அம்பிகா வள்ளியாக வந்து முருகப் பெருமானின் நினைவில் நெகிழ்ந்து அவரைப் பற்றிய கனவில் மகிழ்ந்து விழித்தெழுந்ததும் பிரிவில் வருந்தி, பாவ பூர்வமான அபிநயங்களோடு நன்ருக நடித்தார்.

சுமதி, லலிதா, நீரா, நிருபமா - பெயர்களெல்லாம் எவ்வளவு நன்ருக இருக்கின்றன! பெயர்கள் மட்டும்தாஞ? அந்த மாணவிகள் ஏற்ற பாத்திரங்கள் அப்ஸரஸ்கள் அல்லவா? அழகாயில்லா விட்டால் அந்த வேடத்தைக் கொடுப்பார்களா?

வள்ளியிடம் சரண் புகுந்த மாஞக வந்த மாணவி சோபா, நாரதராக வந்த குமாரி புஷ்கலா ஆகியோர் உற்சாகமாக நடித்தனர்.



நட்டுவாங்கம்: கே. ராஜசேகரன். திருமதிகள் கல்பகம் பாலசுப்பிரமணியம், மதுரா சத்யராஜ் ஆகியவர்களின் இனிமையான பாடல்கள் இந்நடன நாடகத்துக்குக் கிடைத்த பக்கபலம்.

கடைசிக் காட்சியில் முருகப் பெருமான், வள்ளி நாயகியோடு வள்ளி மணாளஞக ஆலயத்தில் தோன்றும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கிறது.

- காந்தன்

அயர்ந்த நித்திரைக்குப் பிறகு கண் விழிக்கும்போது மணி மூன்றை நெருங்கிக் கொண்டிருக்கிறது. முகம் கழுவிக் கொண்டு ஒரு கப் காப்பி சாப்பிடுகிறேன். இப்போது நினைவெல்லாம், மாலை ஏழு மணியை நோக்கிப் போய் விட்டது. இந்த ஊர் ரசிகர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாக வேண்டும் என்ற பயமும் கூடவே வந்து விட்டது.

'கிருஷ்ணுயதுப்யம் நம:' நடன நிகழ்ச்சியை நான் எத்தனையோ தடவைகள் நடத்தியிருக்கிறேன். ஆனலும் ஒவ்வொரு தடவையிலும், அதுதான் முதல் தடவை என்ற பயத்துடனும் பக்தியுடனும் நிகழ்ச்சியை அணுகுவேன். இன்றும் அப்படித்தான்!

அரங்கத்துக்கு வந்தாயிற்று. நடனத்துக்கான ஆடை அணிகலன்களால் என்னை அலங்கரித்துக் கொள்கிறேன். அவ்வப்போது சௌந்தரம் அம்மாள் வந்து உற்சாகப் படுத்திக் கொண்டே யிருக்கிருர்.

இன்று காலையில் சிவசைலத்தில் கண்ட சிறுமிகளின் முகமே எனக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. அவர்கள் நலனுக்காகத் தானே இந் நிகழ்ச்சி!

சில சமயம் இதற்கு நேர்மாருக, உற்சாகத்தைக் கெடுக்கும் காரியங்களும் காலையில் நடந்து விடுவதுண்டு. கிழக்கு ஜெர்மனியில் ஒருசமயம் ஹிட்லர் யூதர்களை அடைத்துக் கொடுமைப்படுத்திய சிறைச்சாலையைப் (Concentration Camp) பார்த்து விட்டு வந்தேன். அவ்வளவுதான்; அன்று மாலை எப்படித்தான் நடனமாடப் போகிறேமோ என்ருகி விட்டது. நல்ல வேளை அன்றைய ஜெர்மானிய ரசிகர்கள் கலையுணர்வு நிரம்பியவர்களாகி விளங்கி ஆரம்பத்திலிருந்தே உற்சாகமாக இருந்தார்கள். நன்ருக ஆடி நற்பெயரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தேன்.


இன்றும் நடன நிகழ்ச்சி நன்ருகவே நடந்து முடிகிறது. ரசிகர்களுக்கும் திருப்தி. எனக்கும் திருப்தி. மணி ஒன்பதரையைத் தாண்டி விடுகிறது. மேக் அப் எல்லாவற்றையும் கலைத்துக் கொண்டு ஜாகைக்குக் கிளம்பத் தயாரான போது மணி பத்தரை.

நிகழ்ச்சி நாட்களில் ஒரு கப் பாலை மட்டும் சாப்பிட்டு விட்டுப் படுத்து விடுவேன். ஆனல் இன்று இந்த வழக்கத்தையும் என்னை இங்கு அழைத்து வந்திருப்பவர்களின் ஆசைக்காக விட்டுக் கொடுக்கிறேன்.

படுக்கப் போகும்போது மணி பதினென்றரை. தூக்கம் வரும் அறிகுறியில்லை. சரியான தூக்கம் இன்று வராது என்று எனக்குத் தெரியும். நிகழ்ச்சி எனக்குத் திருப்தியாக அமைந்து விட்டால், எனக்கு அன்று தூக்கம் வராது. சுமாராக இருந்தது என்று தோன்றிஞல் நன்ருகத் தூங்கி விடுவேன்! இது என் விடமுள்ள விசித்திர சுபாவம்.

புரண்டு புரண்டு படுக்கிறேன்! கடிகாரம் ஓடிக் கொண்டே யிருக்கிறது!

கேட்டு எழுதியவர்: **கோமதி சுவாமிநாதன்**



எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்
பிலிப்ஸ் பல்புகள்
டி எல் லாம்புகள்
ஹேலோஜென் லாம்ப்
பிலிப்ஸ் இந்தியா 45 ஆண்டுகளுக்கும் மேலாக ஒளித்துறையில் புதுப்புது சாதனைகள் புரிந்து கொண்டிருக்கிறது. அதிகத் திறனும் சிக்கனமும் ஒளித்துறையில் எப்போது தேவைப்பட்டாலும் அவற்றுக்கேற்றவாறு புது சாதனைகளைப் புரிவதில் பிலிப்ஸ் முதலிடம் பெற்று வந்துள்ளது.
1938ல் தொடங்கிய இத்துறையில், பிலிப்ஸ், இல்லங்கள், வர்த்தகத்துறை, தொழில்துறை மற்றும் விசேட பணித்துறைகளுக்கேற்ற லாம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் பிலிப்ஸ் மட்டுமே இவ்வளவு நேர்த்தியான லாம்ப் அணிவகுப்புகளை அளிக்கவல்லதாகும்-நாட்டின் முன்னேற்றத்துடன் இணைந்து இப்பணியும் தொடர்ந்து பெருகிக்கொண்டே வருகிறது
இன்ஃப்ரா-ரெட லாம்ப்
காம்ப்டாலக்ஸ் லாம்ப்
போடோகிராஃபிக் லாம்ப்
எம் எல் எல் லாம்ப்
ஹெச்பிஎல லாம்ப்
பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்
PHILIPS
பிலிப்ஸ்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-9364



மட்கா மர்மமும் காட்டன் தர்மமும்!

ஆ. ராஜா

'வாழ்க்கையே ஒரு சூதாட்டம்' என்பார்கள். ஆனால் சூதாட்டத்தையே வாழ்க்கையாகக் கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்நாட்டில் இருக்கிறார்கள். பல ரக சூதாட்டங்களுள் மிக மோசமானது மட்கா. இது காட்டன் சூதாட்டத்தின் 'பேட்டா' (பிள்ளை!)

நியூயார்க் நகரில் பருத்தி மார்க்கெட் ஒன்று இருக்கிறது. அகில உலக ரீதியில் பருத்தியின் விலை தினமும் இந்த மார்க்கெட்டிலே நிர்ணயிக்கப்படும். பேரங்கள் ஒரு விலையில் ஆரம்பிக்கும்; இன்னொரு விலையில் முடியும். இது முழுக்க முழுக்கப் பருத்தி வர்த்தகர்கள் சம்பந்தப்பட்ட சமாசாரம்.

சூதாட்டப் பிரியர்களில் கெட்டிக்காரர்களாகவும் இருந்த சில ஆசாமிகள் ஆரம்ப விலை, முடிவு விலை எண்களை வைத்துக் கொண்டு சூதாட்டம் ஒன்றை வெற்றிகரமாக உருவாக்கினார்கள். அதுவே 'நியூயார்க் காட்டன்' சூதாட்டம்.


இதில் பங்கு கொள்ளப் பிரமாதமான அறிவு ஒன்றும் தேவையில்லை; திறமைக்கும் இதிலே இடம் கிடையாது. பூஜ்யம் முதல் ஒன்பது வரையில் எந்த எண் ஆரம்ப விலையின் கடைசி எண்ணாக வரும் என்று கூற வேண்டும். அதே போல் முடிவு விலையின் கடைசி எண்ணாக எது வரும் என்றும் சொல்லலாம். சொன்னது சரியாக இருந்து விட்டால், கட்டிய தொகையைப் போல் பல மடங்கு பணம் கிடைக்கும். இரண்டு விலைகளிலும் கடைசி எண்ணைச் சரியாகச் சொல்லி விட்டால் எக்கச்சக்கமாகப் பணம்கிடைக்கும்.

வெறும் குருட்டு அதிர்ஷ்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் 'காட்டன்' சூதாட்டம் நம் நாட்டில் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றியிருந்த சமயத்தில், அமெரிக்காவில் பருத்தி மார்க்கெட் ஆட்டம் கண்டது. நியூயார்க் பருத்தி மார்க்கெட்டில் விலைகள் ஸ்தம்பித்து நிற்கத் தொடங்கின. ஒருநாள், இரண்டு நாள் என்று ஆரம்பித்து, வாரக் கணக்கில் விலைகள் ஆப்பு அறைந்தது போல் அப்படியே நின்றன.

பிடித்தது சனியன் 'காட்டன்' சூதாட்டத்தை நடத்தி வந்தவர்களுக்கு. விலைகள் ஸ்தம்பித்ததால் ரொம்பப் பேர் எண்களைச் சரியாக 'ஊகித்து'ச் சொல்லிப் பணம் தட்டிக் கொண்டு போக ஆரம்பித்தார்கள். இந்த நிலைமை நீடித்தால் சூதாட்டத்தை நடத்தி வந்தவர்கள் போண்டியாக வேண்டியதுதான் என்று உறைத்தது. மூளையைக் கசக்கிக் கொண்டார்கள் முதலாளிகள். அதன் விளைவாகப் பிறந்ததுதான் 'மட்கா'.

இது எப்படி நடத்தப்பட்டது?

தினமும் இரவு பதினொன்றரை மணிக்கு ஒரு சீட்டுக் கட்டைக் குலுக்கி, மூன்று சீட்டுகளை எடுப்பார்கள். அப்படி எடுக்கும்போது 3, 2, 4, என்ற எண்ணுள்ள சீட்டுகள் வந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள். அன்றைய ஆரம்ப எண் 9. இதே போல் இன்னொரு முறை சீட்டுக்களைக் குலுக்கி மூன்று சீட்டுகளை எடுத்து, முடிவு எண்ணை நிர்ணயிப்பார்கள். யார் யார் சரியான எண் மீது பணம் கட்டியிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நிறையப் பணம் கிடைக்கும். ஆரம்ப எண்ணுக்கும் முடிவு எண்ணுக்கும் ஒரு ரூபாய்க்கு ரூ. 9.50 கிடைக்கும். ஆரம்பம் முடிவு இரண்டையும் சரியாகச் சொல்லியிருந்



ஒட்டகம் கிட்டத்தட்ட முக்கால் டன் எடை தூக்கும்.
கோபம் வந்தால் அது எல்லோரையும் - தன் எஜமானனைக்கூடக் கடிக்கும்.
ஒட்டகப் பாலிலிருந்து வெண்ணெய் எடுக்கலாம்.
ஒட்டகம் எப்படிப்பட்ட முள் செடியையும் ருசித்துச் சாப்பிடும்.
எப்படிப்பட்ட மோசமான தண்ணீரையும் ரசித்துக் குடிக்கும்.
மீரர் - பாபு

தால் ஒரு ரூபாய்க்கு ரூ. 90 முதல் ரூ. 96 வரை கிடைக்கும்.

இவை தவிர 'பனு' என்ற உட்பிரிவும் மட்காவில் உண்டு. அதாவது மூன்று சீட்டுகளை எடுக்கிறார்களல்லவா? அந்தச் சீட்டின் எண்களை வரிசைக்கிரமமாகச் சொல்லி விட்டால் ஒரு ரூபாய்க்கு ரூ. 150 தட்டிக் கொண்டு போகலாம். 'பனு'விலேயே ஒரே எண் இரண்டு முறை வரும் என்று கூறியிருந்தால் — 3, 4, 3 என்று வருமானால் — ஒரு ரூபாய்க்கு ரூ. 250 கிடைக்கும். மும்முறையும் ஒரே எண் — 3, 3, 3 என்பது போல — வரும் என்று சொல்லியிருந்தால் ஒரு ரூபாய்க்கு ரூ. 800 கொடுப்பார்கள். ஆரம்பம், முடிவு இரண்டுக்குமான ஆறு எண்களையும் வரிசைக் கிரமப்படி சொல்லி விட்டால் ஜாக்பாட் அடிக்கலாம்! ஒரு ரூபாய்க்கு ரூ. 18,000 கிடைக்கும்!

பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்த இந்த மட்கா சூதாட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு, துவக்கத்தில் கல்யாண் என்ற ஆசாமியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கொஞ்ச நாள் வரையில் கல்யாண் யோக்கியமாகத்தான் இருந்தான். ஆனால் சூதாட்ட முதலாளிகள் தினமும் தொடர்ந்து பெருந் தொகைகளைப் பரிசாகக் கொடுக்க நேர்ந்த போது, கொஞ்சம் சந்தேகம் தட்டியது. விழித்துக் கொண்டு விசாரணை செய்து பார்த்ததில், கல்யாண் தன் நண்பர்களுக்கு எண்களை 'லீக்' செய்து அவர்களை விட்டுச் சூதாடச் சொல்லிப் பணம் சம்பாதிக்கிறா[ன்] என்று தெரிய வந்தது. உடனடியாக அவ[னை]த் தூக்கி எறிந்து விட்டு, ரத்தன் என்ற ஆசாமியைப் பிடித்துப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார்கள்.

ரத்தன் சூதாட்டக் கும்பலில் யோக்கியமானவன், நாணயஸ்தன் என்று பெயரெடுத்தவன்.

ரத்தனின் நிர்வாகத்தில் மட்கா காட்டுத் தீப் போலப் பரவியது. பம்பாயில் மட்டுமே இருந்த 'ரத்தன் மட்கா' வெகு வேகமாகக் குஜராத், கோவா, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் என்று தொடங்கி, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் வரையில் ஊடுருவியது. எல்லா மாநிலங்களிலும் ரத்தன் மட்கா ஏஜெண்டுகள் பரவினார்கள். மட்காவில் என்ன எண் வரும் என்று முன்கூட்டியே கூறும் 'டிப்ஸ்'களும் பெருகின. மகாராஷ்டிர மாநிலத்தில் சில பள்ளிச் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து 'பால மட்கா' என்று ஜூனியர் சூதாட்டம் ஒன்றை ஆரம்பித்து நடத்துகிற அளவுக்கு மட்கா சமுதாயத்தில் புரையோடிப் பரவியது.

இத்தனைக்கும் பின்னணியில் இருந்தான் ரத்தன். அவனை ஒரு மர்ம மனிதன் என்று கூடச் சொல்லலாம். யாரும் அவனை எளிதில் பார்த்துப் பேசிவிட முடியாது. ஒரு பத்திரிகையாளர் மிகச் சிரமப்பட்டு அவனைத் தேடிக் கண்டு பிடித்துப் பேட்டி கண்டார்.

''மட்காவினால் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குப் பிழைப்பு நடக்கிறது. இதை நம்பிப் பல மட்டங்களில் பலர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏழை — எளியவர்களுக்குப் பரிசும் கைநிறையக் கிடைக்கிறது. அப்படியிருக்கும் போது என்னால் இதை எப்படி நிறுத்த முடியும்?'' என்று கேட்டான் ரத்தன்.

''நிறுத்தினால் சமுதாயத்துக்கு நல்லதாயிற்றே?'' என்றார் நிருபர்.

''சரி, நிறுத்துகிறேன். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில்!''

''என்ன அது?''

''நான் கடைசியாக நடத்தும் குலுக்கலுக்குப் பிரதமர் இந்திரா காந்தி வர வேண்டும்; வந்திருந்து சீட்டுகளைப் பொறுக்கித் தர வேண்டும் ... அப்படிச் செய்தால் மறுநாளே மட்காவை நிறுத்தி விடுகிறேன்...'' என்றான். நடக்கக் கூடிய காரியமா அது?

அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டவுடன் உள்நாட்டுப் பந்தோபஸ்து பாதுகாப்புச் சட்டத்தின்படி ரத்தன் கைது செய்யப்பட்டான். மட்காவும் நின்றது.

ஆனால் தினசரி மட்காவில் பணம் கட்டிப் பழக்கப்பட்டு விட்டிருந்தவர்களுக்கு வேறு ஏதாவது ஒருவகை சூதாட்டம் வேண்டியிருந்ததே! எனவே, இதற்காகவென்றே மகாராஷ்டிர அரசு தினசரி பரிசுச் சீட்டு முறையை அந்த மாநிலத்தில் புகுத்தியது. எப்படி இருக்கிறது இந்தப் பிராயச்சித்தம்!

இது போதாதா ரத்தன் ஆட்களுக்கு?... தினசரி அரசாங்கப் பரிசுச் சீட்டு குலுக்கலில் ஒரு சீட்டின் எண் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுமல்லவா?... அதன் கடைசி மூன்று ஸ்தானங்களை வைத்து 'நயா மட்கா' என்று புதியதொரு சூதாட்டத்தைத் தொடங்கி விட்டார்கள்.

பார்த்தார்கள் மகாராஷ்டிர போலீசார். 'நிலைமையை இப்படியே நீடிக்க விட்டால் ஆபத்து' என்று கருதி, நயா மட்கா ஆசாமிகளை இரவோடிரவாக வளைத்துச் சிறையில் அடைத்து விட்டார்கள்.

மட்கா ஓய்ந்து விட்டது. நியூயார்க் பருத்தி மார்க்கெட்டில் விலைகள் கொஞ்சம் சீரடைந்திருப்பதால், பழையபடி 'காட்டன்' சூதாட்டம் தலைகாட்டத் தொடங்கியிருக்கிறது பம்பாயில்!

அரசாங்கமே லாட்டரி நடத்தும் போது இதுபோன்ற சூதாட்டங்களைக் கண்டு பிடித்து ஒழிக்க அதற்குத் தார்மீக பலம் இருக்க முடியாது.

குழந்தைகளின் தேக சக்தி விரைவில் செலவாகிவிடும்...



உடனடி சக்தி தருவது க்ளாக்ஸோஸ்-D !



நிமிடங்களில் குழந்தைகளுக்குப் புத்துணர்வூட்டுகிறது க்ளாக்ஸோஸ்-D; எனவே, விளையாடிய பின் படிப்பில் கவனம் செலுத்தப் புதுத் தெம்பு தருகிறது அவர்களுக்கு. குடிநீர், பழச்சாறு ஆகியவற்றிலேயோ, அல்லது அப்படியே தனிப்படவோ சாப்பிடலாம். நிமிடங்களில் ஊக்குவிக்கிறது உங்களை.

க்ளாக்ஸோஸ்-D®
க்ளாக்ஸோ தயாரிப்பு

நிமிடங்களில்
தெம்பூட்டுகிறது
உடம்பிலே

dCP/GL/31 e. Tam.

நாகூர் தர்கா

அப்துல் வஹ்ஹாப்

பாரத ராஷ்டிரபதி திரு அஹமத் இம்மாதம் தென்னகம் விஜயம் செய்கையில் கடலோரமாகவுள்ள நாகப்பட்டின – நாகூர் தர்காவில் தமது தொழுகையை நடத்தப் போகிறார். இச்சந்தர்ப்பத்தில் அந்தத் தர்காவைப் பற்றின ரஸமான கட்டுரையை இங்கே வழங்குகிறோம்.

— ஆசிரியர்

"தக்கபெரி யோனருள் தங்கியே நிற்கின்ற தவராஜ செம்மேருவே..!.." என்று– குணங்குடி மஸ்தான் அவர்கள் பரவசப்பட்டு நாகூர் ஆண்டகையைப் பற்றிப் பாடுகிறார்.

உண்மையான இறைநேசச் செல்வர்கள் காலம், இடம், மொழி ஆகியவற்றைக் கடந்து, தம் ஆத்மீக முத்திரையை மக்கள் வாழ்வில் பதித்து, மனிதப் புனிதராகப் பெயர் பெற்று நிற்பார்கள். அத்தகைய மெய்ஞ்ஞானப் பேரரசர் தான் ஹஸரத் ஸையிது அப்துல் காதிறு ஷாஹுல் ஹமீது ஆண்டகை அவர்கள்.

அலஹாபாத் அருகில் மாணிக்கப்பூர் என்ற இடத்தில் ஹஸன் குத்தூஸ் - பாத்திமா என்ற தம்பதியர்க்குச் செல்வராகப் பிறந்த ஆண்டகை அவர்கள், வடக்கும் – தெற்கும் இணையும் ஆத்மீகப் பாலமாக அமைகிறார்.

சின்னஞ் சிறு வயதிலேயே மெய்ஞ்ஞானத் தேட்டத்தில் ஈடுபட்ட அன்னார், தம் எட்டாம் வயதிலேயே திருக்குர் ஆன் முழுவதையும் மனனம் செய்தார்கள். அதன் பின் பத்தாண்டு காலம் திருமறையின் விளக்கங்களையும், இஸ்லாமியக் கலாஞானங்களையும் கற்று, அவற்றின் படியே தங்களின் புனித வாழ்வை அமைத்துக் கொண்டார்கள்.



தம் பதினெட்டாம் வயதில் ஞானாசிரியர் ஒருவரிடம் ஞான போதம் பெற வேண்டுமென்று குவாலியர் வந்தார்கள். சென்னை–டெல்லி இருப்புப் பாதையில், ஒரு பிரதான 'சந்திப்'பாக விளங்கும் குவாலியரில் அன்று ஸையிது கௌது ஷுத்தாரி என்ற புகழ் மிக்க ஞான தேசிகர் ஒருவர் வாழ்ந்து வந்தார்கள். இப் பெரியார் ''ஞானியார்களின் நாற்றங்கால்'' என்று பெயர் பெற்ற– (ஈரான்) நிஷாப்பூரில் பிறந்து, பின்னர் இந்தியாவுக்கு வந்தவர்கள்; ஷாஹுல் ஹமீது நாயகத்துக்கு நான்கு வயது மூத்தவர்கள். பன்னூலாசிரியராகவும், ஒரு பெரிய -மத்ரஸாவின் – கல்லூரியின் – முதல்வராகவும் இருந்த இப்பெரியவரிடம் பத்தாண்டு காலம் மெய்ஞ்ஞான விளக்கம்பெற்றார்கள் ஷாஹுல் ஹமீது ஆண்டகை. தம் சீடரின் ஆத்மீகப் பரிபக்குவத்தைக் கண்டு அகமகிழ்ந்த அந்த ஞானகுரு, அன்னாருக்கு ''ஜவாஹிருல்-கம்ஸா'' (பஞ்ச ரத்தினம்) என்ற தம் அரிய நூலைக் கொடுத்து, ஆசீர்வதித்து, சீடர்கள் நானூற்று நால்வருடன் மாணிக்கப்பூருக்கு அனுப்பி வைத்தார்கள்.

திருமணம் செய்து கொள்ளாது பிரம்மச் சாரியாகவே இருக்க வேண்டுமென்று ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் தீர்மானித்திருந்தாலும், அதற்காக மனிதர்கள் கண்ணில் படாது எங்கோ மலைப்பொதும்பில் மறைந்திருந்து ஆத்ம விசாரத்தில் ஈடுபட வேண்டுமென்று அவர்கள் எண்ணிடவில்லை. ஏகத்துவத்தையும், இஸ்லாத்தின் இனிய போதனைகளையும் பரப்பிட வேண்டுமென்ற தொலைநோக்கோடு அவர்கள் நெடிய சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார்கள்.

சிந்துப் பெருவெளியில் பல காலம் சுற்றினார்கள். ஈரான், மக்கா, மதீனா, இராக், ஏடன், இலங்கை, பர்மா, மஹல்ல தீவு (*Mal dives*) ஆகிய பிரதேசங்களில் எல்லாம் பயணம் செய்தார்கள். இறுதியாகத் தம் வாழ்க்கையின் பிற்பகுதியில் தென்னகம் வந்தார்கள். பாம்பன், காயல்பட்டணம், மேலப்பாளையம், தென்காசி, நத்தம், வாஞ்சூர், திருச்சி; கூத்தாநல்லூர், திருவாரூர் போன்ற எத்தனையோ ஊர்களுக்குச் சென்று அறப் போதனை செய்தார்கள்.

சாதி மத வேற்றுமையின்றி மக்கள் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். தஞ்சையை அக்காலத்தில் ஆண்டு வந்த அச்சுதப்ப நாயக்கர் என்ற குறுநில மன்னர், ஷாஹுல் ஹமீது

ஆண்டகையின் பிரார்த்தனையால்தான் தம் நோய் நீங்கிற்று என்று உறுதி கொண்டு, நாகூரின் கிழக்குப் பகுதி முழுமையும் அவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்.

இறுதியாகத் தம் நாற்பதாம் வயதில் ஆத்மீகப் பிரச்சாரத்துக்குக் கேந்திரமாக நாகூரையே தேர்ந்தெடுத்தார்கள். பின்னர் இருபத்தி எட்டு ஆண்டுகள் இங்கே தங்கி, மக்களின் அலைமோதும் வாழ்க்கைக் கடலுக்கு அமைதியொளி காட்டும் ஒரு கலங்கரை-விளக்கமாகவே அமைந்தார்கள்.

ஹிஜ்ரி 978-ம் ஆண்டு (கி.பி. 1570-ல்) அவர்கள் இங்கு காலமானதும், அழகிய-சமாதியொன்று அவர்கள் அடங்கப் பெற்ற தலத்தில் எழுப்பப் பட்டது. அன்னார் இறந்த மாதமான ஜமாதுல் ஆகிரில் இங்கு ''கந்தூரி'' என்னும் ஒரு பெருவிழா நடத்தப் பெறுகிறது.

நாகூர் ஆண்டகை அவர்கள் அடங்கியிருக்கும் தர்காவின் அழகிய மனராக்கள் ஐந்தும் எப்படிக் கட்டப்பட்டன என்பதை ''கன்ஸுல் கரமாத்து'' (அற்புதங்களின் கருவூலம்) என்னும் தம் பெருநூலில் சுவை பட விளக்கியிருக்கிறார் மதுரை தமிழ்ச் சங்க வித்வானும், நாகூர் தர்க்காவின் ஆஸ்தானப் புலவராக இருந்தவருமான மகாகவி குலாம் காதிறு நாவலர் அவர்கள்.

பஸ்ஸிலிருந்து இறங்க உதவி செய்தார். இறங்கியதும் அந்தப் பெண் சொன்னது — ''ரொம்ப தாங்க்ஸ் மகனே. சீக்கிரமே உன் தலைக்காயம் குணமாக ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.''

'ஹம்மத்' - பாபு

செஞ்சி நகர அதிகாரி இப்ராஹீம் கான்; நாகை நல்ல சையது மரைக்காயர்; மாலக்கா பீர் நயினார், பரங்கிப்பேட்டை நீதிபதி தாவூது கான் ஆகிய நால்வரும் நான்கு மனராக்கள் கட்டினார்கள்.

நாயக்கர்கள் ஆளுகையிலிருந்த தஞ்சை, பிரதாப் சிங் என்ற மராட்டியரின் கைக்குச் சென்றது. இறைநேசச் செல்வர் நாகூர் ஆண்டகையின் நல்வாசியினால் தான் தமக்கு ஆண் குழந்தை பிறந்தது என்று உறுதி கொண்டு ஐந்தாவது மனராவையும் கட்டி, இளம் கடம்பனூர் என்னும் கிராமத்தையும் பரிசிலாகக் கொடுத்தார் பிரதாப் சிங். இது தான் பெரிய ''மனரா'' என்று விளங்கப் பெறுகிறது.

பிராதப் சிங்கின் புதல்வரான துளசி சிங்கும் தர்காவுக்கென்று ஆளியூர், புலியூர், வெற்றிவாழ்க்கை, நாங்குடி போன்ற பதினைன்கு கிராமங்களை மானியமாக விட்டிருக்கிறார். இதுபற்றி மராட்டிய மொழியில் எழுதப்பெற்ற செப்புப் பட்டயம் ஒன்று ''சிக்கா'' என்ற பெயரில் இன்றும் நாகூர் தர்காவில் இருக்கிறது.

ஹிந்துப் பெருங்குடி மக்களும், முஸ்லிம் சோதரர்களும் குத்புல் அக்தாப் ஷாஹுல் ஹமீது நாயகத்தை ஒருங்கே கண்ணியப் படுத்திய செழுமையான மரபினை இன்றும் நாகூர் தர்காவில் — குறிப்பாக கந்தூரி சமயத்தில் — காண்கிறோம்.

அலஹாபாத் அருகில், பிறந்து தென்னகத்தில் நாகூரில் அடங்கிய இறையருள் பெற்ற இம்மகா மேருவை — மெய்ஞ்ஞானப் பேரொளியை — ஐந்து நூற்றாண்டுகளாகச் சாதிமத பேதமின்றி மக்கள் போற்றி வருகிறார்கள் என்றால், அதுவே ஆத்மீக சக்தியின் ஓர் அற்புதம் அல்லவா?

பம்பாய் திரு எஸ். ஆர். கஸ்தூரி மிகவும் சிரம சாத்தியமான நாடகங்களையே எடுத்துக் கொண்டு அவற்றை ஒரு சாதனையாகவே நடித்துக் காட்டி வருகிறார்; 1941ம் ஆண்டிலிருந்து மாதுங்கா நாடகக் குழு என்று தமக்கென ஒரு குழுவை ஏற்படுத்திக் கொண்டு ''கபீர்தாஸ்'', ''ராஜபக்தி'', ''பூகைலாஸ்'' ''கட்டபொம்மன்'', ''தியாகராஜா'' முதலிய அரும் பெரும் நாடகங்களை அயராது பல முறை நடத்தி ரசிகப் பெரு மக்களின் பெருமதிப்புக்குப் பாத்திரராகியிருக்கிறார்; இத்தனைக்கும் இவர் தொழில் துறையல்லாத அமெச்சூர் நடிகர். முப்பத்தைந்து ஆண்டு காலமாகத் திரு கஸ்தூரி நாடகக் கலைக்குச் செய்து வரும் தொண்டுக்கு நற்சான்றாகத் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின் 'கலை மாமணி' விருதைப் பெற்றிருக்கிறார். இவர் அண்மையில், சென்னை நகரில் ''புரந்தரதாசர்'' நாடகத்தில் பிரமாதமாக நடித்தார்.

திரு கஸ்தூரியின் அதிர்ஷ்டம் இந்த நாடகத்தில் அவருக்கு இரட்டை வேடம் - முதலில் சீனப்பன் என்ற சுமாக் கருமி - இரண்டாவது, அவரே புரந்தரதாஸராக மாறி, பக்திச் சுவை ததும்பப் பல கீர்த்தனங்கள் பகவான் மீது இயற்றுகிறார்.

காசையே கடவுளாக மதித்து, வெறும் பௌதிகத்தில் உழன்ற பாமர சீனப்பன் என்ற வட்டிக் கடைக்காரன் எங்கே? பரம பாவனமான மதுர கீதங்களால் பரந்தாமனை வழிபட்ட புரந்தரதாசர் எங்கே? இரு வேறு இயல்புகள் கொண்ட பாத்திரங்களைத் திரு கஸ்தூரி திறம்பட வகித்தார்.

இந்நாடகத்தில் பாராட்டுக்குரிய சிறப்பான அம்சம் - புரந்தரதாசர் கீர்த்தனங்கள் சிலவற்றைச் சுருதி சுத்தமாக அவர் சொந்தக் குரலில் மேடையில் பாடியதுதான். திரு கஸ்தூரியின் பாடல்களுக்கு, நடிப்பைப் போலவே, ரசிகப் பெருமக்களின் கையொலி அமோகமாகக் கிடைத்தது. - காந்தன்

புரந்தரதாசர் →



கௌரி வேலைக்குப் போகிறாள்..

மயிலை மூர்த்தி

கார்க் கதவின் 'டப்' என்ற சத்தத்தைக் கேட்டு வாசலுக்கு விரைந்தாள் மீனாட்சி. அவள் வாசலை அடைவதற்கும், காரிலிருந்து இறங்கிய கௌரி, வீட்டுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. கௌரியின் வாய் ஏதோ பாட்டு ஒன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

"கௌரி, என்னம்மா இன்றைக்குச் சீக்கிரமாகவே வந்துவிட்டாய்?"

"ஆமாம்மா. இன்னிக்கு ராத்திரி வண்டிக்கு நான் பெங்களூர் போகிறேன். வீட்டுக்குப் போய்விட்டுப் புறப்படுவதற்கு நேரமாயிடும்னு மானேஜர் காரைக் கொடுத்து அனுப்பிவிட்டார். சரியாக எட்டரை மணிக்கு இதே கார் மறுபடியும் வரும். அதற்குள் நான் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு..." — வார்த்தையை முடிக்காமல் தாயாரின் முகத்தையே பார்த்தாள் கௌரி. மீனாட்சி எங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள்.

"அம்மா! என்னுடன் இன்னும் நாலு பேர் பெண்கள் வராம்மா. பெங்களூர் ஆபீஸில் எங்களுக்கு வசதியாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிராஞ்ச் ஆபீஸ் கணக்குகளை நாங்கள் நன்றாகப் பரிசீலனை செய்து, 'ரிப்போர்ட்' பண்ணணும். ஒரே வாரம்தானம்மா...சீக்கிரமா உள்ளே வந்து எனக்கு ஏதாவது ஒரு சமையலைப் பண்ணிச் சாப்பாடு போட்டுவிடு. அதற்குள் நான் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொள்கிறேன். ஆமாம், அப்பா எங்கேம்மா?"

"அப்பா வந்து, பகலில் சாப்பிட்டுவிட்டுப் போனவர்தான். நீ ஊருக்குப் போகிற விஷயம் தெரிஞ்சிருந்தா, ஸ்டேஷனுக்காவது வருவார். உன் சமாசாரம் எல்லாம் திடீர் திடீர் என்றுதானே நடக்கிறது!" — மீனாட்சியின் குரலில் ஓர் அலுப்பு.

ஒரு சிறிய சூட்கேஸில் நான்கே புடவைகள் இன்னும் உபகரணங்கள் எல்லாவற்றையும் அள்ளித் திணித்துக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் சாப்பாடு தயாராகிவிட்டது.

"ஏனம்மா, ஒண்ணுமே பேசமாட்டேங்கறே?" சாப்பிட்டுக் கொண்டே கேட்டாள் கௌரி.

"எனக்கு என்னம்மா பேசத் தெரியும்? நான் அந்தக் காலத்து மனுஷி. நாங்களெல்லாம் நாலு சுவத்துக்குள்ளேதான் உலகம்னு நெனைச்சுண்டு வாழ்ந்து இவ்வளவு வருஷங்களை ஓட்டிவிட்டோம். இப்போ நீங்கள்ளாம் பரந்த இந்த உலகத்தைக் கைக்குள் அடக்கி வெச்சுண்டு, நாளுக்கு ஒரு சட்டம், திட்டம், தீர்மானம் போட்டு, என்னென்னவோ செய்யறேள். ஆனால்..."

வாசலில் கார் ஹாரன் சத்தம் கேட்டது.

"சீக்கிரம் மோரை ஊத்தும்மா"—கௌரி அவசரப்பட்டாள். தம் வீட்டு வாசலில் படகு போன்ற பெரிய கார் ஒன்று நிற்பதைக் கண்ட சங்கரன் தம் நடையை எட்டிப் போட்டு வீட்டை அடைவதற்கும், கார் புறப்படுவதற்கும் சரியாக இருந்தது.

"போயிட்டு வரேம்பா. திடீர்னு ஏற்பாடாச்சு. அம்மா எல்லாத்தையும் விவரமாச் சொல்லுவாள்" — கௌரி கையை அசைத்தாள். ஒரு கணத்தில் நிலைமையை ஊகித்தவர் தாமும் கையை அசைத்து விடை கொடுத்தார் சங்கரன்.

மீனாட்சி பின்தொடர வீட்டுக்குள் நுழைந்தார் சங்கரன்.

"கௌரி எங்கே போறா?"

"ஊருக்குப் போறா. நீங்க கொஞ்சம் சீக்கிரம் வரக் கூடாது? ஸ்டேஷனுக்காவது போயிருக்கலாமே?"

"எனக்கு எப்படித் தெரியும்? அது சரி, எந்த ஊருக்குப் போறா?"

"என்னவோ, எனக்கு எதுவுமே பிடிக்கலே. ஆபீஸ் காரியமா பெங்களூர் போகிறாளாம், கூடவே நாலு பேர் பெண்கள் வராள்னு சொன்னாள். ஆனால் அவளை அழைத்துக் கொண்டு போவதற்கு டிரைவர் மட்டும்தானே இருந்தார்?"

மனைவியை ஏறிட்டுப் பார்த்தார்.

"ஆண்கள்தான் சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படுவார்கள்னு கேள்விப் பட்டிருக்கேன். நீ என்னடான்னா அநாவசியமாக் குழம்பித் தவிக்கறே. வேலைக்குப் போகிற பெண் என்றாலே நாம்தான் அவளுடைய சூழ்நிலையைப் புரிஞ்சுண்டு அனுசரிக்கப் போகத் தெரிஞ்சுக்கணும். இவளை முதலில் வண்டியில் ஏற்றிக் கொண்டு பாக்கிப் பேரை ஒவ்வொருவர் வீட்டிலேயும் போய் அழைச்சுண்டு போகலாம் இல்லையா?"

"உங்களால் எப்படித்தான் மனசை இப்படிச் சமாதானமா வெச்சுக்க முடியறதோ, என் மனசு குமுறுகிறது."

"முப்பது வருஷ அனுபவம். மனத்திலே சமாதானத்தைத் தானே உண்டு பண்ணிவிடும். எங்க ஆபீஸிலே ஒரு பொண்ணு. கல்யாணம் ஆனவ. அவ புருஷனுக்குச் சந்தேகம் ஜாஸ்திபோல் இருக்கு. ஒரு மணிக்கு ஒரு தடவை ஃபோன் பண்ணிண்டே இருப்பான். ஒரு நாளைக்கு ஆறு தடவை. அவள் ஸீட்டிலே இல்லேன்னு சொன்னா அடுத்து பத்து நிமிடத்தில் மற்றொரு ஃபோன். இது இப்படியே வளர்ந்து அப்புறம் குறைய ஆரம்பித்தது. ஆறு, நாலாகி, இரண்டாகி, கடைசியில் நின்றே விட்டது. எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ரொம்ப அக்கறை, அசிரத்

தையில்தான் கொண்டு போய் விடும். பேசாமல் மனசைக் கட்டுப்படுத்திக்கோ.''

தொடர்ந்து சேகரின் வருகை, சாப்பாட்டுக் கடை எல்லாம் முடிந்து அவரவர் தங்கள் வழக்கமான இடத்தைத் தேடிப் படுத்தும், மீனாட்சியின் குமுறல் அடங்கவில்லை.

அந்தக் குடும்பத்தின் வரவு செலவுக் கணக்கு அவள் மனத்திரையில் ஓட ஆரம்பித்தது. அவர் ரிடையர் ஆகி இரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. பென்ஷன் வந்து கொண்டிருந்தது. அடுத்து சேகர்; அம்பத்தூர் தொழிற்சாலை ஒன்றில் பிட்டராக வேலை பார்த்து வந்தான். ஏழு மணி வேலைக்கு விடியற்காலை நாலு மணி ரயில் பிடிக்க வேண்டும். உழைப்புக்கும் ஊதியத்துக்கும் சம்பந்தமில்லாத ஒரு வேலை.

கௌரி புத்திசாலிப் பெண். படிப்பு முடிந்ததும் வேலை கிடைத்து விட்டது. வேலையில் சேர்ந்த இரண்டே வருஷங்களில் பதவி உயர்வு, வேலை மாற்றம் எல்லாம். சுமார் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம். எல்லாம் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால், தொண்டையை ஏதோ ஓர் உணர்வு வந்து அடைப்பதுபோல் கனைத்துக் கொண்டாள்.

''என்ன மீனாட்சி! இன்னும் தூங்கவில்லையா?'' — சங்கரனும் தூங்கவில்லை.

''சேகர் தூங்கிவிட்டானா? பாவம். நாள் முழுதும் மாடு மாதிரி உழைக்கிறான். அவனுக்கு ஒரு வசதி செய்து தர முடியவில்லை.''

''நீ சேகரைப் பற்றித்தான் கவலைப்பட்டுக் கொண்டு இவ்வளவு நேரம் முழிச்சுண்டு இருந்தாயா? நான் என்னவோ நினைத்தேன்.''

''எல்லாம்தான். ஒரு குடும்பம்னு எல்லோரும் உங்களைப் போல் இருக்க முடியுமா? வயசு வந்த பெண் தனியாக இப்படி அடிக்கடி போகிறாள். வீட்டுக்கு நேரம் கழித்து வருகிறாள். நமக்குத் தெரியும், நம் பெண்ணைப் பற்றி. ஆனால், ஊர் வாய் சும்மா இருக்க மாட்டேங்கறதே. விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் தவிக்கிறேன்.''

''மீனாட்சி! மீனாட்சி! மனசைச் சிதற விடாதே! கௌரியைப் பற்றி அவதூறாகப் பேச யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது. அவள் தங்கம்.''

''அது சரி. உங்களுக்கு அவள் தங்கம். ஆனால் வம்பளப்பதற்கு எதுடா கிடைக்கும்னு அலைகிறவாளுக்கு அவ பித்தளை. அன்னிக்குத் தீட்சிதர் வீட்டுக் கோமதி கேட்டாள் :

'ஏன் மாமி, என் பிள்ளைக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுக்கச் சொல்லி உங்க பெண்கிட்டே சொல்லுங்களேன். அவளுக்குத்தான் பல இடங்களிலே செல்வாக்கு அதிகமாக இருக்கிறதாமே?' என்றாள். 'அவளுக்கு யாரைத் தெரியும்? ஏதோ வேலைக்குப் போகிறாளே தவிர, அவளுக்கு உலகமே தெரியாதும்மா'ன்னேன். 'மாமி, உங்க பெண்ணுக்கு உலகம் தெரியாதுன்னு நீங்க நினைச்சிண்டு இருக்கேள்'னு சொல்லிட்டுச் சிரித்தாள்.

''இன்னொரு நாள் ஆடிட்டர் வீட்டுக் கமலாவைக் கோயிலில் பார்த்தேன். பிராகாரத்திலே என்னைப் பார்த்தவள் ஓடி வந்தாள்.



'மாமி! உங்க பெண்ணுக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்னிக்குத் தியேட்டரிலே ஏகக் கூட்டம். டிக்கட் கிடைக்கிறதே சந்தேகமாயிருந்தது. அந்தச் சமயத்திலே ஒரு கார் வந்து நின்றது. உங்க பெண் அதிலே வந்து இறங்கினா. கூட இரண்டு மூனு பேர். எல்லோரும் உள்ளே போகும்போது நான்தான் கௌரியைக் கூப்பிட்டேன். எப்படியாவது நாலு டிக்கட் வாங்கித் தர முடியுமான்னு கேட்டேன். ''அதுக்கென்ன மாமி''ன்னு சொல்லி விட்டு பணத்துடன் உள்ளே போய் அடுத்த ஐந்து நிமிஷத்தில் டிக்கட்டோடு வெளியே வந்துட்டா. உங்க பெண் இல்லேன்னு எனக்கு டிக்கெட் கிடைத்திருக்காது மாமி. நான் அடிக்கடி சொல்வேன். 'எங்க கௌரி சிரித்தால் போதும், உலகமே அவள் காலடியிலே அடிமையாயிடும்'னு. உங்க பெண்ணுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு மாமி'ன்னு சொல்லிவிட்டு அவள் போய் விட்டாள். கமலா போய் ரொம்ப நேரம் ஆகிகூடக் கோமதி ஏன் சிரித்தாள்னு யோசனை பண்ணிண்டே இருந்தேன்.'' வாசல் வராந்தாவில் படுத்திருந்த சேகர் புரண்டு, ஒரு முறை கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு, மறுபடியும் திரும்பிப் படுத்தான்.

''மீனாட்சி, மெதுவாகப் பேசு. உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதே. பெண்கள் வேலைக்குப் போனாலே ஊர் ஆயிரம் சொல்லத்தான் செய்கிறது. அதிலும் போன இடத்தில் செல்வாக்குடன் இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். இல்லே, நானும்தான் கேட்கிறேன். நாலு பேரிடம் சகஜமாக ஒரு பெண் பழகினால், நடத்தை கெட்டவள்னு சொல்றதா?''

''ஐயோ, நான் அப்படிச் சொல்லலேனு!''

''பின்னே என்ன? உன் மனசிலே, கௌரியைப் பற்றி மற்றவங்க பேசறதை வைத்து, சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அந்தச் சந்தேகத்துக்கு எல்லே அதுதானே?''

''இல்லே, நாளைக்குக் கல்யாணம், கார்த்திகைன்னு எல்லாம் நடக்கணுமே. வேலை பார்த்துவிட்டுச் சம்பளம் வாங்கிண்டு வர்றதோடு முடியற பிரச்னை இல்லையே இதுன்னு தான் கவலைப்படறேன். பெரிய இடத்துப் பெண்கள் நாகரிகம்னு சொல்லிண்டு அதற்கு ஒரு வரம்பு அவாளே சிருஷ்டிச்சுக்கலாம். ஆனால் நடுத்தரக் குடும்பங்களில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வரம்பை மீறி ஒரு பெண் நடந்துண்டா, அவளை விட்டு வைக்காதே.''

''புரியறது மீனாட்சி. ஆனால் உன் மனசிலேயும், என் மனசிலேயும் அந்த மாதிரி சந்தேகங்கள் எதுவுமே வளர இடம் கொடுக்கக் கூடாதுன்னுதான் கேட்டுக்கறேன். கவலைப் படாமல் தூங்கு. கௌரி காதிலே இந்த மாதிரி விஷயங்கள் பட்டால் அவள் தாங்கவே மாட்டாள்.''

சேகர் மறு பக்கம் புரண்டு படுத்தான். அவன் மனசிலே உறுத்தி வந்த எண்ணைக் குமுறல்கள், தாயின் வாயிலாக வெளிப்பட்டு, தந்தையின் பதிலில் சமாதானம் அடைந்தன.

இரண்டு நாட்கள் ஓடி விட்டன.

அன்று காலை: சங்கரன் வாசலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். சேகருக்கு விடுமுறை. வெளியே புறப்படுவதற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறான். வாசலில் கார் ஒன்று வந்து நிற்கிறது. வண்டியிலிருந்து இறங்கிய டிரைவர், படியேறி வந்து, ''கௌரி வீடு இதுதானே'' என்று கேட்கிறார். சேகர் தலையை அசைத்ததும், திரும்பிச் சென்று, 'டிக்கி'யைத் திறந்து ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழத்துடன் திரும்புகிறார். கூடவே காரிலிருந்து இறங்கிய பெரிய மனிதர், படியேறி வருகிறார். சேகர் உள்ளேயிருந்து நாற்காலியொன்றைக்கொண்டுவந்துபோடுகிறான்.

''வணக்கம்'' — பற்களில் வெற்றிலைக் காவி தெரிகிறது. சிவந்த கண்கள். பார்வையில் ஒரு பயங்கரம்.

''வந்து, வந்து, கௌரி இல்லீங்களா?''

''அவள் ஆபீஸ் விஷயமாகப் பெங்களூர் போயிருக்கிறாள்.''

''ஆபீஸ் விஷயம், பெங்களூர் — பேஷ், நான்கூட ஆபீஸிலிருந்துதான் வரேன். மானேஜரும் நாலு நாட்களாக லீவுன்னு கேள்விப்பட்டேன். ஆனால் அங்கே எல்லாரும் சொன்னாங்க.....''

''நீங்க வந்த விஷயத்தைச் சொல்லவில்லையே!''

''அதைச் சொல்லத்தானே வரேன். அந்தக் கம்பெனி காண்ட்ராக்ட் ஒண்ணு. டெண்டர் போட்டிருக்காங்க. அது விஷயமா மானேஜரைப் பார்த்துப் பேசலாம்னு வந்தேன். மானேஜர் அறை வாசல்லே உட்கார்ந்திருந்தேன். அங்கே வந்த பியூன், நான் வந்த விஷயத்தைப் புரிஞ்சுகிட்டுச் சொன்னாரு: 'சார்! இந்த ஆபீஸிலே உங்களுக்கு ஏதாவது சாதகமாக ஆகணும்னா அந்த அம்மாளைப் பிடிங்க. அவங்க சொன்னா, அவரு மறுக்க மாட்டார். அம்மாவுக்கு அவ்வளவு 'வாய்ஸ்' இந்த ஆபீஸிலே. யாரை வேணுமானாலும் கேட்டுப் பாருங்க'ன்னுட்டு விலாசம் கொடுத்தார். வந்துட்டேன். நீங்கதான் உங்க பெண்ணும், மானேஜரும் பெங்களூரிலிருந்து திரும்பினதும், நான் வந்த விஷயத்தைக் காதிலே போட்டு, இந்தக் காண்ட்ராக்டை முடித்துக் கொடுக்க வேண்டும். ம். மறந்துவிட்டேனே. என்னைப் பற்றி விவரம் இந்த விசிட்டிங் கார்டிலே இருக்கு'' என்றவர், ஒரு கவரை நீட்டுகிறார்.

சங்கரின் உடல் பதற ஆரம்பித்தது. வாயிலிருந்து வார்த்தைகள் வெளி வர மறுத்தன.

''எடுத்துக்குங்க சார். உங்ககிட்டே கொடுத்தால் உங்கள் மகளிடம் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.'' கவரில் பத்து ரூபாய் நோட்டுக் கற்றை ஒன்று வெளியே தலையை நீட்டிக் கொண்டிருந்தது.


''மிஸ்டர்! உங்க கவரை எடுத்துக்கிட்டு, இந்தக் கூடையையும் தூக்கிக்கிட்டு உடனே



உலகத்திலேயே மிகவும் விரும்பப்படும் சொற்றொடர்கள்:

''நான் உன்னைக் காதலிக்கிறேன்.'' — ''சாப்பாடு ரெடி!'' — ''நடந்ததை யெல்லாம் மறந்துவிட்டேன்.'' — ''நன்றாக மத்தியானம் வரை தூங்குங்கள்.'' — ''பரவாயில்லே; மிச்சத்தை நீயே வைத்துக்கொள்'' — ''எள்ளை இளைத்து விட்டீர்களே!''

- ரீபோர்ட் வொர்த்-ஸ்டார்-டெலிகிராம் - முத்து



ஏஜண்டுகள் : G. I. மீர்பூரி, 137, பீமசேனு கார்டன் தெரு, மயிலாப்பூர், சென்னை-4
Km. பரமசிவன், 108, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை-1





கிளம்புங்க. ம், சீக்கிரம், தயவுபண்ணிக் கிளம்புங்க, சார்.'' — சேகரின் குரலில் கடுமை இருந்தது.

''என்ன தம்பி, நீ அந்தப் பொண்ணோட அண்ணனா, தம்பியா? ம். அவங்க சொல்றதிலே தப்பு எதுவும் இல்லே. இந்த மாதிரி குடும்பங்களிலே ரோசத்துக்கு மட்டும் குறைவே இருக்காது. பெரியவரு நாலும் தெரிஞ்சவரு. அவரைக் குழப்பாதே. நான் வரேன் சார், கவனிச்சுக்குங்க.''

டிரைவர் பின்தொடர, காரில் ஏறி அமர்ந்தார் வந்தவர். சேகருக்கு ஆவேசமே வந்துவிட்டது. தன் தந்தையின் கையிலிருந்த கவரை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கூடையில் போட்டு, கூடையை எடுத்துக் கொண்டு காரை நோக்கி ஓடினான். அருகில் சென்றவன் முன்புற ஜன்னல் வழியாகக் கூடையையும் கவரையும் பெரியவர் மடியின் மீது போட்டு விட்டான். பழங்கள் உருண்டோடிப் பெரியவரின் கால் அடியில் பரவின. பெரியவர் உறுமினார்.

''வயசு வந்த பொண்ணு. 'வாய்ஸ்' இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான் இருக்கும். அதைப் புரிஞ்சுக்கிட்டீங்கன்னா நல்லது.''

'' சரிதான், போய்யா !'' — வண்டி பார்வையிலிருந்து மறைந்துவிட்டது.

இடையே நான்கு நாட்கள் ஓடி விட்டன.

அன்று காலை; வீட்டு வாசலில் வந்து நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கிய தன் மகள் கௌரியை வியப்புடன் வரவேற்றார் சங்கரன்.

''கௌரி, வாம்மா, போன காரியம் எல்லாம் சௌகரியமாக முடிந்ததா ?''

''முடிஞ்சுதுப்பா!'' — கைப் பையைத் திறந்து டாக்ஸிக் கட்டணத்தைக் கொடுத்து விட்டு சூட்கேஸை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள் கௌரி.

''அம்மா எங்கேப்பா ?''

''அவளுக்கு இரண்டு நாட்களாக உடம்பு சரியில்லே. உள்ளே படுத்துக் கொண்டு இருக்கா. சேகர் நாலு மணிக்கே டூட்டிக்குப் போயிட்டான். சீக்கிரம் முகம் கழுவிண்டு காப்பி சாப்பிட வாம்மா, அதற்குள் நான் தயார் பண்ணறேன்.''


''வேண்டாம்பா, இதோ நானே போய் ஒரு நொடியிலே போட்டுண்டு வரேன். அம்மா, உன் உடம்புக்கு என்னம்மா?''

''ஒண்ணுமில்லேம்மா. இரண்டு நாட்களாகக் குளிர் ஜுரம் மாதிரி வந்திருக்கு. சரியாப் போயிடும். நீ சீக்கிரம் ரெடி பண்ணிக்கோ. சீக்கிரம் சமையல் ஆகணும். நீ.... இன்னிக்கு ஆபீஸ் போகணும், இல்லையா ?''

''வேண்டாம்மா. இனி மேல் எங்கேயும் போக வேண்டாம்.''

''கௌரி !''

''ஆமாம்மா, நான் ஊரிலேயே தீர்மானம் பண்ணி, ராஜிநாமா கடிதத்தைத் தபாலில் அனுப்பிவிட்டுத்தான் வரேன். எனக்குத் திடீர்னு கல்யாணம் நிச்சயமாயிடுத்துன்னு பொய் சொல்லியிருக்கேன். யாராவது வந்து கேட்டால் ஆமாம்னு சொல்லிடுங்கோ. அதுக்காக இந்த க்ஷணமே ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கச் சொல்லலே. ஒரு பேச்சுக்குச் சொன்னேன்.



மனிதன் எதை எதையோ கற்றுக் கொண்டிருக்கிறான்; சேர்ந்து வாழக் கற்றுக்கொள்ளவில்லை. மனிதனால் மிக அற்பமானது என்று கருதப்படுகிற தேங்காய் நார் தூசியானது சேர்ந்து வாழக் கற்றுக் கொண்டு பல தூசிகள் சேர்ந்து இழைகளாகி மூன்று இழைகள் சேர்ந்து கயிறாகி, அது மூன்று சேர்ந்து பந்தல் கயிறாகி, அது மூன்று சேர்ந்து நீர் இறைக்கும் வால் கயிறாகி, அது மூன்று சேர்ந்து தேர் இழுக்கும் வடக் கயிறாகி, தானே தேங்காயை உடைக்கும் அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது. மிக அற்பமான தூசியினிடத்திலிருந்து சேர்ந்து வாழும் அறிவை மனிதன் பெறுவானா? பெற்றால் அவன் வாழ்வு சிறக்காதா?

அறிவுக்கு விருந்து என்ற நூலில்
கி. ஆ. பெ. விசுவநாதன் - ராமு


◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''அப்பா! பேப்பர்லே படிச்சிட்டு அடிக்கடி விமர்சனம் பண்ணுவேளே, இது பெண்கள் ஆண்டும்மா. ஆண்களுக்குச் சரி நிகர் சமானமா அவாளுக்குப் பொறுப்புக்களையோ, ஊதியத்தையோ கொடுக்கணும்னு, சட்டப்படி தண்டனை கிடைக்கும்னு. அது ஏட்டளவிலேதான்ப்பா ஒத்து வரும். அபவாதம்ங்கிறதுதான் ஒரு பெண்ணைத் துரத்திண்டே வர்றது. கல்யாணமான ஒரு பெண், குடும்பக் கஷ்டத்தினால் வேலைக்குப் போனால், இந்த உலகமே, அவள் கணவன் உள்பட, அவளைச் சந்தேகக் கண்ணோடு பார்த்து, அவளுடைய ஒவ்வொரு செய்கையையும் விமர்சனம் செய்கிறார்கள். கொஞ்சம் நிதானம் தவறினால் அவள் கதி அதோகதிதான். என் போன்ற, திருமணமாகாத பெண்கள் நிலை இன்னும் மோசம். ஒருவரிடமும் பேசாமல், தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருப்பவர்களுக்கும் பட்டம் கட்டுவார்கள். அதைத் தவிர்க்க எல்லோரிடமும் சகஜமாகப் பேசிப் பழகினாலும், விபரீதம்தான். இருக்கிற சேமிப்பை வைத்துக் கொண்டு கல்யாணச் சந்தையில் என்னை விலை பேசி விடுங்கள் அப்பா. அது ஒன்றுதான் இதற்கெல்லாம் முடிவு. இன்று இல்லாவிட்டாலும், இன்னும் நான்கைந்து வருஷங்கள் கழித்தும் அதுவேதான் முடிவாக இருக்கும். அதுவரையில் இந்த வீட்டு நிழலை விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். இது சத்தியம்.''

சங்கரனும் மீனாட்சியும் வாய் அடைத்து நின்றனர்.

கௌரி எதனால் இந்த முடிவுக்கு வந்தாள் என்பது அவர்களுக்கே புரியவில்லை. ஆனால், சம்பவம் நடந்த அன்றே சேகர், நடந்தது எல்லாவற்றையும் விவரித்து, அதற்கு முந்தா நாள் இரவு நடந்த சம்பாஷணையையும் குறிப்பிட்டு, கௌரியின் பெங்களூர் விலாசத்துக்கு எழுதிய கடிதம், அவள் கைப் பையில் இருப்பது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது!

முதன்முதலில் ஸ்டீல் வார்ட்ரோப்



U G14B/67 TAM

தயாரித்தளித்தது கோத்ரெஜ்

இன்றும் மிகச்சிறந்தவை கோத்ரெஜ் தயாரிப்பே!

- வழக்கமான ஸ்டோர்வெல்லை-விட கூடுதலான அகலம் மற்றும் உள் அகலம், எனவே கூடுதல் இடவசதி. ஆகவே ஆடைகள் மடிப்பு குலையாது.
- அட்ஜஸ்ட் செய்யக் கூடிய ஷெல்ப்புகள்.
- லாக்கருக்குக் கீழே (நீங்கள் விரும்பினல்) இன்னுமோர் துணி தொங்கவிடும் ராட்.
- முழு உருவம் காட்டும் ஆள் உயரக் கண்ணடி. (நீங்கள் விரும்பினல்)
- கூடுதல் பாதுகாப்பிற்கு இறுக மூடும் லாக்கர்.
- கதவிற்கு உள்ளே, மேலும் கீழும் இன்டர் லாக் செய்து கொள்ள மும்முனை போல்ட்டிங் அமைப்பு.
- வெளிக்குத் தெரியாத கீல்கள்.
- லாக்கரிலும் கதவிலும் மாற்றுச் சாவியால் திறக்க முடியாத கோத்ரெஜ் பூட்டுகள்.
- நீடித்து நிற்கும், துருப்பிடிக்காத, பளபளப்பு மங்காத மூன்று வண்ணங்கள்

அத்துடன் ஈடிணையற்ற கோத்ரெஜ் தரச் சிறப்பு.

Godrej

உன்னதமான தயாரிப்புகளுக்கு ஒப்பற்றது— கோத்ரெஜ்



ஃபோட்டோ பேஜ்

ஆயிரம்
சூரியர்
சூழ......

படம்:
ஏ. சுப்பிரமணியம்

Printed and published by V. Vaidyanathan on behalf of M/s. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras - 600 031.
Managing Editor: T.Sadasivam
Associate Editor: K. Rajendran

பெரும்பாலான குழந்தைகள் எதையும் செய்யும் ரெக்ஸ் ஜெல்லி தந்தால்!










OBM-5472 TM



தயாரிப்பது எளிது. தேவையில்லை பாலும் சர்க்கரையும்.
500 மி.லி. (½ லிட்டர்) நீரைக் கொதிக்க விடுங்கள். அதில் ஒரு பேக்கெட் ரெக்ஸ் ஜெல்லி படிகங்களைப் போட்டுக் கிளறுங்கள். பாலும் சர்க்கரையும் தேவையில்லை. குளிர விடுங்கள். பின்னர் அதை ரெஃப்ரிஜிரேட்டரிலோ அல்லது பனிக்கட்டியிலோ வைத்துப் படிய விடுங்கள். நன்றாகப் படிந்ததும், எடுத்துப் பரிமாறுங்கள். அப்படியே அல்லது பழம், கஸ்டர்டு, கேக், எதுவுடன். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால், ஜெல்லி படிகங்களிலேயே **மிகச் சிறந்தவை ரெக்ஸ்** ஜெல்லி படிகங்கள். ஒரு பேக்கெட் வீட்டில் இருக்கட்டும்...எப்போதுமே!

ரெக்ஸ்
ஜெல்லி படிகங்கள்

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.
(இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்,
எச். சோமானி மார்க்,
பம்பாய் 400 001.


இதம் கனிந்த கோடை வாசமாம்,
இந்தியப் பெருமை பேசுமாம்,
தங்கத்தில் தகதக ஒளிவிடுமாம்,
குங்குமம் பூசுமாம் சிவந்த ரோஜா,
சிங்காரச் சேலையாம் டெரிகோஸா
கட்டாவ்
டெரிகோஸா சேலைகள்